Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.
30°C 28°C

பக்கம் 26 | சுடர்: 28 | கதிர்: 193 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 24, வெள்ளி 07.06.2013

## இந்திய மீனவர் 49 பேர் கைது

யாழ்ப்பாணம்,ஜூன் 07
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடற்படையினரால் மன்னார், நெடுந்தீவுக் கடற்பரப்புகளில் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 49 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன.
இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து கடற் தொழிலில் ஈடுபட்டதாக

தொடர்ச்சி: பக்கம் 24

# அமைதியான வழியில் தீர்வு காணத் தவறின்...

## அரசை எச்சரிக்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜூன் 7
இந்த அரசு இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணத் தவறினால், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை தீர்மானிக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த காலங்களில் ஆட்



சிக்கு வந்த அரசுகள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்க்காமல், உரிமையை வழங்காமல் இன ஒடுக்குமுறைக்கு இட்டுச் சென்றதுதான் தமிழீழ விடுதலைப் புலிகள் தோன்றுவதற்கு காரணமாகியது.

தொடர்ச்சி: பக்கம் 24

**இந்தியன்**



பக். 06
கடிதம் எழுதினால் மட்டும் போதுமா?

**உலகம்**



பக். 07
'டிரோன்' தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்

**விளையாட்டு**



பக். 22
'வன்னியின் பெரும் போர்' இன்று ஆரம்பமாகிறது

# மாகாணசபை சட்டவரைவு எதிர்ப்பினால் ஒத்திவைப்பு

## அமைச்சரவையில் நீதியமைச்சர் ஹக்கீம் போர்க்கொடி

கொழும்பு, ஜூன் 7
13ஆவது திருத்தச்சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு முன்னோடியாக மாகாணசபைகள் திருத்த உத்தேச (விசேட ஏற்பாடுகள்) சட்டவரைவு கொண்டுவரப்படுவதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் கடுமையாக எதிர்த்ததையடுத்து, அதனை அடுத்தவார அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.
அமைச்சரவைக் கூட்டம் நேற்றுக்காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.
நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் மற்றும் அந்தத் திருத்தத்தில் மாற்றங்களைச் செய்யும் முன்னோடியாகக் கொண்டுவரப்படும் அவசர சட்டவரைவு என்பவற்றை ஆராயவிருந்த காரணத்தால் இந்த அமைச்சரவைக்



கூட்டத்தில் அனைத்து அமைச்சர்களும் கலந்துகொண்டனர்.
13ஆவது அரசமைப்புத் திருத்தத்திலுள்ள இரண்டு விடயங்களை மாற்றுவது தொடர்பிலான உத்தேச சட்டவரைவை அமைச்சரவையில் சமர்ப்பித்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை வலுப்படுத்தும் வகையிலேயே மாகாணசபை

தொடர்ச்சி: பக்கம் 24

## பா.ஜ.க. குழு நல்லூருக்கு



யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாணத்துக்கு இருநாள் பயணமாக வருகை தந்த பாரதீய ஜனதாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுக் காலை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கும் யாழ். பொது நூலகத்துக்கும் சென்றனர்.
யாழ். மாவட்டத்துக்கு இருநாள் பயணமாக பாரதீய ஜனதாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான 6 பேர் கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் வருகை தந்தனர்.
நேற்றுமுன்தினம் சிவில் சமூகத்தினர் மற்றும் வடமாகாண ஆளுநரைச் சந்தித்த இந்தக் குழுவினர் நேற்றுக் காலை 8 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்றனர்.
அங்கு இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர், யாழ். பொதுநூலகத்தையும்சென்று பார்வையிட்டனர்.
இதன் பின்னர் யாழ்ப்பாண பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று மதியமே அவர்கள் கொழும்புக்குத் திரும்பினர். (த-5)

# வடக்குத் தேர்தலில் வெற்றிபெற வாக்குத் திரட்டும் முயற்சியில் அரசு

## 'அவசர திருத்தம்' அத்றகாகவே என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 7
பிரபாகரனுடனான போர் முடிவடைந்துள்ள நிலையில், மற்றுமொரு போரை அரசு தோற்றுவிக்கப்பார்க்கின்றதா என நேற்று சபையில் கேள்வி எழுப்பிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா, வடக்குத் தேர்தலில் வெற்றிபெறுவதற்குத் தேவையான வாக்குகளைத் திரட்டவே வாக்காளர் பட்டியலில் அவசர திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் சுட்

தொடர்ச்சி: பக்கம் 24

# இலங்கையிடம் பொறுப்புக் கூறலை வலியுறுத்தியவர் ஐ.நா.தூதராவார்

யாழ்ப்பாணம், ஜூன் 7
இலங்கை தொடர்பாக அமெரிக்கா தொடர்ச்சியாகக் கடும் போக்கை கடைப்பிடித்துவரும் நிலையில், இலங்கைக்கு இப்போது மேலும் ஒரு தலைவலி

தொடர்ச்சி: பக்கம் 24



# கடந்த கசப்பான வரலாற்றுக்குள் மீண்டும் நுழைய எத்தனிக்காதீர்

## அரசிடம் கூறுகிறார் மன்னார் ஆயர்

மன்னார், ஜூன் 7
தமிழர்களின் இருப்பை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அரசு கடந்த கால வரலாற்றுக்குள் மீண்



டும் செல்ல எத்தனிக்கக் கூடாதென்று மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப் ஆண்டகை எச்சரித்துள்ளார்.

தொடர்ச்சி: பக்கம் 24

# அத்துமீறி குடியேறிய சிங்களவரும் வாக்காளராகப் பதிய விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஜூன் 7
நாவற்குழியில் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்கள மக்கள் 2013 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் தம்மைப் பதிவு செய்யுமாறு கிராம சேவையாளர்கள் ஊடாக விண்ணப்பித்துள்ளனர்.
நாவற்குழியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து சிங்கள மக்கள் அடாத்தாக குடியேறியுள்ளனர்.
இவர்கள் இந்த ஆண்டு ஆரம்பத்தில் தாங்கள் தங்கியுள்ள காணிகளில் சட்ட விரோதமாக நிரந்தர வீடுகள் அமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.
2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டி

தொடர்ச்சி: பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## திறந்து வைக்கப்பட்ட வாகன புகை பரிசோதனை நிலையம்



யாழ்ப்பாணம், ஜூன் 7

வாகனப் புகைப் பரிசோதனை நிலையம் ஒன்று கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'இகோடெஸ்ட்' நிறுவனத்தால் குறித்த நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் மூலம் நடமாடும் நிலையங்கள் பல யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பரிசோதனைக் கட்டணம் அனைத்தும் அரசால் தீர்மானிக்கப்பட்டதாக நிறுவன முகாமையாளர் எஸ்.சத்தியதேவன் தெரிவித்துள்ளார்.

மோட்டர் சைக்கிள்களுக்கு 415 ரூபா, மோட்டார்கார் 1,110ரூபா, ஓட்டோ 505 ரூபா, மோட்டார் லொறி-1,560 ரூபா, லாண்ட் வாகனம்-505 ரூபா, முறையே அறவிடப்படுகின்றது. (வ-ரி)

# தமிழ் வர்த்தகர் கொலையில் பொலிஸாருக்கும் தொடர்பு

## 3 பொலிஸார் உட்பட ஐவர் கைது

கொழும்பு,ஜூன் 7

பம்பலப்பிட்டியில் வைத்து வர்த்தகர் ஒருவர் கொலைச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் மூவர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றப்புலனாய்வு பிரிவினராலேயே இவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் சிவிலியன்கள் என்றும் ஒருவர் சப்-இன்ஸ்பெக்டர் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. சிவிலியன்கள் இருவரும் பெண்கள் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொம்பே பகுதியில் வைத்து கடந்த 22 ஆம் திகதி கடத்தப்பட்ட வர்த்தகர் பம்பலப்பிட்டிப் பகுதியில் வைத்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (த)

## டி.ஐ.ஜி யிடம் சி.ஐ.டி விசாரணை

கொழும்பு, ஜூன் 7

கொழும்பு வடக்கு பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தனவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பம்பலப்பிட்டியில், வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே அவர், குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(த)

## பொலிஸாருக்கு நீதிவான் எச்சரிக்கை

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த யாசகரை விடுவிக்குமாறு உத்தரவிட்ட மேலதிக நீதிவான், அப்பாவிகளை விட்டுவிட்டு, குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

குற்றவாளிகளைக் கைது செய்யாமல் அப்பாவி யாசகரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவது ஏனென்றும் நீதிவான் பொலிஸாரிடம் வினவினார்.

மாளிகாகந்த மேலதிக நீதிவான் ரஞ்சன கொடக்கவலவே பொரளைப் பொலிஸாரிடம் மேற்கண்டவாறு நேற்று வியாழக்கிழமை வினவினார்.

பிரசித்தமான இடங்களில் பிச்சையெடுத்து நாளொன்றுக்கு 15ஆயிரம்ரூபாசம்பாதிப்பதாகக் கடவத்தையைச் சேர்ந்த பிரேமலால் என்பவரைப் பொலிஸார்நீதிமன்றத்தில்முன்னிலைப் படுத்தியபோதே நீதிவான், பொலிஸாருக்கு மேற்கண்ட வாறு அறிவுரை வழங்கியது டன் யாசகரையும் விடுவித்தார். (த)

# இலங்கை-சீனா விவகாரத்தில் இந்தியா ஒதுங்கிக்கொள்ளட்டும்

## அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 7

சீன - இலங்கை உறவு விவகாரத்தில் இந்தியா ஒதுங்கி நிற்க வேண்டும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை - சீன உறவுகள் வலுப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது இந்தியாவுக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுவது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காஸ்மீர் விவகாரத்தில் இந்தியாவுடன் இலங்கை எவ்வாறு தலையிடாமல் இருக்கிறதோ, அதேபோன்று, சீனாவுடனான எமது உறவுகள் விவகாரத்திலும் இந்தியா தலையிடக் கூடாது.

உண்மையில் சீனாவுடன் இந்தியா மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக உள்ளது.

இரு நாடுகளும் தமக்கிடையான பிரச்சினைகளை சுதந்திரமாக தீர்த்துக் கொள்ள வேண்டும். ஏனைய நாடுகள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான போர் வலயமாக இலங்கையைப் பயன்படுத்திக் கொள்ள எம்மால் அனுமதிக்க முடியாது.

1962ஆம் ஆண்டு சீன - இந்தியப் போரின் போது, இலங்கை, பர்மா, கானா, கம்போடியா, எகிப்து, இந்தோனேசியா ஆகிய அணிசேரா நாடுகளின் கூட்டத்தைக் கூட்டி, அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினையைத் தீர்த்து வைத்தார். அப்போது சிறிமாவோ பண்டாரநாயக்க நடவடிக்கை எடுக்காமல் போயிருந்தால் இந்தியாவின் ஒரு




பகுதி அப்போதே சீனாவின் கட்டுப்பாட்டில் சென்றிருக்கும்.

உலகம் முழுவதிலும் உள்ள அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் பொருளாதாரங்களில் சீனா முக்கியமான பங்கை வகிக்கிறது. உலகின் 60 சதவீதமான முதலீட்டு நிதியும், மூலதன வளங்களும் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளன.

நாம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும், அது தான் உண்மை. இது ஒன்றும் பாதுகாப்பு சார்ந்த பிரச்சினையல்ல-என்றார். (த)

## கடற்றொழிலாளரின் காணிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு

### சுழிபுரம் பிரதேச வாசிகள் முறைப்பாடு



யாழ்ப்பாணம், ஜூன் 7

சுழிபுரம், சவுக்கடிப் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர் குடும்பங்களுக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமான மணல் அகழப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சுழிபுரம் சவுக்கடிப் பகுதியில் அமைந்துள்ள சுழிபுரம் மேற்கு கடற்றொழிலாளர்களுக்குச் சொந்தமான சுமார் 300 பரப்புக் காணியிலேயே இந்த மண் அகழ்வு இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் 10 முதல் 15 உழவு இயந்திரங்களில் வரும் கடற்படையினர் மண் அகழ்ந்து சென்று சம்பில் துறையில் புதிதாக அமைத்துவரும் விகாரைகளின் கட்டடப் பணிகளுக்குப் பயன்படுத்துகின்றனர் என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடற்படையினரின் இந்த மண் அகழ்வால் அந்தப் பகுதியில் பெரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளதாகவும் அதனுள் கடல்நீர் உட்புகுவதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மணல் அகழ்வு மேற்கொள்ளப்படும் இடத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் கடற்கரை காணப்படுவதால் காலப்போக்கில் கடல்நீர் குடிமனைகளுக்குள் புகக் கூடிய சூழ்நிலை காணப்படுவதாகவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதில் தலையிட்டு சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்த வேண்டும் என அந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-400)

# ஆஸி. செல்ல முயன்ற 14 இலங்கையர் கைது

## கொச்சிப் பொலிஸார் அதிரடி

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் தப்பிச் செல்லத் தயார் நிலையில் இருந்த 14 இலங்கை அகதிகள் ஏர்னாகுளம் பகுதியில் வைத்துக் கொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏர்னாகுளம் பஸ் நிலையத்துக்கு அருகில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டின் பல அகதிகள் முகாம்களில் இருந்து இவர்கள் கொச்சி சென்றுள்ளனர்.

ஜுட் சுசந்த் (வயது-22), ராஜீவ் (வயது-19), கதிர்வேல் (வயது-26), வினோத் குமார் (வயது-19), தமிழ்செல்வன் (வயது-27), புவனேஸ்வர் (வயது-21), குணசேகரன் (வயது-40), பாஸ்கரன் (வயது-37), முருகையன் (வயது-34), பஞ்சேஸ்வரன் (வயது-29), நித்தியகுமார் (வயது-19), விநீத்குமார் (வயது-19), தீபன் (வயது-21), முத்துலிங்கம் (வயது-41) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ள இலங்கை அகதிகள் ஆவர்.

கொச்சிக்கு அழைத்து வந்த முகவர்களுக்கு அகதிகள் பணம் செலுத்தியுள்ளதாகப் பொலிஸ் ஆணையாளர் கே.ஜே.ஜேம்ஸ் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டவர்கள் தமிழ்நாட்டில் உள்ள தங்களது அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கியூ பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# தமிழ்க் கட்சிகளுடன் நாளை சிவில் பிரதிநிதிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

தமிழ்க் கட்சிகளுக்கும், சிவில் சமூகத்தினருக்கும் இடையேயான சந்திப்பு நாளை சனிக்கிழமை திட்டமிட்டபடி வவுனியாவில் இடம்பெறும் என்று மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றுக்கு இடையிலான சந்திப்பொன்று மன்னார் ஆயர் தலைமையில், ஆயர் இல்லத்தில் கடந்த மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன் தொடர்ச்சியாக ஜூன் மாதம் 8 ஆம் திகதி வவுனியாவில் மீண்டும் சந்தித்தப் பேசுவது என்று இணக்கம் காணப்பட்டிருந்தது.

அத்துடன் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு வரைபைத் தயாரிப்பதற்கு மூவர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டிருந்தது. இந்தக் குழு ஒரு தடவை கூடி சந்தித்த நிலையில் இணக்கம் எதுவும் எட்டப்படாமல் கலைந்தது.

இவ்வாறானதொரு நிலையில் நாளை சந்திப்பு இடம்பெறுமா என்று மன்னார் ஆயரைக் கேட்ட போது:

கடந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களின் இணக்கத்தின் அடிப்படையிலேயே 8 ஆம் திகதி வவுனியாவில் சந்திப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

> “தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு வரைபைத் தயாரிப்பதற்கு மூவர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டிருந்தது.


அதில் எந்த மாற்றமும் இல்லை. எந்தவொரு கட்சியும் இந்தக் [illegible] விக்கவில்லை.-என்றார். (த-5)

# அங்குலானை தேவாலயத்தில் இனந்தெரியாதோர் கைவரிசை

## சொரூபங்கள், பொருள்கள் நாசம்

அங்குலானை, புனித. பிரான்ஸிஸ் தேவாலயத்திற்குள் நுழைந்த இனந்தெரியாத குழுவினர் தேவாலயத்திற்குள்ளிருந்த சொரூபங்கள் உட்பட பெறுமதிவாய்ந்த பல பொருள்களை அடித்து நொறுக்கி புரட்டி நாசப்படுத்தியுள்ளதாக அங்குலானை பொலிஸார் தெரிவித்தனர்.

தேவாலயத்துக்குள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வேளையில் உள்நுழைந்த இனந்தெரியாத குழுவினரே இவ்வாறு அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



பூசைப் பீடம், பூசைப் பீட மேசை மற்றும் இரண்டு சொரூபங்கள் என்பன இவ்வாறு சேதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திவருவதாகவும் கூறினர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தலைதூக்குகிறது கசிப்பு ஒழித்துக் கட்டுவோம் வாருங்கள்

## மக்களின் ஒத்துழைப்பை கோருகிறது மதுவரித் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

குடாநாட்டில் மீண்டும் தலை தூக்கியுள்ள கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த வருடம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட கசிப்பு உற்பத்தி மீண்டும் கடந்த 2 மாத காலத்துக்குள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்களத்தின் சட்டக் கோவைகளுக்கு அப்பால் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் தீவகம் மற்றும் கிராமப் புறங்களில் கசிப்பு உற்பத்தியாளர்கள் மறை முகமாக கசிப்பைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறார்கள்.

இது தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்றால் க்சிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த ஏதுவாக இருக்கும்.

அனுமதி வழங்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்களில் அரச சாராயமும், ஏனைய மதுபான வகைகளும் தேவைக்கு ஏற்ப இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் உள்ளூர் பனம் கள்ளும் தவறணைகளில் தாராளமாகக் கிடைக்கின்றது.

ஆனால் தீமையானதும், ஆபத்தானதுமான கசிப்பைக் குடித்து ஆயுளைக் குறைத்துக் கொள்கிறார்கள். கசிப்பு குடிப்பதால் அவர்களது குடும்பங்கள் சீரழிந்து போவதையும் குடிப்பவர்கள் உணர்ந்து கொள்வதாக இல்லை.

உற்பத்தியாளர்கள் தமக்கு கிடைக்கக் கூடிய வருமானத்தை மட்டுமே கருத்தில் கொள்கிறார்கள். இதனால் எதிர் காலத்தில் ஏற்படப் போகும் சீரழிவுகளை அவர்கள் கவனத்தில் எடுப்பதில்லை.

இவற்றைக் கருத்தில் கொண்டு கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் தொடர்பாக பொது மக்கள் மதுவரித் திணைக்களத்திடமோ, பொலிஸாரிடமோ தகவல் களைக் கொடுக்கும் பட்சத்தில் அதனை ஒழித்துக் கட்ட முடியும்.

கடந்த 2 மாதங்களுக்குள் யாழ்ப்பாணம், சாவகச்சேரி மற்றும் தீவகப் பகுதிகளில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் சில உற்பத்தியாளர்கள் பிடிக்கப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்டும் உள்ளது. (ஓ-14)

# பியரை குடித்துத் தீர்க்கும் இளைஞர் நீரிழிவு ஆபத்து காத்திருக்கிறது

## மருத்துவ அதிகாரிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 7



யாழ்ப்பாணத்து இளைஞர்கள் பல்வேறு வழியிலும் சீரழிந்து வருகிறார்கள். இங்குள்ள இளையவர்களின் அதிகரித்த 'பியர்' பாவனையால் குறைந்தது 20 வருடங்களின் பின்னர் நீரிழிவு நோயால் பாதிப்புறும் அபாயம் காத்திருக்கிறது என்று மருத்துவ அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 3 வருட காலத்துக்குள் குறிப்பாக போர்ச் சூழலின் பின்னர் ''பியர்'' மது பானப் பாவனை பன்மடங்கு அதிகரித்துள்ளது. குடாநாட்டில் மதுபான நிலையங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

> யாழ். மாவட்டத்தில் 3 வருட காலத்துக்குள் குறிப்பாக போர்ச் சூழலின் பின்னர் ''பியர்'' மது பானப் பாவனை பன்மடங்கு அதிகரித்துள்ளது

கூடுதலாக இளைஞர்கள் அதிகளவில் மதுப்பாவனைக்கு அடிமையாகி வருகின்றனர். 'பியர் ரக மதுபானத்தை வயிறு முட்ட குடிக்க ஆரம்பித்துள்ளார்கள். தெருவோரங்கள், ஒழுங்கைகள் எங்கும் 'பியர் ரின்கள் வீசியெறியப்பட்டுக் கிடக்கின்றன.

நாகரிகம எனக் கருதி பியரை குடிக்கும் இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களில் சென்று விபத்துக்களையும் சந்திக்கின்றனர். அதனால் பெரும் ஆபத்துக்களிலும் சிக்கிக் கொள்கின்றனர்.

'பியர்' பாவனையால் இன்னும் பத்து, பதினைந்து வருடங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்கள் நீரிழிவு (சலரோகம்) நோயாளர்களாக மாறவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் 48 லட்சத்து 45 ஆயிரத்து 588 லீற்றர் பியர் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த விற்பனை இந்த வருடம் இன்னும் அதிகமாகலாம் என்று மதுவரித்திணைக்கள வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-14)

# தலைபோன கதையைச் சொல்லட்டுமா...?



வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் போர்க் காலத்தில் சேதமடைந்த இடிதாங்கி இன்னமும் அப்படியே காட்சியளிக்கிறது. தொழிலுக்குச் செல்லும் மீனவர்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டிய அதிகாரிகள் இது குறித்து அக்கறை எடுக்காதது ஏன்...? இடி, மின்னல் தாக்கம் குறித்த எச்சரிக்கை அடிக்கடி வானொலியில் அறிவிக்கப்படுகிறது. இது ஏன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் காதில் விழுவதில்லையா...? (ஓ-ரி)

# 26 மில். ரூபா செலவில் வீதிகள் விரைவில் புனரமைப்பு

## வலி. வடக்கு பகுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வலி.வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் 26 மில்லியன் ரூபா செலவில் ஆறு வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதாக வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் அனுமதி தற்போது கிடைக்கப்பெற்றிருப் பதாகவும், இந்த வீதிகளின் புனரமைப்பு விரைவில் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அளவெட்டிப் பிரதேசத்தில் மகாத்மா வீதி, முருங்கையப் புலம் வீதி, கும்பிழாவளை வீதி, அப்பாசிப்பிள்ளை வீதியும் வயசாவிளான் பிரதேசத்தில் வயசாவிளான் மயான வீதியும், தந்தை செல்வா பிரதேசத்தில் பட்டிக் கடவை வீதியுமே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (வ-5)

# இளைஞர் யுவதிகளுக்கான தொழில் பயிற்சிகள்

தென்மராட்சி, ஜூன் 7

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாவகச்சேரி பிரதேச அலுவலகத்தின் இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

கைதடி- நுணாவில் அறவழி தொழிற்பயிற்சி மையத்தில் தையல், அழகுக்கலை, கணினி மென்பொருள், வன்பொருள் ஆகிய பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகளுக்கு பதிவு செய்தவர்களையும் பதிவு செய்யாதவர்களையும் அன்றைய தினம் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# வீதி விளக்குகள் விசமிகளால் சேதம்

## ஏழாலை மேற்கில்

வலி. வடக்கு, ஜூன் 7

ஏழாலை மேற்கில் வலி. தெற்கு பிரதேச சபையால் பொருத்தப்பட்ட ஆறு வீதி விளக்குகள் இனம் தெரியாத விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலத்தில் வலி. தெற்கு பிரதேச சபையினர் பொது மக்களின் நன்மை கருதி வீதி விளக்குகளை கட்டம் கட்டமாக அத்தியாவசிய தேவையான இடங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பொருத்தும் பணிகளை மேற் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் மதுப்பிரியர்கள் தமது தேவைக்காக இவ்வாறான விசமத்தனமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அந்தப் பகுதியில் வாழும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் சந்திகளில் இருந்து மது அருந்துவோரும் மற்றும் சந்திகளில் நின்று அரட்டையடிப்போருமே இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்கின்றனர்.


இத்தகைய செயற்பாடுகள் திருடர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என பொது மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

(வ-86)

# பயன்பாட்டுக்கு உதவாத அரிசி மாணவர் உணவுக்காக பாடசாலையில்

## கண்டறிந்தனர் சுகாதாரக் குழுவினர்

வலி. வடக்கு, ஜூன் 7



உலக உணவுத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்காக பாடசாலைகளில் வைக்கபட்டிருந்த அரிசி பயன்பாட்டுக்கு உதவாததாக இருப்பது தெரியவந்துள்ளது.

உடுவில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் உள்ள பாடசாலைகளுக்கு சுகாதார வைத்தியதிகாரி அ.ஜெயக்குமாரன் தலைமையிலான சுகாதாரக் குழுவினர் சென்று சுகாதாரச் செயற்பாடுகளைப் பார்வையிட்டனர்.

இந்த நடவடிக்கையின்போது உலக உணவுத் திட்டத்துக்கு என வைக்கப்பட்டிருந்த அரிசி மூடைகளில் ஒரு பகுதி பயன்பாட்டுக்கு உதவாததாக இருப்பதைக் கண்டு பிடித்துள்ளனர்.

தொடர் நடவடிக்கையாக இத்தகைய பரிசோதனையை மேற்கொண்டதில், உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட 17 பாடசாலைகளில் பயன்பாட்டுக்கு உதவாத அரிசி மூடைகள் இருப்பதைக் கண்டு பிடித்துள்ளனர்.

இதுதொடர்பாக கல்வித்திணைக்களம் மற்றும் பிரதேச செயலகத்துக்கும் அறிவித்துள்ளனர். குறிப்பிட்ட பாடசாலைகளில் உலக உணவுத் திட்டத்துக்காக வழங்கப்பட்ட அரிசியில் பழுதடைந்த அரிசி எவ்வாறு கொண்டுவரப்பட்டது [illegible] யுள்ளது. (வ-86)

# வரணி வைத்தியசாலையின் குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு

வரணி, ஜூன் 7



வரணி பிரதேச வைத்தியசாலையின் முக்கிய தேவைகளில் ஒன்றான குடிதண்ணீர்ப் பிரச்சினை தற்சமயம் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் புதிய குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டதை அடுத்து தீர்க்கப்பட்டுள்ளது.

வைத்தியர் விடுதிக்கும் புதிதாக குழாய் மூலம் தண்ணீர் பெற வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் பழுதடைந்த நிலையில் இருந்த வெள்ள நீர் வழிந்தோடும் கழிவுநீர் வாய்க்கால் குழிகள் யாவும் சிமெந்துக் கல வையால் நிரப்பப்பட்டு சீர் செய் யப்பட்டுள்ளன.

ஆரம்ப காலத்தில் அமைக்கப்பட்ட மலசலகூடம் பதிக்கப்பட்டு சீர்செய்யப்பட்டுள்ளது. (வ-122)

# சாரணியப் பாசறை

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். மத்திய கல்லூரியின் சாரணியப் பொறுப்பாசிரியர் அமரர் வீ.ஜெகதீஸ்வரன் ஞாபகார்த்தமாக மத்தியகல்லூரியின் சாரணிய அணியினால் நடத்தப்படவுள்ள சாரணியப் பாசறை நிகழ்வு இன்றும், நாளையும் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இந்தப் பாசறை நிகழ்வில் கல்லூரியின் சாரணிய அணியைச் சேர்ந்த 65 மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த அரசு ஊடகங்களை பல வழிகளிலும் தாக்குகிறது

## நாடாளுமன்றில் சுமந்திரன் பகிரங்கக் குற்றச்சாட்டு

**பல** வழிகளில் இந்த அரசு ஊடகங்களைத் தாக்குகின்றது. ஊடக நிறுவனங்கள் அச்சுறுத்தப்படுகின்றன, அவற்றின் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன, பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுகின்றனர்.

இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர், இலங்கையில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களின் விவரங்களையும் நடத்தப்பட்ட தாக்குதல்களின் விவரங்களையும் எடுத்துக்கூறினார்.

இவ்வாறு ஊடகங்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்குகளில் எத்தனை தீர்க்கப்பட்டுள்ளன? இத்தகைய தாக்குதல்கள் மற்றும் கொலைகளின் பின்னால் யார் இருக்கிறார்கள்?

இவ்வாறு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகங்கள் மீதும் பத்திரிகையாளர்கள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பான பிரச்சினையில் ஒன்றைக்கூட இந்த அரசால் தீர்க்க முடியவில்லை என்றால், இந்தக் குற்றங்கள் அனைத்துக்கும் பின்னால் இலங்கை அரசு இருக்கின்றது என்றுதான் அர்த்தப்படுத்த முடியும். இவற்றில் சில குற்றங்களைப் பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் பரவாயில்லை. இந்தக் குற்றங்களில் எதையும் கண்டுபிடிக்கக்கூடிய அளவுக்கு இலங்கைப் பொலிஸார் அவ்வளவு தூரம் செயல்திறன் அற்றவர்கள் என்று நீங்கள் கூற முடியாது.

### ஆபத்தான நாடு

ஊடக சுதந்திரத்தில் இலங்கையின் நிலை என்ன என்பதை நீங்கள் எடுத்துப் பாருங்கள். கீழ் நோக்கி விழுகின்றது. சில வருடங்களின் முன்னர் உலகிலேயே பத்திரிகையாளர்களுக்கு மிக ஆபத்தான இரண்டாவது நாடாக இருந்தது. அது குறித்து நீங்கள் பெருமைப்பட முடியாது.

நான் இதுவரையில் சொன்னவற்றுக்கான சிறிய உதாரணத்தை என்னால் காட்ட முடியும். அந்த உதாரணம் 'உதயன்' பத்திரிகை.

அந்தப் பத்திரிகையின் உரிமையாளர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர். உதயன் பத்திரிகை தொடர்ந்து தாக்கப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கின்றது.

### உதயன் மீதான தாக்குதல்கள்

கடந்த 7 வருடங்களில் உதயன் பத்திரிகைக்கு எதிரான தாக்குதல் சம்பவங்க்ள் 30 க்கும் மேல் நடந்திருக்கின்றன.

'உதயன்' பாதிக்கப்பட்ட அளவுக்கு வேறு ஏதாவது நிறுவனங்கள் பாதிக்கப்பட்டதாக நான் நினைக்கவில்லை. சில காலத்துக்கு முன்னர், ஆயுதங்களுடன் வந்தவர்கள் பத்திரிகை அலுவலகத்துக்குள் நுழைந்து மூவரைக் காயப்படுத்தியதுடன் இருவரைச் சுட்டுக் கொன்றனர். அது பற்றி விசாரிக்கப்படவே இல்லை. அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவும் இல்லை. இது சில காலத்துக்கு முன்னர் நடந்தது. அண்மையில் நடந்த சம்பவங்களைப் பார்த்தீர்களானால்– அதாவது இந்த வருடத்தில் நடந்தவைகள் மட்டும் – அவர்களின் பத்திரிகை விநியோகிப்பாளர்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர். பின்னர் கிளிநொச்சியில் இருக்கும் அவர்களின் விநியோகப் பணிமனை ஆயுததாரிகளால் தாக்கப்பட்டது. உங்களுக்குத் தெரியும் கிளிநொச்சி போன்ற, கடும் இராணுவச் சூழலைக் கொண்ட ஒரு நகரில் யாரும் ஆயுதக் குழுக்களை வைத்திருந்து இத்தகைய தாக்குதல்களை நடத்திவிட்டுத் தப்பிக்க முடியாது. அதையும் தாண்டி இராணுவம் செறிந்திருக்கும் கிளிநொச்சியில் அவ்வாறான சம்பவம் நடந்தால் அது அரசின் நடவடிக்கையாகத்தான் இருக்கும். கடைசியாக கடந்த ஏப்ரல் மாதத்தில் உதயன் பத்திரிகை வெளிவராமலேயே தடுக்கும் நோக்கத்துடன் அதன் அச்சகம் எரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் எவையுமே தீர்க்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் இத்தகைய தாக்குதல்கள் ஆயுதம் தரித்த காடையர்களால் நடத்தப்படுகின்றது என்றால், அதிலும் அவர்கள் கைது செய்யப்படவில்லை என்றால், அதனை அரசின் முகவர்களே செய்கிறார்கள் என்றுதான் அர்த்தப்படுத்த முடியும்.

“
பத்திரிகை மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வரும் நிலையில் அதற்குச் சமாந்தரமாக வழக்கத்துக்கு மாறான ஒன்றும் நடந்து கொண்டிருக்கின்றது. அது என்னவென்றால், 'உதயன்' பத்திரிகைக்கு எதிரான பிரச்சாரம் ஒன்று அரச ஊடகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாக 'டெய்லி நியூஸ்' பத்திரிகை அதனைச் செய்கிறது. என்னால் அதனை ஒவ்வொன்றாக வாசிக்க முடியும். சொல்லப்போனால் ஒவ்வொரு நாளும் 'உதயன்' பத்திரிகையை இலக்கு வைத்து அரச ஊடகத்தில் செய்தி வருகின்றது.



### உதயனுக்கு எதிரான பிரசாரம்

இவ்வாறு இந்தப் பத்திரிகை மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வரும் நிலையில் அதற்குச் சமாந்தரமாக வழக்கத்துக்கு மாறான ஒன்றும் நடந்து கொண்டிருக்கின்றது. அது என்னவென்றால், 'உதயன்' பத்திரிகைக்கு எதிரான பிரச்சாரம் ஒன்று அரச ஊடகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாக 'டெய்லி நியூஸ்' பத்திரிகை அதனைச் செய்கிறது. என்னால் அதனை ஒவ்வொன்றாக வாசிக்க முடியும். சொல்லப்போனால் ஒவ்வொரு நாளும் 'உதயன்' பத்திரிகையை இலக்கு வைத்து அரச ஊடகத்தில் செய்தி வருகின்றது.

அரசாலும் அதன் முகவர்களாலும் உதயன் பத்திரிகை கடுமையாகத் துன்புறுத்தப்பட்டது. அவற்றுக்கு மகுடம் வைத்தது போன்று இப்போது அரச ஊடகம் வெறுப்பூட்டும் பிரச்சாரத்தை 'உதயன்' பத்திரிகையை இலக்கு வைத்து ஆரம்பித்துள்ளது.

இந்தப் பத்திரிகைக்கும் அதன் உரிமையாளருக்கும் எதிராக வன்முறையைத் தூண்டி விடுவதை இலக்காகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது.

சில காலத்துக்கு முதலே இது ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. முழுமையாக இல்லாவிட்டாலும் கொஞ்சத்தையாவது நான் கூறினால், இந்த வருடத்தில் மட்டும் ஒன்றன் பின் ஒன்றாகப் பல செய்திகள் வந்துள்ளன. அனேகமாக அவை அனைத்துமே படையினருடன் தொடர்புபட்டே வந்திருக்கின்றன.

இரண்டு நாள்களுக்கு முன்னர் வந்துள்ளதைப் பாருங்கள், அரசின் மீள்குடியமர்த்தல் நடவடிக்கைகளை உதயன் குறைத்து மதிப்பிட வைக்கிறது என்று வன்னித் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்திருக்கிறார் என்று 'டெய்லி நியூஸ்' பத்திரிகை கூறுகின்றது. மீள்குடியமர்த்தல் நடவடிக்கைகளுடன் மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவுக்கு என்ன வேலை? 'உதயன்' என்ன எழுதுகின்றது என்பது தொடர்பில் அவருக்கு என்ன வேலை? யார் அவர்? ஒரு இராணுவ அதிகாரி. 'உதயன்' பத்திரிகை மிகக் குறிப்பாக மீள்குடியமர்வைப் பற்றி, மிக மந்தமாக நடக்கும் மீள்குடிமயர்வைப் பற்றி, வலி. வடக்குப் பகுதி போன்றவற்றில் மீள்குடியமர்வே நடக்கவில்லை என்பதைப் பற்றி, அரசு காணிகளை சுவீகரிப்பதைப் பற்றி எழுதுகின்றது.

இவை பற்றியெல்லாம் எழும் கவலைகளுக்காகக் குரல் கொடுப்பது ஒரு பத்திரிகையின் கடமை இல்லை என்கிறீர்களா? அது நிகழும் போது ஒரு இராணுவ அதிகாரி சொல்கிறார் இந்தப் பத்திரிகை அரசின் நடவடிக்கைகளை குறைத்து மதிப்பிட வைக்கிறது என்று.

மீள்குடியமர்வு நடவடிக்கை என்று வேறு அவர் குறிப்பிடுகிறார். இவர்கள் செய்வதை நடவடிக்கை என்று கூறுவது வெட்கக்கேடானதாக இல்லையா? என்ன நடவடிக்கை இருக்கிறது அங்கே? எதுவும் இல்லை. நடவடிக்கையும் இல்லை மீள்குடியமர்வும் இல்லை. பத்திரிகை அதைத் தான் சுட்டிக்காட்டி இருக்கிறது. அடுத்து ஒரு செய்தி வந்திருக்கிறது. அதில், வடக்கில் நடந்த மீள்குடியமர்வு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை அழித்தும் திரித்தும் விட்டது என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு பத்திரிகை தவறான தகவல்களைப் பிரசுரித்தால் அதனை எதிர்கொள்ள நடைமுறைகள் உள்ளன. அதனை அரசுதான் செய்ய வேண்டும். அது குறித்து மீள்குடியமர்வு அமைச்சர் குரல் கொடுக்க வேண்டும். அதனை அரச ஊடகத்தில் பிரசுரிக்க இராணுவ அதிகாரி யார்? இந்தச் செய்தி வந்திருந்த அதே நாளில் 'உதயன்' பத்திரிகை தொடர்பில் ஆசிரியர் தலையங்கம் வேறு எழுதப்பட்டுள்ளது.

ஜூன் முதலாம் திகதி வந்திருப்பதைப் பாருங்கள். இலங்கையைப் பற்றிய மோசமான படிமத்தை உருவாக்க 'உதயன்' முயற்சிக்கிறது என்று யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்திருக்கிறார். அவருக்கு இந்த விடயத்தில் செய்வதற்கு என்ன இருக்கிறது.

மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க இந்தச் சபையில் எதிர்க்கட்சித் தலைவரால் பெயர் குறிப்பிட்டுக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர். யாழ்ப்பாணத்தில் தனியான இராணுவத்தை – தனியான ஆயுதக் குழுவை – வைத்து அவர் நடத்துகிறார் என்று ரணில் விக்கிரமசிங்க இந்தச் சபையில் தெரிவித்திருக்கிறார். ஒரு தடவை மட்டுமல்ல பல தடவைகள் அவர் இதனைக் கூறி இருக்கிறார். இவற்றையெல்லாம் பார்க்கும் போது, 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் ஒரு பக்கம் 'உதயன்' என்ன எழுதுகின்றது என்பதைக் கண்காணிப்பதற்காகவே ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றது. இந்த அரசு ஆள்களை வாடகைக்கு அமர்த்துவது மட்டுமல்லாது உடல் ரீதியாகவும் பத்திரிகையாளர்களைத் தாக்குகின்றது. 'உதயன்' ஆசிரியர் தாக்கப்பட்டிருக்கிறார். துணை ஆசிரியர் தாக்கப்பட்டிருக்கிறார்.

மே 24ஆம் திகதி வந்திருக்கும் செய்தியில், இலங்கையின் இறைமையை மதிப்பிழக்க வைக்கும் நடவடிக்கையில் 'உதயன்' இறங்கியிருப்பதாக மேஜர் ஜெனரல் லெனார்ட் மார்க் கூறியிருக்கிறார். பாருங்கள்! மற்றொரு மேஜர் ஜெனரல் வந்திருக்கிறார்.

### வெட்கம் இல்லையா உங்களுக்கு?

சில நாள்களுக்குள் 'உதயன்' பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் மூன்றாவது ஜெனரல் இவர். 'உதயன்' என்ன செய்கிறது என்று இவர்கள் கருத்துச் சொல்கிறார்கள். இது தானா அவர்களின் வேலை? பத்திரிகையைக் கண்காணிப்பதானால் அவர்கள் செய்துவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிடலாம். ஆனால் 'டெய்லி நியூஸ்' பத்திரிகைக்கு அழைப்பெடுத்து இது தொடர்பில் வெறுப்பூட்டும் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். உண்மையில், இது அரசினுடைய வெறுப்பூட்டும் பேச்சு. அத்துடன் இந்த ஊடக நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்குப் பின்னால் இந்த அரசு நிற்கிறது. ஆனால், இதனை நாம் இந்தச் சபையில் சுட்டிக்காட்டினாலும் நீங்கள் வெட்கப்படாமல் இருக்கிறீர்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றால் கூச்சலிடுகிறீர்கள்; சத்தம்எழுப்புகிறீர்கள்.

இவ்வாறு அரச ஊடகம் 'உதயன்' பத்திரிகைக்கு எதிராக ஒவ்வொரு நாளும் வெறுப்பூட்டும் செய்திகளைப் பிரசுரித்துக் கொண்டிருக்கிறார்கள், களத்திலே இராணுவத்தினர் தமது குண்டர்களை பத்திரிகை அலுவலகத்தைத் தீக்கிரையாக்க அனுப்பிக்கொண்டிருக்கின்றனர், விநியோக நிலையத்தை தாக்கிக் கொண்டிருக்கிறார்கள், என்று எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கையில் நீங்கள் கூறுகிறீர்கள் இந்த நாட்டில் ஊடக சுதந்திரம் இருக்கின்றது என்று.

ஏன் இப்படிச் செய்கிறீர்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஒரே பிராந்தியப் பத்திரிகையின் உரிமையாளர் உங்களுக்கு எதிரான அரசியல் அணியில் இருக்கிறார் என்பதற்காகத்தானா? – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 5 ஆம் தரப் புலமைப் பரீட்சை பெறுபேற்றில் 5 வருடங்களில் வீழ்ச்சி



யாழ்ப்பாணம், ஜூன் 7
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின்படி, சித்திய டையும் மாணவர்களின் வீதம் வடமாகாணத்தில் கடந்த ஐந்து வருடங்களாக வீழ்ச்சியடைந்து அவதானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணக் கல்வித் திணைக் கள புள்ளி விவரத் தரவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள் ளது.

2008 ஆம் ஆண்டிலிருந்து சித்தி வீதம் குறைவடைந்து கடந்த இரு வருடங்களாக 10 வீதத்துக்குள்ளேயே காணப் படுகிறது.

மாகாண ரீதியாக சித்தியடைந்த மாணவர்கள் 2008 இல் 12.28 வீதம், 2009 இல் 11.53 வீதம், 2010 இல் 10.05 வீதமாகக் காணப்பட்டு 2011 இல் 9.61 வீதமாகவும், 2012 இல் 9.5 வீதமாகவும் குறைவடைந்துள் ளது.

யாழ்.வலயத்தில் சித்திவீதம் 2008 இல் 19.89 வீதமாக இருந்தது. 2009 இல் 15.36, 2010 இல் 16.5 வீதம், 2011 இல் 15.7, 2012 இலும் 15.7 வீதமாகக் காணப்படுகிறது.

வலிகாமம் வலயத்தில் 2008 இல் 12.14, 2009 இல் 8.4, 2010 இல் 10.2, 2011 இல் 9.3 வீதமாகக் காணப்பட்டு 2012 இல் 10 வீதமாக சற்று அதிகரித்துள்ளது.

வடமராட்சி வலயத்தில் 2008 இல் 15.22, 2009 இல் 11.78, 2010 இல் 12.3, 2011 இல் 12 வீதமாக இருந்து, 2012 இல் 11.2 வீதமாகக் குறை வடைந்துள்ளது.

தென்மராட்சி வலயத்தில் 2008 இல் 14.55 வீதமாகவும் 2009 இல் 12.57, 2010 இல் 8.4, 2011 இல் 8.9 விதமாக இருந்து 2012 இல் 8.5 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

தீவக வலயத்தில் 2008 இல் 2.25, 2009 இல் 3.33, 2010 இல் 1.75, 2011 இல் 4.6, 2012 இல் 4.9 வீதமாகக் காணப் படுகிறது.

கிளிநொச்சி வலயத்தில் 2008 இல் 7.46, 2009 இல் பதிவாக வில்லை. 2010 இல் 4.5, 2011 இல் 5.3 வீதமாக இருந்து 2012 இல் 4.9 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

மன்னார் வலயத்தில் 2008 இல் 9.99, 2009இல். 9.14, 2010 இல் 8.3, 2011 இல் 9.2 வீதமாக இருந்து 2012 இல் 8.6 வீதமாகக் குறைவடைந்துள் ளது.

மடு வலயத்தில் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் சித்தி வீதம் பதிவாகவில்லை. 2010 இல் 0.8, 2011 இல. 1.6, 2012 இல் 2.3 வீதமாகக் காணப்படுகி றது.

வவுனியா வடக்கு வலயத்தில் 2008 இல் 4.35, 2009 இல் 5.1, 2010 இல்4.5., 2011 இல. 4.9 வீதமாகக் காணப்பட்டு 2012 இல் 5.9 வீதமாக அதி கரித்துள்ளது.

வவுனியா தெற்கு வலயத்தில் 2008 இல் 15.22, 2009 இல் 14.78, 2010 இல் 15.6, 2011 இல் 13.5, 2012 இல் 12.1 வீதமாகக் குறைந்துள்ளது.

முல்லைத்தீவு வலயத்தில் 2008 இல் 7.38, 2009 இல் பதிவாக வில்லை. 2010 இல் 5.7, 2011 இல் 5.2, 2012 இல் 7.7 வீதமாக அதிகரித்துள்ளது.

துணுக்காய் வலயத்தில் 2008 5.58, 2009 இல் பதிவாக வில்லை. 2010 இல் 4.7, 2011 இல் 3.9 வீதமாகக் காணப்பட்டு, 2012 இல் 2.3 வீதமாகக் குறைவடைந்துள் ளது என்று அதில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## கழிவுகளால் நிரப்பப்பட்ட பழைமை வாய்ந்த கேணி



யாழ்ப்பாணம், ஜூன் 7
பருத்தித்துறை வீதியில் நீர் வேலி பூதர்மடப் பகுதியில் உள்ள பழைமை வாய்ந்த கேணி கழிவுகளால் நிரப்பப்பட்டு மாச டைந்த நிலையில் உள்ளது.

கால்நடைகளின் குடிதண்ணீர் தேவைக்காக அமைக்கப்பட்ட இந்த பழைமை வாய்ந்த கேணி தற்போது தூர்ந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்தக் கேணியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டு நிரம்பிய நிலையில் காணப்படு வதால் இந்தப் பகுதியில் நுளம் பின்பெருக்கமும் அதிகரித்துள்ளது.

இதேவேளை, வலி.கிழக்குப் பிரதேசத்திலுள்ள கேணிகள் இவ்வாறு புனரமைக்கப்படாது பாவனையின்றி தூர்ந்த நிலை யில் காணப்படுகின்றன.

கால்நடைகளின் குடிதண்ணீர் தேவைக்காக அமைக்கப்பட்ட இந்த பழைமைவாய்ந்த கேணி களை புனர்நிர்மாணம் செய்ய வேண்டும் என்று பிரதேச மக் கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் இந்தக் கேணிகளில் கழிவுப் பொருள்கள் மற்றும் குப்பைகள் போன்றவற்றை கொட்டுவதைத் தவிர்க்க பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் வேண் டுகோள் விடுத்துள்ளனர். (வ-17)

## உதயபுரம் பிரதான வீதிக்கு விமோசனம் எப்போது?

யாழ்ப்பாணம், ஜூன் 7
மணியந்தோட்டம், உதயபுரம் பிரதான வீதி நீண்டகாலமாகப் புனரமைப்பு செய்யப்படாது மிக வும் சேதமடைந்து உள்ளதால் மக்கள் விசனம் தெரிவிக்கின் றனர்.

மீளக்குடியமர்ந்த சுமார் 160 குடும்பங்கள்வரை உள்ள இந்தப் பகுதியில் வீதி மோசமாக உள்ள தால் வாகனப் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் உள் ளது. பாடசாலைக்குச் செல் லும் மாணவர்கள் பஸ்ஸுக் காக நீண்ட தூரம் நடந்து சென்றே பஸ்ஸில் செல்ல வேண்டியுள் ளது.

வீதி திருத்த வேலைகள் பல் வேறு பகுதிகளிலும் நடைபெற்று வரும் நிலையில் இந்த வீதியை மட்டும் திருத்தியமைக்க உரிய வர்கள் இதுவரை நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன் என வும் உதயபுரம் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (வ-7)



யாழ். கனகரட்ணம் வீதியில் நாயன்மார்கட்டு குளத்தின் நீர் வெளியேறிச் செல்ல அமைக் கப்பட்டிருந்த பழைமையான பாலம் உடைந்து வீழ்ந்ததையடுத்து புதிய பாலம் அமைக்கப்பட்டு பணிகள் நிறைவுறும் நிலையில் காணப்படுகிறது. (ஒ-135)

## கடந்த ஐந்து மாதங்களில் 133 பேருக்கு நெருப்புக்காய்ச்சல்

யாழ்ப்பாணம், ஜூன் 7
கடந்த 5 மாதங்களில் 133 பேர் நெருப்புக் காய்ச்ச லால் பீடிக்கப்பட்டு சிகிச் சைக்காக வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பிராந்திய சுகாதாரத் திணைக்களம் தெரிவித் தது.

ஜனவரி, பெப்ரவரி மாதங் களிலேயே நெருப்புக் காய்ச் சலால் அதிகமானோர் பீடிக் கப்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு மாதங்களி லும் தலா 35 பேர் பீடிக் கப்பட்டனர்.

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங் களில் தலா 27 பேரும் மே மாதம் 9 பேரும் இவ்வாறு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட னர்.



இதேவேளை சுகாதார வைத் திய அதிகாரிப்பிரிவு ரீதி யாக பருத்தித்துறை, சங் கானை, கரவெட்டி, சண்டி லிப்பாய் பகுதிகளில் அதிக மானோர் நெருப்புக் காய்ச் சலால் பீடிக்கப்பட்டுள்ள னர் என்று தெரிவிக்கப்பட் டது. (வ-4)

## இடம் மாறியது மீன் சந்தை

யாழ்ப்பாணம், ஜூன் 7
உரும்பிராய் மீன்சந்தை நேற்று முதல் உரும்பிராய் மத்திய சந்தைக்கு இடமாற்றப்பட்டுள் ளதாக வலி.கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் அன்ன லிங்கம் உதயகுமார் தெரிவித் தார்.

இந்த மீன் சந்தை எந்தவித வசதியும் இன்றி உரும்பிராய் மேற்கில் உள்ள தனியார் காணி ஒன்றில் இயங்கி வந்தது.

இந்த நிலையில் நேற்று தொடக் கம் உரும்பிராய் மத்திய சந் தைக் கட்டத்தில் மீன்சந்தை செயற்பட ஆரம்பித்தது. (வ-17)

## புற்றுநோய் சிகிச்சை 'கிளினிக்' மறு அறிவித்தல் வரை நிறுத்தம்

### சாவகச்சேரி வைத்தியசாலையில்

தென்மராட்சி, ஜூன் 7
சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் பிரதி மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை களில் நடைபெற்று வந்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மறு அறிவித்தல் வரை நடை பெறமாட்டாது என வைத்திய சாலை நிர்வாகத்தினர் அறிவித் துள்ளனர்.

சிகிச்சையை நடத்திய யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் ந.ஜெயக் குமாரன் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால் கிளினிக்கை நடத்த முடியவில்லை. குறித்த சிகிச்சைப் பிரிவில் கிசிச்சை பெற்ற தென்மராட்சி மற்றும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் மந்திகை ஆதார வைத் தியசாலை ஆகியவற்றில் நடை பெறும் சிகிச்சை பிரிவுகளில் பங்குபற்றுமாறும் அறிவித் துள்ளனர்.

மாதத்துக்குரிய கிளினிக் எதிர் வரும் 12 ஆம் திகதி நடை பெறவிருந்தமை குறிப்பிடத் தக்கது. (வ-9)

## உடுப்பிட்டியிலுள்ள வலி. வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

### மாவை சேனாதிராசா எம்.பி. உறுதிமொழி

வடமராட்சி, ஜூன் 7
உடுப்பிட்டி முகாமில் உள்ள வலி.வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 14 குடும்பங்களின் இருப்பிட பிரச்சிகைள் தொடர் பாக பிரதேச செயலர், யாழ். அரச அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடி தீர்வு ஒன் றைக் காண முயற்சிப்பதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசா உறுதியளித்துள்ளார்.

[illegible] குடும்பங்களை தமது காணியில் இருந்து வெளியேறு மாறு காணி உரிமையாளர் வற்புறுத்தி வரும் நிலையில் அங்குள்ள குடும்பங்களுடன் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசா அண்மையில் கலந்துரை யாடினார்.

தாங்கள் கூலித் தொழிலையே மேற்கொண்டு பல வருடங் களாக வாழ்க்கையை நடத்தி வரும் நிலையில் பிறிதொரு இடத்தில் குடியேறினால் தொழில் களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை தங்களுக்கு ஏற்படும். அத்துடன் புதிய இடத்தில் புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதில் பெரும் சிரமங் களை எதிர்கொள்ள வேண்டி வரும்.

தமது சொந்த நிலமான வலி. வடக்குக்குச் செல்ல விட்டால் அங்கு நாங்கள் குடியேறலாம். இல்லையேல் வேறிடங் களுக் குச் செல்வதனால் தமக்கு கஷ் டங்களும் சிரமங்களுமே தொட ரும் என அந்தக் குடும்பத்தவர் கள் மாவை சேனாதிராசாவிடம் தெரிவித்துள்ளனர். (ஒ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக மக்களின் அன்பால் எனக்கு 3 நாள்களாகத் தூங்கமில்லை



சென்னை, ஜுன் 7
''நான் மூன்று நாள்கள் சரியாகத் தூங்கவில்லை. தமிழக மக்கள் என்னிடம் இன்னமும் எல்லையில்லாத அன்போடு இருக்கிறார்களே என்பதை எண்ணிப் பார்த்ததால் எனக்கு தூக்கம் வரவில்லை'' என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-
''எனது 90ஆவது பிறந்த நாளை, எந்த ஆண்டும் இல்லாத வகையில் மிகவும் சிறப்பாக தி.மு.கவினர் ஒருங்கிணைந்து கொண்டாடினர். 3 நாள்களாக நான் சரியாகத் தூங்கவில்லை. தமிழக மக்கள் என்னிடம் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் எல்லையில்லாத அன்போடு இருக்கிறார்களே என்று எண்ணிக் கொண்டிருந்ததால் தூங்கம் வரவில்லை.
தமிழகத்தின் 7 கோடி மக்களில் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலரே என்னை எதிரியாகக் கருதுகிறார்கள். மற்றவர்கள் எல்லோரும் என்னிடம் அன்பு காட்டுகின்றனர்.
இவ்வளவு பேர் செலுத்தும் அன்புக்கு என்ன கைமாறு செய்யப் போகிறேன் என்பதுதான் 3 நாள்களாக என்னைத் தூங்கவிடாமல் மனதில் எழுந்த கேள்வியாகும். இதற்குஎனது பதில் ''தொடர்ந்து உழைப்பேன். உழைத்துக் கொண்டிருப்பேன்'' என்பதுதான் என அவர் தெரிவித்தார்.(ற)

# கடிதம் எழுதினால் மட்டும் போதுமா?

## தமிழக மீனவர் பிரச்சினை குறித்து பா.ம.க. இளைஞரணித் தலைவர்

சென்னை, ஜுன் 7
தமிழக மீனவர் பிரச்சினையில் பிரதமருக்குக் கடிதம் எழுதுவதுடன் தமது கடமை முடிந்துவிட்டதாகத் தமிழக முதல்வர் கருதக் கூடாது. மாறாக ஒட்டுமொத்த தமிழகத்தின் உணர்வுகளை இந்திய மத்திய அரசிடம் பிரதிபலித்து மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் பா.ம.கட்சியின் இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ்.
இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-
வங்கக் கடலில் இந்திய கடல் எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 24 பேர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் தற்போது மன்னார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.
தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறல் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டில் மட்டும் சுமார் ஆயிரம் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஈழத் தமிழர்களை ஒடுக்கி சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கியுள்ள இலங்கை அரசு, இப்போது தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களை சிதைக்க முயல்கிறது. தமிழக மீனவர்களை அத்துமீறி கைது செய்வது இந்திய இறையாண்மைக்கு விடுக்கப்படும் சவால் என்பதை மத்திய அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். இந்திய மீனவர்களை கைது செய்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்பதை இலங்கை அரசுக்குப் புரிய வைக்க வேண்டும்.
அதற்கான நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் முயற்சிகளில் தமிழக முதல்வர் இறங்க வேண்டும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற)




> "தமிழக மீனவர்களை அத்துமீறி கைது செய்வது இந்திய இறையாண்மைக்கு விடுக்கப்படும் சவால் என்பதை மத் திய அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

## ராகுல் காந்தி மீது வழக்கு

குவஹாத்தி, ஜுன் 7
அசாம் கண பரிஷத் கட்சியை பயங்கரவாதிகளுடன் இணைத்து கருத்து தெரிவித்த காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தியிடம் ரூபா ஆயிரத்து 500 கோடி நட்ட ஈடு கோருவதற்கு அந்தக் கட்சி முடிவு செய்துள்ளது.
அசாம் கண பரிஷத் கட்சி பயங்கரவாதிகளின் துணையுடன்தான் அசாமில் ஆட்சி அமைத்தது என்று ராகுல் கூறினார் என்று விக்கிலீக்ஸ் இணையத் தளம் தகவல் வெளியிட்டுள்ளது.
அதையடுத்து கொந்தளித்த அசாம் கண பரிஷத் கட்சி, ''குறித்த கருத்துக்காக ராகுல் காந்தி 15 நாள்களுக்குள் மன்னிப்புக் கோர வேண்டும், இல்லையென்றால் அவர் மீது ரூபா ஆயிரத்து 500 கோடி நட்டஈடு கோரி சட்ட நடவடிக்கை எடுப்போம்'' என்று கூறியுள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அசாம் கண பரிஷத் இளைஞரணித் தலைவர் கிஷோர் உபாத்யா,
''இந்த விடயம் குறித்து ராகுல் காந்திக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் நாம் சட்ட நடவடிக்கை எடுப்போம்'' என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை, காங்கிரஸ் தலைவரும், அசாம் மாநில முதல்வருமானதருண்கோகாய் ராகுலில் கருத்துக்கு ஒத்துப் பாடியுள்ளார். அசாம் கண பரிஷத் கட்சி அவரிடம் எவ்வளவு நட்டஈடு கோரப்போகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம். (ற)

## மனைவி திட்டினார்; கணவர் சாவு

சென்னை, ஜுன் 7
மனைவி திட்டியதால் தனது உயிரை மாய்த்துக் கொண்டார் கணவர்.
சென்னை, ஆதம்பாக்கத்தைச் சேர்ந்த ஸ்ரீதரன் தினமும் குடிபோதையிலேயே வீட்டுக்கு வருவார். அதனால் தினமும் மனைவியுடன் சண்டைதான். இந்த நிலையில் நேற்று ஸ்ரீதரன் குடித்துவிட்டு வந்ததை கண்ட அவரது மனைவி வித்யா கணவரை கண்டிக்கும் விதத்தில் வீட்டை விட்டு வெளியே போனராம். இதனால் மனமுடைந்திருந்த ஸ்ரீதரன் பின்னர் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டார். இதுகுறித்து ஆதம்பாக்கம் பொலிஸார் விசாரணைநடத்திவருகின்றனர். (ற)



உஜானி நீர் அணையைத் திறந்து விடக்கோரி, மகாராஷ்டிரா மாநிலத்தில், சோலாப்பூர் மாவட்ட விவசாயிகள் போராட்டம் நடத்தினர். போராட்டத்தின் போது கழுதைகளுக்கு திருமணம் செய்து வைத்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

## அ.தி.மு.க. சாணக்கியம்; பிரிகிறது தே.மு.தி.க.

சென்னை, ஜுன் 7
தே.மு.தி.கவின் 6 அதிருப்தி உறுப்பினர்களை உருவாக்கியிருக்கும் அ.தி.மு.க. மேலும் 11 உறுப்பினர்களை கைக்குள் போடும் முயற்சிகளில் இறங்கியுள்ளது என்று தெரியவருகின்றது.
சட்டசபை தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து 29 ஆசனங்களைப் பெற்றது தே.மு.தி.க. ஆனால் அவர்களில் 6 பேர் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நேரில் சந்தித்து தே.மு.தி.க. தலைமை மீதான தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.
ஆறு பேர் கிடைத்தார்களே என்று அ.தி.மு.கவும் அத்துடன் ஓய்ந்துவிடவில்லை. மேலும் 11 பேருக்குத் தூண்டில் போடும் முயற்சிகள் திரைமறைவில் மும்முரமாக நடைபெற்று வருகின்றன என்று கூறப்படுகிறது. இந்த முயற்சிகள் கைகூடும் பட்சத்தில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியை விஜயகாந் இழக்க நேரிடும்.
எனவே உறுப்பினர்களை கட்சி தாவ வைத்து விஜயகாந்தின் பதவியைப் பறிக்கும் முயற்சிகளில் மும்முரமாக இறங்கியிருக்கிறதாம் அ.தி.மு.க. தலைமை.(ற)



## வீணானது கருணாநிதியின் திட்டம்

சென்னை, ஜுன் 7
தனது பிறந்தநாள் கொண்டாட்டங்களின் போது அழகிரியையும், ஸ்டாலினையும் சமரசம் செய்யும் கருணாநிதியின் முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன.
தி.மு.க. கட்சியின் அடுத்த தலைவர் யார் என்பதில் அழகிரிக்கும், ஸ்டாலினிக்கும் இடையே முறுகல் நிலை உள்ளது. அழகிரியின் ஆதரவாளர்கள் ஸ்டாலினைத் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர்.
அதையடுத்து, மு.க.அழகிரியையும், ஸ்டாலினையும் ஒரே மேடையில் நிறுத்தி சமரசம் செய்ய திமுக தலைவர் கருணாநிதி விரும்பினார்.
அதற்கு தமது பிறந்தநாள் கூட்டத்தைப் பயன்படுத்திட நினைத்தார். அதன்படி, அழகிரியின் தீவிர ஆதரவாளரான மதுரை புறநகர் தி.மு.க. மாவட்டச் செயலர் பி.மூர்த்தி தலைமையில் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் ஸ்டாலின், அழகிரி பங்கேற்பர் என விளம்பரப்படுத்தப்பட்டது.
ஆனால் கூட்டத்துக்கு தாமதமாக ஸ்டாலின் வந்த போதும், அழகிரி அங்கு வரவில்லை. அவர் மதுரைக்குச் சென்றுவிட்டார்.
இருவரையும் சந்திக்க வைத்து தி.மு.கவில் பூசல் இல்லை என்ற தோற்றத்தை உருவாக்க முயற்சித்த கருணாநிதி தலையில் கைவைத்துக் கொண்டிருப்பதாக கட்சி வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. (ற)




## தங்கத்தில் முதலிடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்


### முதலீட்டாளர்களை கோருகிறார் மத்திய நிதி அமைச்சர்

புதுடில்லி, ஜுன் 7
''பொருளாதார வளர்ச்சி எதனையும் ஏற்படுத்தாத தங்கத்தில் முதலீடு செய்ய வேண்டாம்'' என்று இந்திய மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் வலியுறுத்தியுள்ளார்.
இந்திய ரூபாயின் மதிப்பு ஓராண்டுக்கு முந்தைய அளவுக்கு சரிந்தது குறித்து எந்த விதமான எச்சரிக்கையும் வரவில்லை. நாட்டின் பொருளாதாரம் சீராகவே இருக்கின்றது என்றும் சிதம்பரம் மேலும் தெரிவித்துள்ளார்.
புதுடில்லியில் இடம்பெற்ற வங்கிகளுக்கான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் கூறியதாவது:-
''முதலீட்டாளர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எந்த வகையிலும் உதவாத தங்கத்தில் முதலீடு செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வங்கிகளில் தங்கம் விற்பனை செய்யப்படுவது விரைவில் தடை செய்யப்படும்'' என்று தெரிவித்தார்.
இந்தியாவில் தங்க இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட சுங்க வரி 6 சதவீதத்தில் இருந்து 8 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, முதலீட்டாளர்களுக்கு சிதம்பரம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அசாத்தின் கை ஓங்குகின்றது

## கேந்திர நகர் இராணுவம் வசம்



டமாஸ்கஸ், ஜூன் 7
சிரியாவில் வியூக முக்கியத்துவம் வாய்ந்த கைசர் நகரைக் கிளர்ச்சியாளர்களிடம் இருந்து கைப்பற்றியுள்ளனர் சிரிய இராணுவத்தினர்.
இருவாரங்கள் இடம்பெற்ற கடும் மோதல்களின் பின்னர் கைசர் நகர் இராணுவத்தின் வசம் வீழ்ந்துள்ளது.
கைசர் நகரில் இருந்த மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ள நிலையில் தற்போது சிரிய இராணுவம் மட்டுமே நகரில் நிலைகொண்டுள்ளது என்று கூறப்படுகின்றது.
கைசர் நகர் கிளர்ச்சியாளர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நகராகக் காணப்படுகின்றது. அயல் நாடான லெபனானில் இருந்து கிளர்ச்சியாளர்களுக்கான ஆயுத விநியோகத்துக்கான கேந்திர நிலையமாக இந்த நகர் காணப்படுகின்றது. கைசர் நகர் இராணுவத்தின் வசம் வீழ்ந்தமை கிளர்ச்சியாளர்களின் ஆயுத விநியோகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகின்றது.
சிரிய உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில், ஜெனிவா மாநாடு கூடியுள்ள நிலையில், சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத்தின் கை ஓங்கியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. (ற)

# ‘டிரோன்’ தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்

## வலியுறுத்துகிறார் பாக். பிரதமர்

இஸ்லாமாபாத், ஜூன் 7
பாகிஸ்தானின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமெரிக்காவால் நடத்தப்படும் ஆளில்லா விமானத் (டிரோன்) தாக்குதல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பாகிஸ்தானின் பிரதமராகப் பதவியேற்றுள்ள நவாஸ் செரீப்.
மூன்றாவது முறையாக பிரதமராகப் பதவியேற்றுள்ள நவாஸ் செரீப், நேற்றுமுன்தினம் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.
பதவியேற்பு விழாவின் பின்னர் நாடாளுமன்றத்தில் கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



"பாகிஸ்தானின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமெரிக்க ஆளில்லா விமானங்கள் நடத்தும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். தினந்தோறும் நடத்தப்படும் தாக்குதல்களால் அதிகளவில் பொதுமக்களே உயிரிழக்கின்றனர்." என்று அவர் தெரிவித்துள்ளார்.
"பாகிஸ்தானின் இறைமையை ஏனைய நாடுகள் மதிக்க வேண்டும். எமது பிரச்சினைகள் குறித்தும் பேச வேண்டும். பொருளாதார மேம்பாடு, தீவிரவாதம், சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து விரைவில் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ற)

## பாதுகாப்பு ஆலோசகராக சூசன் ரைஸ்

வோஷிங்டன், ஜூன் 7
அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக சூசன் ரைஸ் நியமிக்கப்படுவார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.
தற்போதைய, அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டாம் டானிலான் அடுத்த மாதம் ஓய்வு பெறவுள்ள நிலையில், சூசன் ரைஸ் அந்தப் பொறுப்பை ஏற்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமாவுக்கு நெருக்கமானவராகக் கருதப்படும் சூசன் ரைஸ், தற்போது ஐ.நாவுக்கான அமெரிக்க தூதராகச் செயற்படுகிறார்.
அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறை பதவியேற்கும்போது சூசன் ரைசை அமைச்சராக்க முயன்று ஒபாமா, எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியின் எதிர்ப்பால் பின்வாங்கினார். எனினும் தற்போது அமெரிக்க அரச நிர்வாகத்தின் முக்கிய பொறுப்புக்கு ஜனாதிபதி ஒபாமாவால் அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதற்கு செனட் சபையின் ஒப்புதல் தேவையில்லை என்பதால் சூசன் ரைஸ் நியமிக்கப்படுவதில் சிக்கல் ஏதும் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ற)

## வேண்டாம் அரைகுறை ஆடை

பீஜிங், ஜூன் 7
மிகக் குறைந்த ஆடைகளை அணிந்து பொது இடங்களுக்கு வர வேண்டாம் என்று சீனப் பெண்களுக்கு அந்நாட்டு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.
தற்போது கோடை காலம் என்பதால், மிகக் குறைந்த ஆடைகளைஅணிந்துகொண்டு பெண்கள் வெளியே வருகின்றனர். அதனால் பாலியல் குற்றச்சாட்டுக்கள் அதிகரித்துள்ளன என்கின்றனர் பொலிஸார். (ற)



## மிச்செலை எரிச்சலடைய வைத்த பெண்

அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி முகத்தை இப்படி மாற வைத்துவிட்டார் ஒரு பெண்.
அமெரிக்க அதிபர் ஒபாமாவின் மனைவி மிச்செல் நடைபெற்ற நிதி சேகரிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அங்கு அவர் பேசும்போது, முன் வரிசையில் அமர்ந்திருந்த ஒருவர் அடிக்கடி எழுந்து ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு சமஉரிமைகேட்டுகோஷங்களை எழுப்பிக் கொண்டு இருந்தார். இதனால் எரிச்சல் அடைந்த மிச்செல், "எனது பேச்சை கேளுங்கள் அல்லது மைக்கை எடுத்து விடுங்கள். நான் இங்கிருந்து சென்று விடுகிறேன். ஏதாவது ஒரு முடிவை நீங்களே எடுங்கள் என்று கூறிவிட்டு பேச்சை நிறுத்திவிட்டார்.
பிறகென்ன, இடையூறு ஏற்படுத்தியவரை பாதுகாப்பு வீரர்கள் வெளியேற்றினர். வெளியேறும்போது அவர், "நான் இறப்பதற்குள் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு சமஉரிமையை பெற்றுத் தருவேன்" என்று உரக்க கத்திக்கொண்டே இருந்தார். பின்னர், மிச்செல் மீண்டும் பேசத் தொடங்கினார்.(ற)





இரண்டாம் எலிசபெத் மகாராணி முடிசூடி 60 ஆண்டுகள் நிறைவு பெற்றதைக் கொண்டாடும் நிகழ்வு லண்டனில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றது. அதில் இளவரசர் வில்லியம் மற்றும் அவரது மனைவி கேதரின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சம்மதித்தது தென்கொரியா

## வடகொரியாவுடனான பேச்சுகள் விரைவில்

சியோல், ஜூன் 7
பேச்சுக்கள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்று வடகொரியா விடுத்திருந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதாக தென்கொரியா அறிவித்துள்ளது.
மோசமடைந்துள்ள உறவுகளை சீராக்கும் பொருட்டு சீனா, அமெரிக்கா இணைந்து கொள்ளும் பேச்சுகளில் கலந்துகொள்ள முடியும் என்று தென்கொரியா கூறியுள்ளது.
"தென்கொரியாவுடனான பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு காணமுடியும். அதற்கான கதவுகள் இன்னமும் திறந்தே இருக்கின்றன" என்று கடந்த வியாழக்கிழமை வடகொரியா தெரிவித்திருந்தது.
அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த தென்கொரிய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் "வடகொரியாவின் அழைப்புக் குறித்து தென்கொரியா சாதகமாகப் பரிசீலிக்கின்றது" என்று தெரிவித்தார்.



"பேச்சுக்கள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தென்கொரியாவும் விரும்புகின்றது. தற்போது நிறுத்தப்பட்டுள்ள கைத்தொழிற்பேட்டை திறக்கப்பட்டு மீண்டும் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்குவது தொடர்பில் முக்கியமாக கலந்துரையாடப்பட வேண்டிய தேவை உள்ளது" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.
இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் சீனா, அமெரிக்கா முன்னிலையில் நடத்தப்படும் என்று தெரியவருகின்றது. பேச்சுக்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் விரைவில் முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## அடித்தது அதிர்ஷ்டம் 84 வயதுப் பாட்டிக்கு!



நியூயோர்க், ஜூன் 7
"நான் அதிர்ஷ்ட லாபச் சீட்டு வாங்க வரிசையில் நின்றபோது, எனது வயதைப் பார்த்து பரிதாபப்பட்ட எனக்கு முன்னால் நின்றவர், எனக்கு வழிவிட்டு என்னை வாங்கச் சொன்னார். அவர் வழிவிட்டதால் தான் எனக்கு இந்தப் பரிசு கிடைத்தது" என்கிறார் அதிர்ஷ்ட லாபச் சீட்டில் பரிசு பெற்ற 84 வயதுப் பாட்டி.
பரிசுத் தொகை எவ்வளவு தெரியுமா? 590 மில்லியன் அமெரிக்க டொலர்!. அமெரிக்காவின் புளோரிடா நகரிலேயே பாட்டிக்கு அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது. வழிவிட்டவர் தான் பாவம்! அவர் எங்கிருக்கிறாரோ..? (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

அதிபர்

# வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி (SLPS-2:I)

அவர்களின்

# மணிவிழா சிறப்பு மலர் - 07.06.2013

With Best Wishes

### குருக்களின் ஆசியுரை



மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற குறிக்கோளுடன் வாழ்வோர் பலரில் வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி அவர்களும் ஒழுகுகின்றார் என்பதில் எத்தகைய ஐயமுமில்லை.

ஏழு பிறப்புகளுக்கும் தொடர்வதான கல்விச் செல்வத்திற்கான கல்விச் சேவையைக் கண்களாகக் கொண்டு கருமமாற்றி வருகின்றார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கிணங்க, எமது சமயம் காட்டும் வழியில் மக்களுக்குச் சேவை செய்பவர்களுள் ஒருவராக நமது மதிப்புக்குரிய அதிபர் வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி காணப் படுகின்றார் என்று கூறினால் மிகையாகாது.

எனவே கல்விச் சேவை, சமூக சேவை என்பவற்றைத் தமது இரு கண்களாகக் கொண்டு கருமமாற்றிவரும் அதிபர் அவர்கள் இப்பாடசாலையை விட்டு இளைப்பாறினாலும் அவரது சேவை என்றென்றும் தொடர, பல காலம் சிறப்புடன் வாழ, இறைவனது திருவருள் கடாட்சம் பெற அடியேன் நல்லாசிகளைக் கூறி அமர்கின்றேன்.

சிவஸ்ரீ தி. குமாரசாமிக்குருக்கள்
(பிரதம குரு, சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்)
"ஸ்ரீசக்தி கிரியா குருமணி"

### வட மாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி




யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் வே.விநாயகமூர்த்தி அவர்களின் மணிவிழா ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

வே.விநாயகமூர்த்தி அதிபர் அவர்கள் 05.10.2009 ஆம் திகதியிலிருந்து இன்றுவரை இக்கல்லூரியில் சேவையாற்றி தனது அரச சேவையிலிருந்து இளைப்பாறுகின்றார். நல்லொழுக்கமும், நற்பண்புகளும், உயர் சமூக விழுமியங்களும் கொண்ட கல்வியறிவுடைய சமூகத்தினை உருவாக்க வேண்டும் என்ற கல்வியின் தூரநோக்கிற்கு அடித்தளமிட்டு வழிகாட்டியாகவும், முன்னுதாரணமாகவும் செயற்பட்டு தன்னை அர்ப்பணித்த இவரது கல்விப் பணியினை வாழ்த்துவதுடன் இப்பணி மேலும் தொடர, நீண்ட ஆயுளுடன் வாழ எல்லாம் வல்ல பரம்பொருளின் அருட்கடாட்சம் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

சி. சத்தியசீலன், செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.

### உயர் வாண்மைத்துவப் பண்பு கொண்டவர்



யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் அதிபர் வே.விநாயகமூர்த்தி அவர்கள் மணிவிழாக் காணும் இவ்வேளையில் அவரது சேவையைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எனது நீண்ட கால நண்பன் என்ற வகையில் அவரை நன்கு அறிவேன். குறுகிய காலத்தில் கல்லூரியின் அதிபராக மட்டுமன்றி செயல்வீரனாகவும் செயற்பட்டவர்.

இன்று இக்கல்லூரி மாணவர்கள் பல்வேறு சாதனைகளை மாகாண ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் சாதித்து வருகின்றனர். இப் பெருமையை ஏற்படுத்த அல்லும் பகலும் அயராது உழைத்த ஆளுமை மிக்க அதிபராக இவரை இனங்கண்டு கொண்டேன். இக் கல்லூரியின் புகழும் வே.விநாயகமூர்த்தியின் சாதனைகளும் என்றென்றும் நிலைத்திருக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வ.செல்வராசா,
மாகாண கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்.

### தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



மணிவிழாக்காணும் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் அதிபர் வே.விநாயகமூர்த்தி அவர்களை வாழ்த்துவதிலும், மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் அளவிலா ஆனந்தம் அடைகின்றேன்.

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் அதிபர் வே.விநாயகமூர்த்தி அரசியல் விஞ்ஞான பாட விரிவுரையாளராக, ஆசிரியராக, நல் அதிபராக நிறைவான கல்விப் பணியாற்றித் திருப்தியடைந்துள்ளார்.

அவருடைய சேவைக்காலம் யா/வீரசிங்கம் மத்திய கல்லூரியில் குறுகிய சேவைக்காலமாக இருந்த போதிலும் கல்லூரியின் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல நல்ல பணிகளை ஆற்றி வரலாற்று நாயகனாகத் திகழ்வது மகிழ்வைத் தருகின்றது.

நிறைவான பணியாற்றி மணிவிழாக் காணும் அதிபர் சகல ஐஸ்வரியங்களும் பெற்று ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ இறைவனைப் பிரார்த்தித்து பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

க.கிருஷ்ணகுமார்,
வலயக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.

### செயற்திறன் மிக்க செம்மலை வாழ்த்துகிறேன்.



யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் வளர்ச்சிப் போக்கில் அர்ப்பணிப்போடு கடமையாற்றிய அதிபர்கள் வரிசையில் மைல்கல்லாகத் திகழும் அதிபர் வே. விநாயகமூர்த்தி அவர்கள் மணிவிழாக்காணும் இந்நன்நாளில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

இவரது காலத்தில் கல்லூரி 1 AB பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டமை, உயர்தர கணித விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டமை, மத்திய கல்லூரியாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க சாதனைகளாகும். இந்த வகையில் அவருக்கு நிகர் அவரேதான்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பல சாதனைகள் புரிந்து தலை நிமிர்ந்து நிற்கும் இக்கல்லூரியின் செயற்திறன் மிக்க அதிபர் திரு.வே.விநாயகமூர்த்தி அவர்களின் பணி நயக்கும் மணிவிழா சிறப்படைய வாழ்த்துவதோடு, வேம்படி விநாயகனின் அருளையும் வேண்டி அன்பான வாழ்த்துக்களையும் கூறுகின்றேன்.

ந.சிவானந்தம்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சாவகச்சேரி, தென்மராட்சி.



### அதிபர் வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி

(B.A Hons, Dip. in Edu.,M.Ed, SLPS 2 -I )

**பெற்றோர்:** சின்னையா வேலுப்பிள்ளை
வேலுப்பிள்ளை தில்லைநாயகி

**பிறப்பு** : 07.06.1953

**கல்வி** :

**ஆரம்பக்கல்வி** - யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
**இடைநிலைக் கல்வி**- யா/ வரணி மகாவித்தியாலயம்
**உயர்தரக்கல்வி** - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
**பட்டப்படிப்பு** - பேராதனைப் பல்கலைக்கழகம்
ஆசிரியர் சேவைக்கான பயிற்சி
**பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா** - யாழ் பல்கலைக்கழகம்
**கல்வியியல் முதுமாணி** - யாழ். பல்கலைக்கழகம்

**சேவை விவரம்:**


**விரே. சேவை :** விரிவுரையாளர் (அரசியல் பாடத்துறை)
பேராதனைப் பல்கலைக்கழகம்
01.02.1978-15.08.1982

**ஆசிரிய சேவை :** கம்பஹா/அல்.முபாரக் மத்திய கல்லூரி
12.03.1984-14.08.1989
யா/வரணி மகா வித்தியாலயம்
ஆசிரியர், உபஅதிபர்
15.08.1989-31.12.1994
யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
01.01.1995 - 31.09.1996

**அதிபர் சேவை :** யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்
01.10.1996-14.02.1999
யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்
15.02.1999 - 04.10.2009
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
05.10.2009 - இன்று வரை

*அகவை எதுவரினும் அசைவில் உடல் உளம் பேணு*
*தகமை அதுகொண்டு தரணிதனில் உயர்கல்வி*
*மிகவை எனக்காட்டி மிளிர்ந்தொளிர்ந்த அதிபர் ஐயா*
*உவகை உடன் நீங்கள் உயர்ந்து நீடு ஊழிவாழ்க!*

### பாடசாலை வரலாற்றின் மைல்கல்



இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்து நெற்கதிர்கள் குலுங்கி முக்கனிகள் பொழியும் தென்மராட்சியில் அமைந்ததே யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி. இன்று இக் கல்லூரி பவள விழாக்கண்டு மத்திய கல்லூரியாகத் திகழ்கிறது. இந்த வளர்ச்சியை எட்டுவதற்கு காலத்திற்குக் காலம் பலர் அளப்பரிய சேவையினைச் செய்து வந்திருக்கிறார்கள். இந்த வரிசையில் மிகமிகக் குறுகிய காலம் சேவை செய்தாலும் அதிபர் வே.விநாயகமூர்த்தி அவரது சேவை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். பௌதீக வளம், ஆளணி வளம் எனப் பல வளங்களைப் பெற்று வித்தியாலயத்தைக் கல்லூரியாக்கிய பெருமை இவரையே சாரும். இந்த ஊரும் உலகும் உள்ளவரை இவரது புகழும் சேவையும் உயிர்பெற்று உலாவிய வண்ணம் இருக்கும். இன்று இவர் தனது அறுபதாவது வயதில் மணிவிழாக் காணும் நாயகன், எல்லாச் சிறப்பும் பெற்று வாழ இறைவனது ஆசிகள் என்றும் கிட்டட்டும்.

வி.ரேந்திரன்,
பழைய மாணவர் சங்கச் செயலாளர்.

### பணிச் சிறப்பினால் மனம் நிறைந்த கல்வியியலாளன்




தன்னுடைய பணிச் சிறப்பினால் மனதில் நிறைந்தவர் யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் வே.விநாயகமூர்த்தி அவர்கள், கல்வியியலாளராகத் தொழிற்படத் தொடங்கிய காலத்திலிருந்து ஒழுங்கு முறையில் பணியாற்றித் தனக்கெனத் தனியான அடையாளத்தைப் பெற்றவர்.

பாடசாலையை மகாவித்தியாலயமாகப் பொறுப்பெடுத்த வே.விநாயகமூர்த்தி இன்று மத்திய கல்லூரியாகத் தரமுயர்த்த உழைத்திருக்கிறார். இப் பணியின் பெறுமதி எத்தகையது? அதைப் பொறுப்புடன் செயற்படுத்துவது எவ்வாறு? அப்பொறுப்பைச் செம்மையாகச் செய்து வெற்றியடைய வைப்பதற்கான வழி முறைகள் என்ன? வெற்றிகரமான செயற்பாட்டை யாரை? எப்படி அணுகுவது? போன்றவிடயங்களில் மிகத் தெளிவான நிலைப்பாட்டை எடுத்தவர். இதை அவரிடத்தில் நல்ல பண்பாகவும் சிறப்பாகவும் கண்டிருக்கின்றேன்.

தென்மராட்சியில் பிறந்து, அங்கேயே கல்வி கற்று, தென்மராட்சிப் பிரதேசத்திலேயே சிறந்த பல பணிகளை ஆற்றி சேவைக் கால ஓய்வைப் பெறும் வே.விநாயக மூர்த்திக்கு என்னுடைய மனம் நிறைந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முருகேசு சந்திரகுமார்,
நாடாளுமன்ற உறுப்பினரும்,
நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும்.

### வாழ்த்துவதால் வாழ்த்துபவருக்கே பெருமை



அகவை அறுபதை நிறைவு செய்து மணிவிழாக்காணும் யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் வே.விநாயகமூர்த்தி அவர்களை வாழ்த்துவதால் வாழ்த்துபவருக்கே பெருமை.

அதிபர் அவர்கள் யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபராகப் பதவி வகித்த காலம் மிகக் குறுகியதாக இருந்தாலும் அக்குறுகிய காலத்தினுள் கல்லூரியை இமாலய வளர்ச்சிக்கு இட்டுச் சென்றுள்ளார். இதற்குப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், கல்வி அதிகாரிகள், அரசியல் வாதிகளுடன் கொண்டிருந்த நல்லுறவே முக்கிய காரணமாகும்.

எனவே வே.விநாயகமூர்த்தி அதிபர் அவர்கள் பாடசாலைக்குச் செய்த அரும்பணியினை பாடசாலைச் சமூகத்தால் ஒருபோதும் மறக்க முடியாது. கல்லூரி நிலைத்திருக்கும் காலம்வரை அதிபர் அவர்களின் பெயரும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இவரது சேவை நீண்ட காலம் எமது மண்ணுக்கும், மக்களுக்கும் குறிப்பாகக் கல்வி உலகத்துக்கும் தொடர்ந்து கிடைக்கவும், சகல சௌபாக்கியங்களுடன் இவர் நீடூழிகாலம் வாழவும் இறைவனைப் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க.கணேஸ்வரன்,
பிரதித் தொழில் ஆணையாளர், வடமாகாணம்.

### பிரதி அதிபர் உள்ளத்திலிருந்து........



எமது கல்லூரியின் அதிபர் வே. விநாயகமூர்த்தி அவர்கள் கல்வித்துறையில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உதவி விரிவுரையாளராக, ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக இருந்து அரிய பல சேவைகளைச் செய்து 2009ஆம் ஆண்டு இக்கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இவரது அர்ப்பணிப்பான சேவை பல வழிகளிலும் இக்கல்லூரிக்குக் கிடைத்தது. வெளிநாடுகளில் பழைய மாணவர் சங்கங்கள் உருவாக்கம், பௌதீக வளங்களில் அபிவிருத்தி, அத்தோடு சேர்ந்து கற்றல் கற்பித்தல் அபிவிருத்தி நோக்கியதாக இவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன.

ஆற்றல் ஆளுமை தற்துணிவு கொண்ட இவர் சமூகத்தில் நல்ல உறவுகளைப் பேணி அதன் மூலம் கல்லூரியை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்ற இவரது ஓய்வுக்காலம் சிறக்க வேண்டுமென வாழ்த்தி அவரது பணியை மனமுவந்து பாராட்டுகின்றேன.

வா. சந்திரதேவன்
(பிரதி அதிபர்)
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

### நிகரற்ற சாதனையாளன்




யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் வேலுப்பிள்ளை விநாயமூர்த்தி அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் அதிபராக உயர்வு பெற்று வந்த காலத்தில் பல்வேறு சேவைகளைப் புரிந்து மத்திய கல்லூரியாக உயர்வு பெறு வதற்குக் காரணமாக இருந்தார். அவரின் புத்திக் கூர்மையும் செயற்திறனும் சமயோசிதமாக முடிவெடுக்கும் தன்மையும் மற்ற வர்களிடம் இல்லை. அவர் எங்கு சென்றாலும் அவரது வாக்கு வன்மையால் செல்லும் செயல்கள் யாவும் வெற்றியாகவே முடி வுற்றன.

இன்று அறுபது அகவை அடைந்து ஓய்வுபெறவுள்ள வேளையிலும் கல்லூரி வளர்ச்சிக்கு அயராது உழைத்த அதிபர் வே.விநாயகமூர்த்தி அவர்களது ஓய்வுக்காலம் சிறக்கவும், மேலும் உயர்நிலை பெறவும் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கா.கந்தசாமி,
அதிபர், யா/ மீசாலை வீரசிங்கம், ஆரம்ப பாடசாலை.

### செயற்திறன் மிக்க எங்கள் செம்மல்



யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் அதிபராக 05.10.2009 இல் கடமையேற்ற வே.விநாயகமூர்த்தி அதிபர் அவர்கள் மூன்று மாடிக்கட்டடம், விஞ்ஞான ஆய்வுகூடம், விளையாட்டு மைதானத்திற்கான காணி கொள்வனவு போன்ற வளங்களை சேர்ப் பதில் ஆற்றிய அளப்பரிய சேவைகள் மெச்சத்தக்கவையாகும்.

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் தோளோடு தோள் நின்று உழைத்து 07.06.2013 இல் மணிவிழாக் கொண்டாடும் வே.விநாயகமூர்த்தி அதிபர் அவர்களை நல்ல ஆரோக்கியமாக, மகிழ்வோடு வாழ எல்லாம் வல்ல வேம்படி விநாயகனை வேண்டி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

ந.சிவானந்தம், செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

## யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை சமூகம்,
## யா/மீசாலை வீரசிங்கம்மத்திய கல்லூரி சமூகம்.

(C/9194)(10,6,3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச சபையின் வீதிகள் பல புனரமைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 7
நல்லூர் பிரதேச சபையின் நிதியில் இருந்து வீதிகள் பல புனரமைக்கப்படவுள்ளன.
கல்வியங்காடு, வாலையம்மன் வீதி, சேர்ச்லேன், திருநெல்வேலி, வைரவர் கோயில் வீதி, பாற்பண்ணை வீதி, பதிவாளர் வீதி, குறுக்கு வீதி,
கொக்குவில் நேதாஜி முன்வீதி, அப்பையா வீதி, தலையாழி வைரவர் கோயில் வீதி, நாராயணன் கலட்டி முன் ஒழுங்கை, வைரவர் அம்மன் வீதி, பொன்னையா முதலாம், இரண்டாம் ஒழுங்கை, அலுமினியம் தொழிற்சாலை வீதி, பொற்பதி நேதாஜி அருகிலுள்ள வீதி, பொன்னையா வீதி, தவறணை குறுக்கு ஒழுங்கை, பொன்னையா வீதியின் குறுக்கு ஒழுங்கை, கோண்டாவில் ஞானவைரவர் வீதி, குமரகோட்டம் குறுக்குவீதி, எம்.எஸ்.ஒழுங்கை குறுக்குவீதி, நெட்டிலிப்பாய் கோயில் முன் வீதி, பவர்லூம் வீதி, வாமஸ் லேன், சென்.செபஸ்தியார் முதலாம், இரண்டாம் ஒழுங்கை, நெட்டிலிப்பாய் வீதி, இணுவில் அருணகிரிநாதர் வீதி ஆகியனவே புனரமைக்கப்படவுள்ளன. (த-7)

# பருத்தித்துறையில் மீண்டும் அதே இடத்தில் காந்தி சிலை

## நடவடிக்கையில் நகர சபை

வடமராட்சி, ஜூன் 7
புதிதாக வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்படும் மகாத்மா காந்தியின் சிலையை பருத்தித்துறைநகரில்முன்னர் இருந்த இடத்தில் மீண்டும் நிறுவ நகர சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
நகரத்தின் மையப் பகுதியில் புதிய நவீன சந்தையின் தெற்குப் புறத்தில், பஸ் நிலைய நுழை வாயிலில் தற்போது அமைந்துள்ள மகாத்மா காந்தியின் சிலை வீதி அகலிப்புக்காக அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
வீதி அகலிப்புக்காக தற்போதைய சிலையை அப்புறப்படுத்துவதால் அதற்குப் பதிலாக புதிய சிலை ஒன்றை வடிவமைத்து நிர்மாணிப்பதற்கான செலவை மாற்றீடாக வீதி அபிவிருத்தி அதிகார சபை பருத்தித்துறை நகரசபைக்கு வழங்க முன்வந்துள்ளது.
இதனைக் கருத்தில் கொண்டு மகாத்மா காந்தியின் புதிய சிலை ஒன்றை வடிவமைத்து நிர்மாணித்து போருக்கு முன்னர் மகாத்மா காந்தியின் சிலை இருந்த நவீன சந்தையின் வடக்குப் புறத்தில் துறைமுகத்தை நோக்கியபடி இருந்த அதே இடத்தில் அமைக்க நகர சபை தீர்மானித்துள்ளது.
காந்தியின் புதிய சிலையை வடிவமைப்பதற்காக இந்திய சிற்பாசாரியர்களிடம் நகர சபையால் மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு கிடைத்ததும் அதனை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பித்து



அதற்கான நிதியை சபை பெற்றுக்கொண்டு புதிய சிலை வடிவமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.
1950 களில் பருத்தித்துறை நகரில் சந்தைக்கு வடக்கு மேற்கு மூலையாக நிறுவப்பட்டிருந்த மகாத்மா காந்தியின் சிலை கடந்த போரின் போது இடித்துச் சேதமாக்கப்பட்டிருந்தது.
1998 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பருத்தித்துறை நகரில் நகரசபையைக் கைப்பற்றியிருந்த புளொட் அமைப்பினது நிர்வாகம் சேதமாக்கப்பட்ட சிலைக்குப் பதிலாக காந்தியின் முழு உருவம் கொண்ட சிலையை தற்போது உள்ள நவீன சந்தையின் தெற்குப் புறத்தில், பஸ் நிலைய நுழை வாயிலில் நிறுவியிருந்தது. (வ-8)

## ஓட்டம் பிடித்த சாரதிக்கு தண்டம்

தென்மராட்சி, ஜூன் 7
வீதியில் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் வந்த வாகனத்தை பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியபோது நிறுத்தாமல் சென்றுள்ளார்.
வாகனத்தை துரத்திச் சென்ற பொலிஸார் அதனை நிறுத்தி சோதனையிட்டபோது அதன் சாரதி மதுபோதையில் காணப்பட்டதுடன் சாரதிய அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வாகன வரி போன்றவை இல்லாதமையும் தெரியவந்தது.
மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த குறித்த வாகனச் சாரதிக்கு எதிராக ஐந்து குற்றச்சாட்டுக்களுடன் சாவகச்சேரி நீதிமன்றில் செவ்வாயன்று முற்படுத்தினர். எதிரி ஐந்து குற்றங்களையும் ஒப்புக் கொண்டதையடுத்து 19 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## மண்டபத்துக்கு அடிக்கல்



மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள பிரார்த்தனை மண்டபம், வகுப்பறைத் தொகுதி ஆகியவை கொண்ட மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்லை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் நடுகிறார். (வ-9)

## 5 பிரதேச செயலகங்கள் யாழ்ப்பாணத்தில் தெரிவு

### 'வாழ்வின் எழுச்சி' சந்தையில்

அச்சுவேலி,ஜூன் 7
புதுவருடத்தை முன்னிட்டு சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றங்களால் நடத்தப்பட்ட "புத்தாண்டு வாழ்வாதார எழுச்சி சந்தை"யில் யாழ்.மாவட்டத்தில் 5 பிரதேச செயலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
யாழ்.மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவிலும் "வாழ்வின் எழுச்சி (திவிநெகும) சந்தை நடைபெற்றது. இவை குறித்து மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் பணிமனை மேற்கொண்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
முதலாம் இடம்-கோப்பாய் பிரதேசம், இரண்டாம் இடம்-சங்கானைப் பிரதேசம், மூன்றாம் இடம்-உடுவில் பிரதேசம், நான்காம் இடம்-தெல்லிப்பழை பிரதேசம், ஐந்தாம் இடம்-வேலணைப் பிரதேசம். (ஒ-11)

## பெற்றோல் 'கான்' தீப்பற்றி வெடித்தது
### தாய், மகள் காயம்

தென்மராட்சி, ஜூன் 7
வீட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த பெற்றோல் கான் தீப்பிடித்து வெடித்ததில் தாயும் மகளும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் ஞாயிறன்று வரணி குடமியனில் இடம்பெற்றது.
மோட்டார் சைக்கிளுக்கு நிரப்புவதற்காக வாங்கிக் கொண்டு வரப்பட்ட பெற்றோலை வீட்டுக்குள் வைத்திருந்த நிலையில் குப்பி விளக்குடன் வீட்டுக்குள் பொருள்கள் தேடியபோது பெற்றோல் கான் தட்டுப்பட்டு நிலத்தில் சிந்தியதால் திடீரென தீப்பிடித்தது. இதனால் குடும்பப் பெண்ணின் உடையில் தீப்பற்றி எரிகாயங்களுக்குள்ளானதாகவும் அருகில் நின்ற குழந்தையும் சிறு காயங்களுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்பட்டது.
எரிகாயங்களுக்கு இலக்கான தர்மரத்தினம் இராசமலர் (வயது-45) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-9)

### நாற்றுத் தேங்காய்களை வழங்குவோரின் தென்னைமரங்கள்

## அபிவிருத்திச் சபை பார்வையிட்ட பின்பே தேங்காய் பிடுங்க அனுமதி

வரணி,ஜூன் 7
நாற்றுத் தேங்காய்களை வழங்கக்கூடியவர்களின் தென்னை மரங்கள் தென்னை அபிவிருத்திச் சபையினரால் பார்வையிட்டு அடையாளப்படுத்தப்பட்ட பின்பே அதிலிருந்து தேங்காய்கள் பிடுங்க உத்தேசிக்கப்படும் என்று சபை முகாமையாளர் தெரிவித்தார்.
கொடிகாமம் கமநல சேவை நிலையத்தில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற தென்னைப் பயிர்ச் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டது. கலந்துரையாடலின் போது மேலும் அவர் தெரிவித்ததாவது:-
நாற்றுத் தேங்காய்கள் வழங்கக் கூடியவர்கள் சபையுடன்



தொடர்பு கொள்ள வேண்டும். தென்மராட்சிப் பிரதேசங்களான வரணி, மிருசுவில், எருவன், கச்சாய் ஆகிய பகுதிகளில் தென்னை மரத் தோட்டங்கள் உள்ள உரிமையாளர்கள், தென்னை பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள், மேற்படி தென்னை அபிவிருத்திச் சபையில் உள்வாங்கப்பட்ட பட்டதாரிகள் ஆகியோரிடம் தொடர்புகொண்டு தகவல்களைத் தெரிவிக்கலாம்.
நாற்றுத் தேங்காய்களை வழங்கக் கூடியவர்களின் தென்னை மரங்கள் சபையினரால் பார்வையிடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட பின்பே அதிலிருந்து தேங்காய் பறிக்க முடியும். அதே வேளை நிலவும் தேங்காய் விலையைப் பொறுத்து அதனிலும் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும்-என்றார்.
கலந்துரையாடலில் தென்னைப் பயிர்செய்கை சபையின் வடபிராந்திய முகாமையாளர் மற்றும் தென்னை பயிர் செய்கை சபை உத்தியோகத்தர் எஸ். ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-122)

## களவாகத் தேங்காய் பிடுங்கியோர் சிக்கினர்



கொடிகாமம், ஜூன் 7
தென்னம் தோட்டம் ஒன்றில் களவாக தேங்காய்கள் பிடுங்கிய நான்கு இளைஞர்கள் கையும் களவுமாக பிடிபட்ட சம்பவம் வரணி இடைக்குறிஞ்சி பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-
நான்கு இளைஞர்கள் ஒன்று சேர்ந்து ஆள்கள் நடமாட்டம் இல்லாத பகுதியிலுள்ள தென்னம் காணி ஒன்றில் தேங்காய்களைப் பறித்துள்ளனர். பின்பு அவற்றை ஒன்று சேர்த்து தேங்காய் உரித்துக் கொண்டிருந்த சமயம் அயல் காணி உரிமையாளர் அங்கு வந்துள்ளார். இளைஞர்களின் நடவடிக்கையை அவதானித்த அவர் கூக்குரலிட்டு சத்தம் போட்டார். இதனால் கலவரமடைந்த திருடர்கள் தேங்காய்களை கைவிட்டுத் தப்பி ஓடிவிட்டனர்.
பின்னர் அவர்கள் இனம் காணப்பட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் தகவல் கொடுக்கப்பட்டது.
சம்பந்தப்பட்ட இளைஞர்கள் தாம் செய்த குற்றத்தை ஒத்துக் கொண்டதன் பேரில் அந்தப் பகுதியில் உள்ள இந்து ஆலயம் ஒன்றுக்கு குறித்த தொகை ஒன்றை தண்டமாக செலுத்தும்படி கோரப்பட்டது. (வ-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
07/06/2013

# பொது பல சேனா கல்முனையில் கால் பதிக்க அனுமதிக்கலாமா?

## கூட்டத்தை தடுத்து நிறுத்துமாறு மு.கா. வேண்டுகோள்

கல்முனை, ஜூன் 7
சிங்கள கடும்போக்குவாத அமைப்பான பொது பல சேனா கல்முனையில் ஊடுருவ மேற்கொள்ளும் முயற்சியானது முஸ்லிம்களை சீண்டி கலவரத்துக்கு வழியேற்படுத்தும் சதித் திட்டமாகும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத்தலைவர் ஏ.எம்.ஜெமீல் தெரிவித்தார்.

அதனை அரசு அனுமதிக்குமாயின் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் என்று அவர் எச்சரித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிக்கப்பட்டிருப்பதாவது:-

பொது பல சேனா அமைப்பு நாளைமறுதினம் 9 ஆம் திகதி கல்முனையில் பிரசாரக் கூட்டமொன்றை நடத்தவிருப்பதாக இணையத்தளங்களில் தகவல்கள் வெளிவந்துள்ளன. இது உண்மையாக இருக்குமாயின் அந்தக் கூட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதிராக விசமத்தனமான பிரசாரங்களை மேற்கொண்டு ஹலால் தொடக்கம் ஹபாயா வரை முஸ்லிம்களின் புனித மார்க்க விடயங்கள் அனைத்திலும் கைவைத்து முஸ்லிம் மக்களை நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ள பொது பல சேனா அமைப்பினர், இந்த நாட்டில் சிங்கள- முஸ்லிம் கலவரமொன்றை ஏற்படுத்துவதற்கான பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளனர்.

அரசின் பங்காளிக் கட்சியாக இருக்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைமைத்துவமும் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் முஸ்லிம் மக்களை அஹிம்சா வழியில் நெறிப்படுத்துவதற்கும் பலத்த சவால்களுக்கு மத்தியில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.



இதேவேளை, கிழக்கு மாகாண சபையில் நாம் பொது பல சேனா அமைப்புக்கு எதிராக கண்டனப் பிரேரணையை சமர்ப்பித்து அதனை ஏகமனதாக நிறைவேற்றி அரசின் கவனத்தை ஈர்த்து பேரினவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினோம்.

அரசின் பங்காளிக் கட்சி என்பதற்காகவும் அதன் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் அமைச்சராக பதவி வகித்துக் கொண்டிருக்கிறார் என்பதற்காகவும் முஸ்லிம்களுக்கு எதிரான பேரினவாதிகளின் கொடூர நடவடிக்கைகளை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கவில்லை.

அதனை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் அனுமதிக்கவும் மாட்டார்கள்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் வர்த்தக கேந்திர நகரமாக திகழ்கின்ற கல்முனையில் களமிறங்கி முஸ்லிம்களின் ஆத்திரத்தைக் கிளறி வன்முறைகளையும் கலவரங்களையும் தூண்டி விடுவதற்கு பொது பல சேனா எத்தனிக்கிறது.

இவ்வாறான ஒரு சதித் திட்டத்துடனேயே பொது பல சேனா அமைப்பினர் கல்முனையில் பொதுக் கூட்டமொன்றை நடத்துவதற்கு முயற்சிப்பதாகக் கருதுகின்றோம். இதற்கு அரசு ஒரு போதும் அனுமதி வழங்கக் கூடாது.

பேரினவாத அமைப்புகளின் இவ்வாறான நடவடிக்கைகளை அரசு தொடர்ந்தும் அனுமதிக்குமாயின் முஸ்லிம்களின் அதிகபட்ச ஆணையைப் பெற்று கிழக்கு மாகாண ஆட்சிக்கு ஆதரவு கொடுத்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுத் தீர்மானங்களை எடுக்க நேரிடும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி)

## எருமைகளைக் கொண்டு சென்ற இருவருக்கு சிறை வாசம்

அம்பாறை, ஜூன் 7
அம்பாறை பிரதேசத்தில் சட்ட விரோதமாக எருமை மாடுகளை கொண்டுசென்ற இருவருக்கு ஒருவருட கடூழிய சிறைத் தண்டனையும் 10 வருடம் ஒத்திவைக்கப்பட்ட தண்டனையும் ஒரு லட்சத்து 3 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி செல்வி எம்.எஸ்.



பிரிங்கி புதன்கிழமை தீர்ப்பளித்தார்.

2010ஆம் ஆண்டு அம்பாறை, இக்கல் ஓயா பிரதேசத்தில் இருந்து வரிபத்தான்சேனை பிரதேசத்துக்கு 43 எருமை மாடுகளை சட்டவிரோதமாக கால்நடையாக அழைத்துச் சென்றபோது தமண பொலிஸார் இருவரை கைதுசெய்ததுடன் மாடுகளையும் மீட்டனர். அவர்களுக்கு எதிராக பொலிஸார் அம்பாறை, நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

## வீடுகளை வழங்கக் கோரி

## பிரதேச செயலகத்துக்குள் தஞ்சம் புகுந்தனர் மக்கள்

அக்கரைப்பற்று, ஜூன் 7
சுனாமியால் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று மக்களுக்காக நுரைச்சோலையில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தை வழங்கக் கோரி புதன்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செய லகத்துக்குள் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கடந்த சுனாமியின் போது வீடுகளை இழந்த குடும்பங்கள், அக்கரைப்பற்று நுரைச் சோலையில் தங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை இதுரை வழங்காமல் இருப்பதைக் கண்டித்தும், அதனை வழங்குமாறு கோரியுமே இவ்வாறு தங்களின் படுக்கை, இருப்பு மற்றும் சமையலுக்குரிய பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அக்கரைப் பற்று பிரதேச செயலகம் முன்பாக தங்களின் இருக்கைகளை அமைத்துக் கொண்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக பிரதேச செயலர் அம்பாறை மாவட்ட அரச அதிபருக்குத் தெரிவித்தும் கூட அரச அதிபர் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை. எங்களுக்கான வீடுகளை தரும்வரையில் இந்த இடத்தை விட்டு நகரப் போவதில்லை என்று மக்கள் தெரிவித்தனர். (ச)



எமக்கு வீடுகளை வழங்கும் வரை இடத்தை விட்டு நகர மாட்டோம்



கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப்பின் புதிய சிந்தனை நோக்கிய பயணத்தில் விளையாட்டுக் கழகங்களை ஊக்குவிக்கும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சாய்ந்தமருது சஹ்றியன் விளையாட்டுக் கழகத்தினருக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வியாழக்கிழமை வழங்கப்பட்டன. இந்த விளையாட்டு உபகரணங்களை முதல்வரிடமிருந்து விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எஸ்.எச்.ஜிப்றி பெற்றுக் கொள்கிறார்.

## ஓட்டமாவடி அரபுக் கல்லூரிக்கு இனம்தெரியாதோர் தீவைப்பு

### விசேட பொலிஸ் குழு விசாரணை

வாழைச்சேனை, ஜூன் 7
மட்டக்களப்பு, ஓட்டமாவடி சிறாஜ் அரபுக் கல்லூரி வியாழக்கிழமை அதிகாலை இனம் தெரியாத நபர்களினால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் அதிகாலை 3.30 மணி அளவில் நடைபெற்றிருக்க வேண்டும் என்று தமது ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.



சேதத்துக்கு உள்ளான சிறாஜ் அரபுக் கல்லூரி

இந்த அரபுக் கல்லூரியில் குர்ஆன் மற்றும் மார்க்கக் கல்வியைக் கற்கின்ற மாணவர்களுக்கான இந்த வருடத்துக்குரிய தவணை விடுமுறை கடந்த 29 ஆம் திகதி வழங்கப்பட்டு நாளை சனிக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட விருந்த நிலையில் அரபுக் கல்லூரி தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

அதனால் அனைத்துப் பொருள்களும் தீயில் எரிந்து சேதமடைந்துள்ளதுடன், மாணவர்களின் விடுதியில் இருந்த கட்டில்கள் உட்பட அனைத்துப் பொருள்களும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்த அரபுக் கல்லூரி தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவம் ஓட்டமாவடி, வாழைச்சேனை, மீராவோடை உட்பட பல பிரதேசங்களிலும் பரபரப்பையடுத்து அதனைப் பார்வையிடுவதற்கு பொது மக்கள் திரண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பில் இருந்து வருகைதந்த விசேட பொலிஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.(ஏ)

## 7,500 ரூபா அபராதம்

அம்பாறை, ஜூன் 7
சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த ஒருவருக்கு 7,500 ரூபா அபராதத்தை அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.பிரிங்கி விதித்துள்ளார்.

அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேகநபரை புதன்கிழமை முன்னிலைப்படுத்தியபோதே நீதிவான் இவ்வாறு அபராதம் விதித்துள்ளார்.

அம்பாறை, பன்னலகம பிரதேசத்தில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்துகொண்டிருந்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபர் மதுபானத்துடன் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று தமண பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க தூதரை வெளிப்படையாக பாராட்டாத மஹிந்த

கொழும்பு,ஜூன் 7
உலக புவி நாளன்று கொழும்பு நகரில் குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபட்ட வெளிநாட்டுத் தூதர் ஒருவரின் முன்னுதாரணத்தை மதிப்பதாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் புதன்கிழமை நடைபெற்ற சூழல் பாதுகாப்பு வழிகாட்டிகளுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு பாராட்டியுள்ளார்.

சில மனிதர்கள் தம்முடன் தொடர்பில்லாத எல்லா விடயங்களிலும் தலையிட முயற்சி செய்தாலும். அவர்களின் நல்ல விடயங்களை பாராட்ட வேண்டும் என்று அவர் கூறினார்.

எனினும் அவரது பெயரை ஜனாதிபதி வெளியிடவில்லை. உலக புவி நாளன்று காலிமுகத்திடலில் அமெரிக்கத் தூதர் மிச்சேல் ஜே சிசன் குப்பைகளை அகற்றும்



காலிமுகத்திடலில் அமெரிக்கத் தூதர் குப்பைகளை அகற்றும் பணியில்.....

பணியில் ஈடுபட்டிருந்தார்.

அமெரிக்கத் தூதரின் பல்வேறு செயற்பாடுகள் மற்றும் கருத்துகளால் இலங்கை அரசு அவர் மீது அதிருப்தி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு புதன்கிழமை சீனா சென்றடைந்த பிரதமர் தி.மு.ஜயரத்னவை சன்சஷ் சர்வதேச விமான நிலையத்தில் அந்தநாட்டு முக்கியஸ்தர்கள் வரவேற்றபோது...

## 15 ஆயிரம் கஞ்சா செடிகள் நேற்று அழிப்பு

கொழும்பு,ஜூன் 7
லுணுகம்வெஹர பிரதேசத்தில் இரகசியமாக நடத்தி வந்த கஞ்சா தோட்டம் இரண்டை பொலிஸார் முற்றுகையிட்டதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள் தீட்டிய திட்டத்துக்கமைய பதுங்கியிருந்து கஞ்சா தோட்டத்தை சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர் என்று பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

சுமார் 4 அடி உயரமான 15 ஆயிரம் கஞ்சா செடிகள் தீ வைத்து அழிக்கப்பட்டன.

பிரதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள அதே வேளை மற்றொரு சந்தேக நபரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)

# முஸ்லிம் அமைப்பு குறித்து தேசிய கொள்கை வேண்டும்


## பொது பல சேனா வேண்டுகோள்

கொழும்பு,ஜூன் 7
நாட்டில் இயங்கும் முஸ்லிம் அமைப்புகள் தொடர்பில் தேசிய கொள்கை ஒன்றை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் புதன்கிழமை செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இன்று வெவ்வேறு வழிகளில் இரண்டு முஸ்லிம் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீண்டும் ஹலால் பிரிவினையை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னர் பள்ளிவாசல்களில் மாத்திரம் காணப்பட்ட மத்ரசா பாடசாலைகள் தற்போது நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. அவற்றின் மூலம் முஸ்லிம் கடுமைப் போக்கு வாதம் பரப்பப்படுகின்றது




என்று அவர் கூறினார்.

இந்த விடயங்கள் தொடர்பில் அரசு அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஊடகத்துறை அமைச்சின் செயலர் சரித்த ஹேரத், அமைச்சு காணிக்குள் மரக்கன்றொன்றை புதன் கிழமை நட்டபோது..

## கதிர்காம கந்தன் திருவிழா ஓகஸ்ட் 7 இல் ஆரம்பம்



கொழும்பு,ஜூன் 7
கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் பெருந் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்று இந்து சமய இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்தார்.

இந்த ஆலயத் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகி 21 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும் என்று அவர் கூறினார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி இரவு கதிர்காமம் ரந்தோலி பெரஹராவும் நடைபெறும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## 'கசினோ' சூதாட்ட விடுதியை கொழும்பில் அமைக்க திட்டம்

கொழும்பு,ஜூன் 7
கொழும்பில் 400 அறைகளைக் கொண்ட 'கசினோ' எனப்படும் சூதாட்ட விடுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று தெரியவருகின்றது.

ஆஸ்திரேலியாவின் முன்னணி 'கசினோ' முதலீட்டாளரான ஜேம்ஸ் பக்கர் என்பவரின் நிறுவனமே இதற்கான முக்கிய முதலீட்டைச் செய்யவுள்ளது என பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.



இது குறித்து நிதியமைச்சின் தலைமை இயக்குநரால், முதலீட்டுச் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றை ஆதாரம் காண்பித்து நாடாளுமன்றத்தில் இந்த விவகாரத்தை ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பியுள்ளார்.

அரச விநியோக திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் அமைய இருக்கும் இந்த 'கசினோ'வுக்கு, 10 வருடங்களுக்கு வணிக வருமான வரிவிலக்கு வழங்கப்படுவதுடன், ஏனைய பல சலுகைகளும் வழங்கப்படவுள்ளதாக அந்தக் கடிதம் குறிப்பிடுவதாகவும் அவர் கூறினார். அது நாட்டுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார்.

இதற்குப் பதிலளித்த முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன , 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் செய்யப்படுகின்ற இந்த வணிகம், நேரடியாக 2,600 பேருக்குத் தொழில் வாய்ப்பையும் வழங்கவிருப்பதாகக் கூறினார். அத்துடன் மறைமுகமான பல தொழில்வாய்ப்புக்களையும் அது ஏற்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டார்.

"இந்த நிறுவனம் இலங்கைச் சட்டங்களின் அடிப்படையில் தான் கட்டுப்படுத்தப்படவுள்ளது. 45 வீதமான இந்த நிறுவனப் பங்குகள் உள்ளூர் வணிகர்களுக்கு உரியது. வரிவிலக்கு வழங்குவது என்பது அனைத்து வெளிநாட்டு முதலீடுகளுடன் தொடர்புடைய வணிகங்களுக்கும் பொதுவானதாகும் என்று அமைச்சர் கூறினார். (ச-சி)

## தமிழ்க் கைதிகளிடமிருந்து போதைப்பொருள் மீட்பா?

### போலிக் குற்றச்சாட்டுகள் என்கின்றனர் உறவினர்கள்

கொழும்பு,ஜூன் 7
கொழும்பு மகஸின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுகின்றனர் என்று வெளியான செய்தி குறித்து அவர்களது உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மகஸின் சிறைச்சாலையில் ஞாயிற்றுக்கிழமை சிறைச்சாலை அதிகாரிகள் திடீரென சோதனை நடத்தியபோது, தமிழ் அரசியல் கைதிகள் தங்கியிருந்த சிறைக்கூடங்களிலிருந்து போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறு மீட்கப்பட்ட போதைப் பொருள்கள் தமிழ் அரசியல் கைதிகளுடையவை அல்ல.

அது தமிழ் அரசியல் கைதிகளுடன் புதிதாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப் பொருள்கள் பாவனையுடன் தொடர்புடைய குற்றவாளிகளுடையவை என்று தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் தமிழ் அரசியல் கைதிகள் மீது பொய்யான குற்றச் சாட்டுக்களைச் சுமத்துவது தமக்கு கவலையளிக்கிறது என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இந்தியாவைப் புறந்தள்ளி செயற்படும் போக்கு முகிழ்க்கிறதா..?

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு, பதின்மூன்று மைனஸ் [13-] ஆகிவிடும் என்ற நிலை, அச்சம் இந்திய ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சிக்கு உண்டாகியுள்ளது.

இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் ஞானதேசிகன் வெளியிட்ட கருத்து அதனையே பிரதிபலிக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வாக, பதின்மூன்று பிளஸ் [13+] வழங்குவதற்குத் தாம் தயாராக உள்ளதாக, இந்திய அரசிடம் வாக்குறுதி அளித்தவர் இலங்கையின் தலைவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அந்த நிலைப்பாடு மாறி பதின்மூன்று மைனஸ் ஆகிவிடக் கூடாது– என்று ஆதங்கத்துடன் அழுத்திக் கூறியுள்ளார் ஞானதேசிகன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வாக பதின்மூன்றாவது திருத்தமே அடிப்படையாக இருக்க முடியும். அது சார்ந்த வகையில் இந்திய அரசு, ராஜ தந்திர ரீதியான அழுத்தங்களைக் கொடுக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்; நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ராஜீவ்– ஜே.ஆர். ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையின் அரசமைப்புச் சட்டத்துக்கு, 1987 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட, பதின்மூன்றாவது திருத்தத்தை ஆழமாக உறாஞ்சி அழித்து விடும் அளவுக்கு–

அரசாங்கத்தின் உறுப்புகளாக உள்ள பல இனவாதக் கட்சிகள், குழுக்கள் செயற்படுகின்றன–

அதனால் நிலைமை நாளுக்கு நாள் மோசமுற்று வருகிறது. பதின்மூன்றை முற்றாகக் கிழித்து எறிவதற்கு, கீலம் கீலமாக்கு வதற்கான முனைப்பு பருத்துப் பெருத்து வருகிறது.

இத்தகைய நிலையில், இந்தியாவோ, அதன் ஆளும் கட்சியோ, இலங்கையின் காதை முறுக்கினாலும் கூட, எதனையும் செய்விக்க முடியாது என்ற நிலைமை மிகவேகமாக வளர்ந்து வருகிறது.

மத்தியில் ஆட்சி செலுத்தும் காங்கிரஸ் தலைவர்கள் மேற்கொள்ளும் முடிவையும் நிலைப்பாட்டையும் ஒட்டியே, அடியொற்றியே தமிழக காங்கிரஸ் கட்சியின் செயற்பாடுகள் அமைவது உண்டு.

எனினும், தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற அரசியல் கட்சிகள் இலங்கைத் தமிழர் விவகாரங்களில் முனைப்புடனும், சுய வெற்றி இலக்கை நோக்கியும் செயற்படுவதால், தமிழக காங்கிரஸ் கட்சியும் இலங்கைத் தமிழர் விவகாரத்தை தனது பேசு பொருளாக்க வேண்டிய அரசியல் தேவை ஒன்று அதற்கு அத்தியாவசியமாகி உள்ளது.

எப்படியோ, திராவிடக் கட்சிகளால் புதுடில்லியில் கனதியான செல்வாக்கையோ ஆழமான தாக்கத்தையோ உண்டாக்க முடியாத நிலை காரணமாக, தமிழகக் காங்கிரஸ் மனம் வைத்தால் இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் தொடர்பில் ஓரளவிலேனும் உதவிடவாய்ப்புண்டு.

யார்குற்றியும்அரிசிஆகட்டும் என்ற நிலையில், இந்திய மத்திய அரசு அழுத்தம் கொடுத்தால், கொழும்பு அரசாங்கம் ஓரளவு அசைந்து கொடுக்கும் என்ற மனோ நிலையில் இருந்து இலங்கைத் தமிழர்கள் மாறவில்லை என்றே கொள்ளலாம்.

வல்லரசுகள் மற்றும் தொலைவில் உள்ள நாடுகளை விட, தொப்புள் கொடி உறவுள்ள தமிழகத்தின் ஊடாக அது வழங்கக் கூடிய அழுத்தத்தினால், புதுடில்லி அரசு மூலம், தமக்குச் சேரவேண்டிய ஆதார அடிப்படை உரிமைகளைப் பெற வாய்ப்புக் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மனங்களிலிருந்து இன்னமும் நீங்கவில்லை.

ஆனால் இந்தியாவை, எந்தக் கட்சி தலைமையிலுமான இந்திய (புதுடில்லி) அரசையும் எதிர்த்துச் செயற்படும் அளவுக்கு, எமது நாடு தனது பிராந்திய, அனைத்துலக வியூகங்களை வகுத்துச் செயற்படுகிறது. அது குறித்து இப்பத்தியில் முன்னரும் தொட்டுக் காட்டியுள்ளோம்.

அதன் மறுவடிவமாக, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இப்போது அப்பட்டமாக தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளது.

இந்தியா எம்மீது கை வைத்தால், சீனா கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்காது. இந்தியாவின் பருப்பு இங்கு இனிமேல் அவியாது என்று கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இறையாண்மையை மீறி, 1987 ஆம் ஆண்டில் இந்திய அரசு தமிழர் பிரதேசங்களில் விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் வீசியதை கொழும்பு அரசுகள் மட்டுமன்றி, சிங்கள மக்கள் அனைவருமே ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே நோக்கினர். அவர்களது மனங்களிலிருந்து அந்த வடு இன்னும் நீங்கவில்லை எனலாம்.

மேலும், ஏற்கனவே இப்பத்தியில் தொட்டுக் காட்டப்பட்டமை போன்று, சீனாவின் முத்துமாலை வியூகத்தில் இலங்கையும் உள்ளடக் கப்பட்டிருப்பது, இந்தியாவைப் புறந்தள்ளி தனது உள்விவகாரங்களைக் கையாளும் பலத்தை இலங்கைக்கு வழங்க வாய்ப்பு உண்டு.

அத்தகைய சூழமைவில், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பில், இலங்கை அரசு, இந்தியாவைப் புறந்தள்ளி வைக்கும் சாத்தியம் இல்லை என்று கருத முடியுமா? இப்போது எழுந்து நிற்கும் பென்னம் பெரும் வினா இதுவே.

# புவியை நோயாளி ஆக்காதீர்கள்....

■ சி.நற்குணலிங்கம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர், கரவெட்டி

விஞ்ஞானம், தொழில்நுட்பம், இலத்திரனியல் என்பவற்றின் அபரிமிதமான வளர்ச்சி காரணமாக மக்கள் சுகபோக வாழ்வில் மூழ்கியுள்ளனர். இவர்களது பேராசையின் விளைவாக புவிக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்குப் பதிலாக அச்சுறுத்தலை வழங்கிய வண்ணம் உள்ளனர். மனித வாழ்க்கைக்கு மிகவும் ஏற்ற கோளான புவியை வெப்பமடையச் செய்வது புவியை நோயாளியாக்கும் அச்சுறுத்தலில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

உலகில் உள்ள வளர்ச்சியடைந்த, வளர்முக நாடுகளில் சூழலை அழிக்கும் மானிடச் செயற்பாடுகள், அளப்பரிய வளங்களை திட்டமிடப்படாத வகையில் எதிர் விளைவுகளை சிந்திக்காமை , கைத்தொழில் நாடுகள் சிலவற்றின் நடவடிக்கைகள் என்பன புவிக்கோளத்தின் வெப்பநிலையை அதிகரிக்கச் செய்து புவியை நோயாளியாக்குகின்றது.





இயற்கைச் சூழலை அவதானித்து இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டிய தேவை எல்லோருக்கும் உள்ளது. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டினதும், ஓசோன் , மீதேன் போன்ற ஏனைய வாயுக்களினதும் அளவு, அளவுக்கு மிஞ்சி அதிகரித்து வருவதனால் புவி சூடாகி வருகின்றது. இருபது வருடங்களில் ஏறக்குறைய 1° செல்சியஸ் வெப்பநிலை அதிகரித்துள்ளது. வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும், அவை வெளிவிடுகின்ற காபனீரொட்சைட்டின் அளவு அதிகமாகக் காணப்படுவதும், காடுகளை அழித்து எரிப்பதனாலும் , காடுகள் தாமாக எரிவதனாலும், உயிர்ச்சுவட்டு எரிபொருள்களை எரிப்பதனாலும் வளிமண்டலத்திலுள்ள இயற்கையான வாயுக்களின் வீதம் மாற்றியமைக் கப்படுகின்றது. காபனீரொக்சைட் வளிமண்டலத்தில் சேர்ந்துவிடும் நடவடிக்கையானது புவி விரைவாக சூடாகக் காரணமாகின்றது.

ஜப்பான், ஜேர்மனி,இத்தாலி, பிரான்ஸ், கனடா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற கைத்தொழில் ஆக்கம் பெற்ற நாடுகள் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவை அதிகரிக்கச் செய்துள்ளன. வளர்முக நாடுகளில் உள்ள மக்களும் வருடா வருடம் குறிப்பிட்ட அளவு காபனீர் ஒக்சைட்டை வளிமண்டலத்தில் சேர்த்து வருகின்றனர்.

புவிக்கோளம் சூடாவதற்கு காபனீரொட்சைட்டை விட ஏனைய வளிமண்டல வாயுக்களும் காரணிகளாக அமைகின்றன. கால்நடைகளும், உக்கிப் போகும் தாவரங்களும் ஏனைய வாயுக்களின் அளவை அதிகரிக்கச் செய்து புவியை சூடாக்குகின்றன. விவசாயத்துக்குப் பயன்படுத்தும் நைதரசன் உரப்பசளைகளும் மீதேன் வாயுவைத் தோற்றுவிக்கின்றன. குளிரூட்டிகளுக்கும், குளிர்சாதனங்களுக்கும் பயன்படுத்தப்படும் குளோரோபுளோரோ காபன் (CFC) வாயுவும் கணிசமான அளவை வளிமண்டலத்தில் சேர்த்து விடுகின்றது. வருடாவருடம் ஏறக்குறைய 07 லட்சம் தொன் CFC வளிமண்டலத்துக்கு அனுப்பப்படுகின்றது. CFC வாயுக்களில் F11, F12 என இருவகைப்பட்ட வாயுக்கள் உள்ளன. F11 வகை வாயுவானது ஏறக்குறைய 75 ஆண்டுகளுக்கும், F12 வகை வாயு ஏறக்குறைய 110 ஆண்டுகளுக்கும் அழியாதிருந்து பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன.

புவி சூடாகுவதனால் பலவகை அனர்த்தங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. காலநிலை மாற்றம், இயற்கைச் சமநிலை சிதைவு, உயிர்ப்பல்லினத் தன்மை அழிவு, சுகாதார அச்சுறுத்தல், ஓசோன் படைச் சரிவு, கோடைத் தன்மையின் காலம் நீடித்தல், வேகக் காற்று வீசும் வாய்ப்புக்கள் அதிகரித்தல், நீரியல் வட்டம் பாதிப்புக்கு உட்படுதல், சில தீவுகள் நீரில் மூழ்குதல், வானிலை அடிக்கடி மாற்றமடையும் நிலை ஏற்படுவதனால் சிறுவர் முதல் முதியோர் வரை சோர்வுத் தன்மை, வெப்ப நோய்கள் மற்றும் தலைவலி போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இதனால் எதிர்கால சந்ததியினரின் சுபீட்ச நிலை பாதிக்கப்படும் . நாட்டின் நிலையான அபிவிருத்தி பாதிக்கப்படும் நிலை ஏற்படும். இந்த அனர்த்தங்கள் மொத்தத்தில் உலகையே ஸ்தம்பிதம் அடையச் செய்துவிடும். எனவே பூமி மரணமடைவதற்கு நாம் காரணமாக இருக்கக் கூடாது. இருப்பதும் நல்லதல்ல, புவி உயிர்த்துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். எமது ஒவ்வொரு செயற்பாடுகளும் , எண்ணங்களும் புவியை வெப்பமடையச் செய்கின்றதா என எண்ணி செயற்படுவது நல்லது. தொழில் நுட்பத்தின் வளர்ச்சி ஆக்கத்திற்கேயன்றி அழிவுக்கு அல்ல என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

முறையான ஒழுங்கான முகாமைத்துவத்தின் மூலமும், சூழல் சமநிலை பாதிக்காத வண்ணம் நேர்த்தியான வாழ்க்கை முறையை பின்பற்றுவதன் மூலமும் புவி வெப்பமடைவதைத் தடுக்க, குறைக்க முடியும். அத்துடன் சூழல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலமும் இவ்வாறான விடயங்களை மாணவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். மாணவர்கள் மத்தியில் வருடா வருடம் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான சுவரொட்டி, சித்திரம், பேச்சு, கட்டுரை போன்ற போட்டிகளை நடத்துவதன் மூலம் மாணவர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும். ஜப்பான் நாடு காபனீரொட்சைட்டை குறைவாக வெளிப்படுத்தக் கூடிய எரிபொருளை பயன்படுத்தும் முயற்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளது.

இந்த நிலை ஏனைய நாடுகளுக்கும் பரவ வேண்டும். அபிவிருத்தியை மேற்கொள்ளும்போதும், திட்டமிடும்போதும் சுற்றுப்புறச் சூழலை கவனத்தில் எடுக்கும் பழக்கம் எல்லோர்க்கும் ஏற்பட வேண்டும். வளர்ச்சியடைந்த வளர்முக நாடுகள் ஒருமித்த எண்ணத்துடன் புவியை நோயாளியாக்காதிருக்க வழிசமைக்க வேண்டும்.

புவி சூடாகிவருவது உலகுக்கு பெரும் அச்சுறுத்தலாகும். வாழப்பிறந்த நாம் உயிரின அழிவுக்கான காலத்தை சுருக்கிக் கொள்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது. எனவே சூழலை அழிக்கும் மானிடச் செயற்பாடுகளையும் அதன் வழிவரும் அவலநிலைகளையும் உள்வாங்கி விழிப்புணர்வுடன் செயற்பட்டு புவியை நோயாளியாக்காது உயிர் வாழவிட்டு நாமும் மகிழ்வாக வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு விழா கொண்டாடிய கோப்பாய் மகா வித்தியாலயம்

■ ஞானி



கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் மூத்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்கி இந்த வருடம் நூற்றாண்டு விழாக் கொண்டாடிய கோப்பாய் மகா வித்தியாலயம் இருபாலைச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் கோண்டாவில் வீதியில் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு முன்பாக வீதிக்கு தெற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. பாடசாலை முன்றிலில் கல்வித் தெய்வமாகிய சரஸ்வதி கலை அழகு மிளிரும் நந்தவனத்தில் அமர்ந்திருக்கும் கல்விக்குரிய சூழலில் நூறாண்டைத் தாண்டி தனது பணியைத் தொடர்ந்து வருகின்றது.

1913 ஆண்டு பங்குனித் திங்கள் முதலாம் திகதி கட்டப்பிராய் குளுக்கண்டியில் ஆங்கில மிஷனறிமாரால் ஆரம்பிக்கப்பட்ட கல்விக் கூடம், காலச்சூழலின் தேவையைக் கருத்தில் கொண்டு 1922 ஆம் ஆண்டு தற்போதைய அமைவிடத்துக்கு இடம் மாற்றப்பட்டது. மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட போது " கோயில் தெருப் பாடசாலை" என அழைக்கப்பட்ட பாடசாலையின் ஆரம்பகால ஆசிரியர்களாக, நிர்வாகிகளாக அரும் பணியாற்றியவர்கள் கனகரத்தினம் - நாகம்மா தம்பதியினர். அவர்களின் சேவை பாடசாலையின் வளர்ச்சிக்கும் குறித்த காலப்பகுதியில் பாடசாலை சார் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கும் உறுதியான அடித்தளமாக இருந்து உதவியமை இன்றும் பசுமையுடன் நினைவு கூரப்பட்டு வருகின்றது.

1922 ஆம் ஆண்டில் இருந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சாதனா பாடசாலையாக இருந்து வந்த பாடசாலையில் பயிற்சி ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பயிற்சியை மேற்கொண்டு ஆசிரியர் பயிற்சியில் தேர்ச்சி பெறுவதற்கும், நல்லாசிரியர்களை உருவாக்கும் களமாகவும் விளங்கி வந்தது. பாடசாலையின் அதிபர்களாக எஸ். ஞானரத்தினம், எஸ். பீதாம்பரம், எஸ்.பேரம்பலம், எஸ்.யோசேப், வித்துவான் நடராசா, ஏ.கணேசன், சி. சண்முகரத்தினம்,சி. சோமசுந்தரம், செல்வி பாலாம்பிகை, எஸ். கனகசபை, எஸ்.அம்வேட், எஸ். சுப்பிரமணியம் எஸ்.பரம்தில்லைராசா, எஸ். மகாலிங்கசிவம், எஸ்.சிவஞானம், எஸ்.பாலசிங்கம், எஸ். கனகசுந்தரம், எஸ்.தங்கராசா, இ.தியாகராசா, எஸ்.கதிரவேலு க.தனபாலசிங்கம், எஸ்.இராசமணி, திருமதி. கெ.நவரத்தினம், அ. அகிலதாஸ், பொ. சிவானந்தராசா, எஸ்.புஸ்பராசா, க.வீரசிங்கம், த.ஞானப்பிரகாசம் ஆகியோர் பணியாற்றி காலத்துக் காலம் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும் பணி ஆற்றியுள்ளனர். தற்போதைய அதிபர் 2013 -05-15 ஆம் திகதியில் இருந்து கடமையாற்றி வருகின்றார்.

பாடசாலையின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் இந்த வருடம் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி பாடசாலை சார் சமூகத்தின் ஒத்துழைப்போடு விமர்சையாக கொண்டா டப்பட்டது. நூற்றாண்டு விழாவை அதிபர் க. வீரசிங்கம், உரிய வேளையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ததோடு நூற்றாண்டு விழாவை முன்னிட்டும் அதனை ஞாபகார்த்தமாக பாடசாலையின் முன்னேற்றத்துக்கான செயற்பாடுகளை மேற்கொண்டார். நூற்றாண்டு விழா மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தரம் ஒன்று முதல் தரம் பதினொன்று வரையான வகுப்புக்களைக் கொண்ட கோப்பாய் மகா வித்தியாலயம் 2 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட விசாலமான காணி, பொருத்தமான கட்டுமானங்களுடன் செயற்பட்டு வருகின்றது. பாடசாலையில் தரம் 1 முதல் 5 வரையான ஆரம்ப பிரிவில் 83 மாணவர்களும்,தரம் -6 - 9 வரையான வகுப்புகளில் 136 மாணவர்களும், தரம் 10- 11 வகுப்புக்களில் 69 மாணவர்களும், விசேட கல்விகளில் 13 மாணவர்களுமாக மொத்தம் 302 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். மொத்தம் 23 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர்.

1995 இடப்பெயர்வின் போது முற்றாக இடம் பெயர்ந்த பாடசாலை, மட்டுவில் கமலாசனி வித்தியாசாலையில் தற்காலிகமாகச் செயற்பட்டது. பாடசாலை இராணுவ நடவடிக்கையால் குறிப்பிடத்தக்க சேதங்களுக்கு உள்ளாகிய போதிலும் 1996 ஆம் ஆண்டு மீளக் குடியேறிய பின்னர் உரிய இடத்தில் செயற்படத் தொடங்கியது.

2009 ஆண்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் செயற்படத் தொடங்கிய இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த மாணவர்கள் மற்றும் இடம் பெயர்ந்த மாணவர்களை கொண்ட நிலையில் இடைத்தங்கல் முகாம் மூடப்படும் வரை பெருமளவு மாணவர்கள் கல்வி கற்றனர். ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் என்ற நான்கு பிரிவுகளும் உள்ளடங்க I A B பாடசாலைக்குரிய கட்டமைப்புக்களுடன் செயற்பட்டது. ஆயிரம் மாணவர்கள் மட்டில் கல்வி பயின்றனர். 43 ஆசிரியர்கள் கல்வி கற்பித்தனர். கோப்பாய் கல்விக் கோட்டத்தில் பொருத்தமான நிலைய அமைவிடத்தில் இட வசதிகளோடும் கட்டுமானங்களோடும் செயற்படும் கோப்பாய் மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கும் மாணவர் அடைவு மட்ட உயர்ச்சிக்கும் கல்வித் திணைக்களம் பொருத்தமான ஏற்பாடுகளை செய்யவில்லை என்ற மனக்குறை பாடசாலை பெற்றோர், நலன் விரும்பிகள் மட்டத்தில் நிலவி வருகின்றது. பாடசாலை சமூகத்தின் மனக்குறை உரிய முறையில் நிவர்த்தி செய்யப்படும்போது பாடசாலை மேலும் சிறந்து விளங்கும் ★

# விண் தொடும் சிகரம் தொட்டு...

■ கவிதாயினி





எவரெஸ்ட் சிகரத்தை முதல் முறையாக மனிதன் தொட்டு 60 வது ஆண்டுகள் கடந்துவிட்டன. நியூசிலாந்தைச் சேர்ந்த மலையேறியான சர். எட்மண்ட் ஹிலாரி அவர்களும் ஷெர்பா டென்சிங் நோர்கே ஆகிய இருவரும் இந்த உலகின் மிகவும் உயரமான மலைச் சிகரத்தை 1953ஆம் ஆண்டும் மே மாதம் 29ஆம் திகதி அடைந்தார்கள். நியுசிலாந்தில் தேனி வளர்க்கும் தொழிலைச் செய்து வந்த சர் எட்மண்ட் ஹிலாரியும், அவரின் நேபாள ஷெர்பா டென்சிங் நோர்கேயும் அறுபது ஆண்டுகளுக்கு முந்தைய கால கட்டத்தில் கடல் மட்டத்தில் இருந்து 8848 மீட்டர் அதாவது 29 ஆயிரம் அடி இருக்கும் இந்தச் சிகரத்தின் மீது ஏறியது மிகப் பெறும் சாதனையாக பார்க்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசியாக இரண்டாம் எலிசபத் முடி சூட்டப்பட்ட நாளில் இவர்கள் உலகின் உச்சத்தை அடைந்த செய்தி லண்டனை எட்டியது.

அன்று முதல் இன்று வரை எவரெஸ்ட் சிகரத்தில் 5000இற்கும் அதிகமானோர் ஏறியிருக்கிறார்கள். மனித முயற்சிக்கு இயற்கை அளிக்கும் இந்த உயரமான சவாலை எதிர்கொள்ள வேண்டும் என்ற ஆவல் அதன் பிறகு கணிசமாக அதிகரித்தது. மலையேறுபவர்களுக்கு உதவும் கருவிகள் அறிவியல் முன்னேற்றத்தால் துல்லியமானவையாகவும் - எடை குறைந்தவையாகவும் தற்போது உள்ளன. பருவ நிலையையும், மலை மீதுள்ள ஐஸ் நகருவது குறித்தும் தற்போது உறுதியான தகவல்களை உடனுக்குடன் பெறும் வசதி உள்ளது.

**எவரெஸ்ட்டை முதலில் எட்டியவர்கள்**

கடந்த 1990 ஆம் ஆண்டில் எவரெஸ்ட் ஏற வேண்டும் என்று கிளம்பியவர்களில் 18 சதவீதம் பேர்தான் உச்சியை அடைந்தனர். தற்போது இந்த எண்ணிக்கை 56 சதமாக உயர்ந்து இருக்கிறது. கடந்த ஆண்டு ஒரே நாளில் [illegible] பேர் எவரெஸ்ட் சிகரத்தின் [illegible] பதித்தினர். 30 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1983 இல் ஒரே நாளில் அதிகபட்சமாக வெறும் 8 பேரால் தான் எவரெஸ்ட்டை அடைய முடிந்தது. ஆரம்ப காலத்தில் சாதனை மனப்பாங்கு கொண்ட - அபாயமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் மனோ திடம் கொண்டவர்களே எவரெஸ்ட்டுக்கு செல்ல முடியும் என்று இருந்தது, ஆனால் தற்போது எவரெஸ்ட் மலையேற்றம் என்பது நேபாளத்தில் நான்கு ஒருங்கிணைக்கப்பட்ட தொழிலாக இருக்கிறது. 10 ஆயிரம் முதல் ஒரு லட்சம் டாலர்கள் வரை கொடுத்து அதற்கேற்ற வசதிகளைப் பெற்றுக் கொண்டு ஒருவர் மேலே ஏற முடியும். எவரெஸ்ட்டுக்கான வழித்தடம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் - அங்காங்கே உணவு மற்றும் மருத்துவ வசதிகளும் - பணத்துக்கு சுமைகளை சுமந்து வர ஷெர்பாக்களும் இப்போது அதிகரித்து விட்டனர்

தற்போது மலையேறுதல் என்பது ஒரு வணிக நடவடிக்கையாக மாறிவிட்டதாகக் கூறும் விமர்சகர்கள், அங்கு அளவுக்கு அதிகமான சனக்கூட்டத்தை குறைப்பதற்காக ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் அவசியம் என்று வலியுறுத்துகிறார்கள். ஆனால், அதனை பல மலையேறிகள் மறுக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர், தூசிகளில் இருந்து பாதுகாக்கும் LG Optimus GJ கைபேசிகள்




முதற்தர இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனமான LG நிறுவனம் Optimus GJ எனும் தொடரைக் கொண்ட அதிநவீன கைபேசிகளை அறிமுகப்படுத்துவது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

இக்கைபேசிகள் நீர் மற்றும் தூசிகளிலிருந்து மிகுந்த பாதுகாப்பு உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் கூகுளின் Android 4.1.2 Jelly Bean இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டவையாகவும் காணப்படுகின்றன.

அத்துடன் 4.7அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன் 1.5ஜிஹெத் வேகத்தில் செயலாற்றக்கூடிய Quad Core Qualcomm Snapdragon S4 Pro Processor, 13 மெகாபிக்சல்கள் உடைய பிரதான கமரா, வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான 2 மெகாபிக்சல்களை உடைய கமரா போன்றனவும் இதில் காணப்படுகின்றன.

இவற்றின் சேமிப்பு நினைவகமானது 16GB கொள்ளளவு உடையது, அத்துடன் 2,280 mAh மின்கலத்தை உள்ளடக்கியுள்ள இவை சுமார் 30 நிமிடங்கள் வரை நீரில் பழுதடையாது இருக்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றின் விலையானது 600 டொலர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் சேமிப்பு நினைவகமானது 16GB கொள்ளளவு உடையது, அத்துடன் 2,280 mAh மின்கலத்தை உள்ளடக்கியுள்ளது.

# முழு திரைப்படத்தையும் ஒரு விநாடியில் தரவிறக்கம் செய்ய

**தற்போதுள்ள அலைக்கற்றைகளில் 4ஜி தான் வேகமானதாக கருதப்படுகிறது. ஆனால், இதை விட பல நூறு மடங்கு வேகம் கொண்ட 5ஜி தொழில்நுட்பம் வெற்றிகரமாகப் பரிசோதித்து பார்க்கப்பட்டுள்ளது.**

ஒரு விநாடியிலேயே முழு திரைப்படத்தையும் தரவிறக்கம் செய்யும் அளவுக்கு அதிவேகம் கொண்ட, ஐந்தாம் தலைமுறை (5ஜி) அலைக்கற்றை சோதனையை சம்சுங் நிறுவனம் வெற்றிகரமாகச் செய்துள்ளது.

தென்கொரியாவைச் சேர்ந்த சம்சுங் நிறுவனம் இதுகுறித்து கூறியிருப்பதாவது: தற்போதுள்ள அலைக்கற்றைகளில் 4ஜி தான் வேகமானதாகக் கருதப்படுகிறது. ஆனால், இதை விட பல நூறு மடங்கு வேகம் கொண்ட 5ஜி தொழில்நுட்பம் வெற்றிகரமாகப் பரிசோதித்து பார்க்கப்பட்டுள்ளது. இதன்படி, 2 கி.மீ. தூர இடைவெளிக்குள் அமைந்த கம்பியூட்டர்களுக்குள் ஒரு ஜிகாபைட் பைல் ஒரு விநாடியில் பரிமாறப்பட்டது.

வரும் 2020ம் ஆண்டுக்கு முன்னதாக இந்த தொழில்நுட்பம் வர்த்தக ரீதியில் பொதுமக்களுக்குக் கிடைத்துவிடும். இதன் மூலம் 3டி படங்கள், நேரடி அறுவை சிகிச்சை காட்சிகள், அல்ட்ரா ஹை டெபனேசன் பைல்கள் உள்ளிட்டவற்றை, அளவின்றி மிக விரைவாகப் பெற முடியும்.

நேரடிக் காட்சிகளை, உடனுக்குடன் காண்பதும் சாத்தியமாகும். இதற்காக 64 டைப்பன் தொழில்நுட்பத்தில் அமைந்த 64 கோபுரங்கள் அமைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டன.

இவ்வாறு சம்சுங் நிறுவனம் தெரிவித்துள்ளது. உலகிலேயே பூமிக்கு அடியில் வயர்களைப் பதித்து அதிகளவில் இணைய இணைப்பு கொடுத்துள்ள நாடுகளில் தென் கொரியா முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

# அறிமுகமாகின்றது Flickr இன் புதிய பதிப்பு

புகைப்படங்களை பகிரும் பிரம்மாண்டமான தளமான Flickr தளத்தின் Flickr version 2.0 எனும் புதிய பதிப்பை யாகூ நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இப்புதிய பதிப்பின் மூலம் தனது பயனாளிகளுக்கு புகைப்படங்களைப் பகிர்வதற்காக 1TB சேமிப்பு வசதியை இலவசமாக வழங்கியுள்ளது.

இதன் மூலம் உயர் தரம்வாய்ந்த புகைப்படங்கள் மற்றும் நிழற்படங்களை பயனாளிகள் தரவேற்றி அவற்றை பகிர்ந்துகொள்ள முடிவதுடன் இச்சேமிப்பு வசதிமூலம் ஸ்மார்ட் கைபேசிகள் மூலம் எடுக்கப்பட்ட சுமார் 5 இலட்சம் வரையான நிழற்படங்களை பகிர்ந்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# iOS சாதனங்களிலும் Google Voice Search

இணைய தேடுபொறிகளில் முதன்மை வகிக்கும் கூகுள் நிறுவனமானது கடந்த வருடம் Voice Search வசதியை அறிமுகப்படுத்தியிருந்தது.

இதன்மூலம் இணையத்தில் தேடும்போது சொற்களை டைப் செய்வதற்கு பதிலாக குரல்வழிக் கட்டளைகள் மூலம் தேடுதலை மேற்கொள்ள முடியும்.

இவ்வசதியை தற்போது iPhone, iPad, போன்ற அப்பிளின் iOS சாதனங்களிலும் எதிர்வரும் சில நாள்களில் அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றது.

இவ்வசதியைப் பெறுவதற்கு iTunes app store தளத்திற்கு சென்று iOS சாதனங்களுக்கான கூகுள் குரோம் மென்பொருளைத் தரவிறக்கம் செய்து நிறுவுதல் வேண்டும்.

இதன் மூலம் இலகுவானதும், விரைவானதுமான இணையத்தேடல்களை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடல் நீரிலிருந்து யுரேனியம்




கடல் நீரில் இருந்து யுரேனியம் தயாரிக்க முடியும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அணு உற்பத்திக்கு பயன்படுத்தும் பொருள்களில் யுரேனியத்துக்கு முக்கிய பங்கு உள்ளது. யுரேனியம் தாது பூமியில் இருந்து வெட்டி எடுக்கப்படுகிறது.

அவை கடல்நீரில் ஆயிரம் மடங்கு கொட்டிக்கிடப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். எனினும் அவற்றை பிரித்தெடுக்கும் ஆய்வில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அமெரிக்காவின் சேப்பல் ஹில்லில் உள்ள வடக்கு கரோலினா பல்கலைக்கழகத்தின் ரசாயனத் துறை பேராசிரியர் வென்பின்லின் தலைமையிலான விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் கடல் நீரில் இருந்து யுரேனியம் பிரித்தெடுக்கும் ஆய்வுக்கூடத்தை வைத்து நவீன தொழில்நுட்ப முறையில் இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### துணுக்காய் – யாழ்ப்பாண பஸ்

## அக்கராயன் சந்தியில் தரித்து செல்ல அனுமதிக்காக காத்திருக்கும் மக்கள்



அக்கராயன், ஜூன் 7

துணுக்காயில் இருந்து புறப்படும் பஸ் யாழ்ப்பாணம் செல்லும் வழியில் அக்கராயன் சந்தியில் தரித்து செல்ல அனுமதி கோரி கிளிநொச்சி அரச அதிபருக்கு கடிதம் அனுப்பி இருந்தோம். பதில் இன்னமும் கிடைக்காததால் அதற்காகக் காத்திருக்கிறோம். இவ்வாறு தெரிவித்தார் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன்.

துணுக்காய் முல்லைத்தீவு மாவட்டத்திலும் அக்கராயன் கிளிநொச்சி மாவட்டத்திலும் அமைந்திருப்பதால் நிர்வாக ரீதியில் முகாமைப்படுத்துவதில் இடர்கள் இருந்தன. இந்த நிலையில் குறித்த பஸ் அக்கராயனில் தரித்து செல்வதற்கு அரச அதிபரின் அனுமதி தேவைப்படுகிறது.

இது தொடர்பில் அவருக்கு கடிதம் அனுப்பிய நிலையில் பதிலுக்கு காத்திருப்பதாக துணுக்காய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஐ-18)

## பொலிஸாரின் வேலையை இராணுவம் செய்கிறதா?

### இரவு போக்குவரத்து நெருக்கடி குறித்து மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூன் 7

ஏ-35 வீதியில் இரவு வேளையில் பயணிப்பவர்களை கோரங்கன்கட்டு பகுதியில் மறிக்கும் இராணுவத்தினர் அவர்களை திருவி திருவி விசாரித்து பதிவு செய்து, கையொப்பம் பெற்றபின்னர் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு ஏ-35 வீதியின் கோரக்கன்கட்டு சந்திப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரே இவ்வாறு பதிவுகளை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது.

அதாவது இரவு 7.30 மணியில் இருந்து காலை 6 மணி வரையான நேரங்களில் மேற்படி பகுதியில் இராணுவ சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவரை வழிமறித்து, தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றை கேட்டு மிரட்டியுள்ளனர்.

அத்துடன் குறித்த இளைஞனை சுமார் 45 நிமிடங்கள் வரை மறித்து வைத்து விட்டு மீண்டும் பயணிக்க அனுமதித்துள்ளனர்.

இராணுவத்தினர் பொலிஸாரின் பணிகளை மேற்கொள்வதுபோல் நடந்து கொள்வதும் எதிராகக் கதைத்தால் மிரட்டலுக்கு உள்ளாவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-6)


### உடையார்கட்டுகுளம் புனரமைப்பு

முல்லைத்தீவு, ஜூன் 7

முல்லைத்தீவு, உடையார்க டுக் குளத்தின் புனரமைப் பணிகள் சுமார் 195 மில் யன் ரூபா செலவில் முன் னெடுக்கப்பட்டு வருகின்றது முரண்பாடுகளால் பாதிக்க பட்ட பகுதிகளை அபிவிருத் செய்யும் திட்டத்தின் கீ ஒதுக்கீடு செய்யப்பட்ட நி யின் மூலம் இந்தப் புன மைப்புப் பணிகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி குளத்தின் நீர்வி யோக வாய்க்கால்கள், நீர் பாசன விடுதி, குளத்தின் பு ரமைப்புப் பணிகள், கழி வாய்க்கால்கள் அணைக்கட் புனரமைப்பு போன்ற ப கள் மேற்கொள்ளப்பட் வருகின்றன. (ஐ-6

### பழைய முறிகண்டி குளத்தின் கீழ் சட்டவிரோத நெற்செய்கை



அக்கராயன்,ஜூன் 7

துணுக்காய் பழைய முறிகண்டி குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையில் அளவுக்கு கூடுதலாக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் குளத்தில் நீர் பற்றாக்குறை ஏற்படும் என விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சிறுபோக கூட்டத்தில் குறித்த குளத்தின் கீழ் ஒவ்வொரு காணிப் பங்குக்கும் ஒரு ஏக்கர் வீதம் நெற்செய்கையில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் 140 ஏக்கர் நிலப் பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது. எனினும் தற்போது 190 வரையான ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமக்கு வழங்கப்பட்ட ஒரு ஏக்கர் பங்கை மட்டும் பராமரிக்கும் விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

சிறுபோக கூட்ட முடிவுகளின் படி, சட்டவிரோத நெற்செய்கைகள் யாவும் அழிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-18)

## இடை விலகிய மாணவர்களில் 41 பேர் கல்வியில் மீள இணைப்பு

கிளிநொச்சி, ஜூன் 7


கிளிநொச்சி கல்வி வலயத்தில் சுமார் 191 சிறார்கள் பாடசாலைகளுக்கு செல்லாத நிலையில் உள்ளனர். இவர்களில் தற்போது 41 சிறுவர்கள் பாடசாலைகளில் மீள இணைக்கப்பட்டுள்ளனர் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பகுதிகளில் பாடசாலைகளுக்கு செல்லாத சிறுவர்களை மீள இணைத்துக் கொள்ளும் செயற்றிட்டத்தை வலயக் கல்வி நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் தற்போது சுமார் 191 சிறுவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதில்லை என அடையாளம் காணப்பட்டு அவர்களை பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை 41 சிறுவர்கள் மீள இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். கரைச்சிக் கல்விக் கோட்டத்தில் 21 ஆண்களும், 5 பெண்களும், கண்டாவளைக் கல்விக் கோட்டத்தில் 4 ஆண்களும் 2 பெண்களும், பூநகரி கல்விக் கோட்டத்தில் 7 ஆண்களும், 2 பெண்களும் என இவ்வாண்டு 41 சிறுவர்கள் பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஏனைய 150 சிறார்களையும் இணைத்துக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என வலயக் கல்விப் பணிமனை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-6)



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து நடத்திய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாப் போட்டிகளில் முல்லைத்தீவு மாவட்டத்துக்குரிய போட்டிகள் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது. இதில் ஐம்பதுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றினர். (ஐ)

## சுண்டிக்குளம் தொடுவாய்க்கு கதவுகளை அமைத்துத் தருக

### கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சி சுண்டிக்குளம் தொடுவாய்க்குரிய நீர் வெளியேற்றும் கதவுகள் அமைத்துத் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி ஆனையிறவு தட்டுவன்கொட்டி – சுண்டிக்குளம் ஆகிய சிறு கடற்பகுதிகளில் சுமார் ஆயிரத்து 250 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் சிறுகடல் தொழில்களை மேற்கொண்டு வரும் அதேவேளை, வருடாந்தம் ஏற்படும் பருவகாலங்களில் இறால் தொழில்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இயற்கையாக மேற்படி சிறுகடல் பகுதிகளில் உற்பத்தியாகும் இறால்கள் பெருக்கமடைந்ததுடன் களப்பு நீரை வெளியேற்றுவதற்காக சுண்டிக்குளம் தொடுவாய் பகுதி வருடம் தோறும் வெட்டப்பட்டு வருகின்றது.

இவ்வாறு வெட்டப்படுவதனால், பெருமளவான செலவுகள் ஏற்படுகின்றது. இதேவேளை வெட்டப்படும் தொடுவாயை உரிய காலத்தில் கட்ட முடியாதும் போகிறது.

இதன் காரணமாக தமது தொழில் நடவடிக்கைகள் வருடாந்தம் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தொடுவாய்ப் பகு திக்கு, உரிய காலங்களி சுண்டிக்குளம், ஆனையிற களப்பு நீரைவெளியேற்றவும் தேவைப்படும் போது களப் நீரை தேக்கி வைப்பதற்கும் ஏற்ற வகையில் தொடுவா பகுதிக்கு கதவுகளை அமைத் தருமாறு தொழிலாளர்க கோரிக்கை விடுத்துள்ளனர் இந்தக் கோரிக்கை மனுவை தாம் பல்வேறு அரச சார்பற் நிறுவனங்கள் மற்றும் மாவ அரச அதிபர் ஆகியோருக்கு அனுப்பியுள்ளதாகவு தொழிலாளர்கள் தெரிவி துள்ளனர். (ஐ-6

## கப்பம் கோரிய நால்வர் சிக்கினர் பொலிஸ் வலையில்

கிளிநொச்சி, ஜூன் 7

ஆள்களைக் கடத்தி கப்பம் பெறுபவர்கள் என்ற சந்தேகத்தில் பெண் ஒருவர் உட்பட 4 பேரைத் தாம் கைது செய்துள்ளதாகக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி இருவர் கடத்தப்பட்டுள்ளதாக உறவினர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து தாம் மேற்கொண்ட விசேட நடவடிக்கை மூலமே இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

கடந்த 25 ஆம் திகதி கிளிநொச்சியைச் சேர்ந்த இருவர் வெள்ளைவான் கும்பலால் கடத்தப்பட்டதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கடத்தப்பட்ட இருவரையும் விடுவிப்பதாயின் 6 லட்சம் ரூபா பணம் தரவேண்டும் என உறவின களுக்கு கடத்தல்காரர்க எச்சரிக்கை விடுத்துள்ளன கப்பப் பணத்தை யாழ்ப் ணம் சாவகச்சேரிப் பகுதியி தம்மிடம் தரவேண்டும் எ வும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி கிளிநொச்சி பொ ஸார் கடந்த 24 ஆம் திக யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் வைத்து மூன் பேரைக் கைது செய்தனர்.

இந்த மூன்று பேரிடமு மேற்கொண்ட விசாரணை களை அடுத்து மற்றுமொ சந்தேகநபரான பெண் ஒ வர் நீர்கொழும்புப் பகுதியி வைத்து கைதுசெய்யப்ப டுள்ளார்.

இவர்கள் நால்வரும் கடந் 31 ஆம் திகதி கிளிநொச் மாவட்ட நீதிமன்றில் முற்ப தினர்.

இதன்போது நால்வருக்கு ஜூன் 7 ஆம் திகதி வ விளக்கமறியலில் வைக் மாறு உத்தரவிடப்பட்டுள்ள (ஐ-



## கிளிநொச்சி - சாந்தபுரம் பாடசாலையில் வசதிகளை ஏற்படுத்த பெற்றோர் கோரிக்கை

கிளிநொச்சி,ஜூன் 7

கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் சுமார் 484 மாணவர்கள் கல்விகற்று வரும் நிலையில் குறித்த பாடசாலையில் போதிய வசதிகள் இன்றிக் காணப்படுவதனால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டு வருவதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் தரம் ஒன்று முதல் தரம் பத்து வரையான வகுப்புக்களில் தற்போது 484 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில் போதிய வகுப்பறை வசதிகள் மற்றும் முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை என்பன காணப்படுகின்றன.

அத்துடன் பாடசாலை-வளாகத்தைச் சுற்றி வேலி அடைக்கப்படாமையினால் இரவு வேளைகளில் கால்நடைகள் [illegible]

இவ்வாறான நெருக்கடி நிலைமைகள் காரணமாக தமது பிள்ளைகளின் கல்வி தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருவதாகப் பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே தமது பிள்ளைகளது எதிர்காலம் கருதி பாடசாலையின் [illegible] சீர்செய்து [illegible] பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும்.

**இடபர்:** எதிர்காலம் பற்றிய பயம் வந்து செல்லும். அண்டை, அயலார் சிலரின் செயல்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். செலவுகள் கட்டுக் கடங்காமல் செல்லும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் ஏற்படலாம்.

**மிதுனர்:** மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கடகர்:** அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் வெற்றியுண்டு. மாணவர்களின் சிந்தனைத்திறன் அதிகரிக்கும்.

**சிங்கர்:** சில தினங்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். அரச வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தமடைவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**நாளை**

*வைகாசி-25 சனிக்கிழமை 08.06.2013*
*திதி: அமாவாசை மு.இ. 09.33 வரை*
*நட்சத்திரம்: ரோகிணி மு.இ. 08.28 வரை*
*சுபநேரம்: 02.52- 04.22 வரை*
*இராகுகாலம்: 08.52 - 10.22 வரை*

**துலாமர்:** மன உளைச்சல் நீங்கும். கலகலப்பாக சிரித்துப்பேசும் சூழல் அமையும். உத்தியோகத்தில் நட்பு வட்டம் விரிவடையும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். முன்கோபம் விலகும்.

**விருச்சிகர்:** நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். மனக்குழப்பங்கள் நீங்கும். அயல் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**தனுசு:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மகரர்:** நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பர்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**மீனர்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| 2 | 1 | 6 | 3 | | | 7 | 5 | 9 |
| | 3 | 7 | 6 | | | | 2 | |
| 1 | 5 | | 9 | | | 2 | 3 | |
| | | 3 | 4 | | 1 | 5 | | |
| | 8 | 2 | | | 3 | | 6 | 4 |
| | 7 | | | | 5 | 6 | 4 | |
| 4 | 2 | 8 | | | 6 | 9 | 1 | 5 |
| | | | | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 8 | 6 | 9 | 1 | 3 | 4 | 7 |
| 7 | 9 | 1 | 4 | 3 | 8 | 2 | 6 | 5 |
| 4 | 6 | 3 | 5 | 2 | 7 | 9 | 8 | 1 |
| 1 | 7 | 5 | 3 | 8 | 9 | 4 | 2 | 6 |
| 2 | 8 | 6 | 7 | 5 | 4 | 1 | 3 | 9 |
| 3 | 4 | 9 | 1 | 6 | 2 | 5 | 7 | 8 |
| 8 | 1 | 2 | 9 | 4 | 6 | 7 | 5 | 3 |
| 9 | 3 | 4 | 8 | 7 | 5 | 6 | 1 | 2 |
| 6 | 5 | 7 | 2 | 1 | 3 | 8 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள் கூடும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## தேவை

01. பெண் ஆய்வுகூட உதவியாளர்
02. மாணவ விடுதிப் பராமரிப்பாளர் (பெண்)

30 வயதுக்குட்பட்ட திருமணமாகாத க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்தோர் எதிர்வரும் புதன்கிழமை (12.06.2013) அன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பப் பத்திரத்துடனும், இரண்டு நற்சான்றிதழ்களுடனும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**அதிபர்,** கண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(சி/9614 )(6.2.7)

குருவே துணை




**அருட்தந்தை வேதாத்ரி மகரிஷி அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட**

**அகத்தாய்வுப் பயிற்சி - I (தற்சோதனைப் பயிற்சி)**

ஆறு நாள்கள் பயிற்சி முடித்த மனவளக்கலை அன்பர்களுக்கு நாளை 08.06.2013, 09.06.2013 திகதிகளில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை அகத்தாய்வு I பயிற்சி நடைபெறவுள்ளது. இதில் பஞ்சபூத நவக்கிரக தவம், பஞ்சேந்திரிய தவம் இவற்றுடன் எண்ணம் ஆராய்தல், ஆசை சீரமைத்தல், வாழ்வின் நோக்கம், வாழ்த்தும் பயனும் இவைகள் கற்றுத் தரப்படவுள்ளன.

பயிற்சி பெற்ற அனைவரும் கலந்து கொண்டு பயனடையுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பயிற்சி வழங்குபவர்:-
பேராசிரியர் அருள்நிதி
S. இந்திரா அவர்கள்.

இடம்:-
வண்ணார்பண்ணை தவமையம்
(நாச்சிமார் கோயிலடியை அடுத்துவரும் அரசடியில் இருந்து கேசாவில் பிள்ளையார் கோயிலை நோக்கிய முற்சந்தியில் இடதுபக்க முதலாவது ஒழுங்கையில் உள்ளது)

வாழ்க வளமுடன்

தொடர்புகளுக்கு: 021 320 2320
இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
வண்ணார்பண்ணை தவமையம், யாழ்ப்பாணம்.
(9619)(6.7)

## விற்பனைக்கு

வாகன அனுமதிப் பத்திரம் விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 691 9525 (3869)(6.45)

## A/L இரசாயனவியல்

Personal & Group Class
(34 வருட வினாத்தாள் கற்பிக்கப்படும்.
S.Anojan, B.Sc. (Chem.sp.)
தொடர்பு: 077 0781 451
(37999)(6.45)

## தவறிவிட்டது

காரைக்கால் இணுவிலைச் சேர்ந்த சி.வியாபகன் என்பவருடைய தே.அ.அட்டை (900030473V) (03.06.2013) திங்கட்கிழமை காரைக்கால் வீதிக்கும் மருதனார்மட பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 075 657 5929/075 416 1150 (38045)(5.6.3)

## தேவை

பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு Foton (சிறிய ரக வாகனம்) வாகனத்துக்கு சாரதி தேவை.
தொடர்பு:
55,57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## FOR HIRE/வாடகைக்கு விடப்படும்

JCB(Backhoe), Dozer(D4E & mini), Exavator with Braker (heavy&Light), Tractor with Trailer or Carrier, Lorry with full body, Half body, With out body.

Contract for Land Cleaning, Land Scaping, Fencing and Planting.

எம்மால் கனரக இயந்திரங்கள் மூலம் நிலம் சுத்தமாக்கல், வடிவமைத்தல், வேலியிடல், மரநடுகை என்பனவும் செய்து கொடுக்கப்படும். (38636)(6.5)

தொடர்பு:0722263778,0714167878


# விஞ்ஞானப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் விஞ்ஞான தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் பிற்பகல் 1 மணிக்கு அதிபர் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விஜயந்திரசர்மாவும் சிறப்பு விருந்தினராக ரி.பாலசுப்பிரமணியமும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற பிரதி அதிபர் ஆர். ஜோர்ஜ்சும் கலந்துகொள்வார்கள். விஞ்ஞான தினப் போட்டியை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி என்பவற்றில் வெற்றி பெற்ற மாண வர்கள் விவரம் வருமாறு:-

தரம் - 6
முதலாம் இடம்-உ.சனாதனன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம்-.நிதர்சன் (சென்பற்றிக்ஸ் கல்லூரி), மூன்றாம் இடம்-ஜெ.நிக்ஷன் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

தரம் - 7
முதலாம் இடம்- கி.கஜலக்சி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம்- ர.நிதுசிகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாம் இடம்-து.ஏ.ஜதுசன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி),

தரம் - 8
முதலாம் இடம்- ச.கோபிகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம்-கெ.ரகுராஜ் (விக்கினேஸ்வரா கல்லூரி), மூன்றாம் இடம்- தே.மதுபிரதன்- (கொக்குவில் இந்துக் கல்லூரி) (ந)




## சாவகச்சேரி நகர் கற்குளி பெருங்குளம் வெற்றிலை இரத்தினம் பதியுரை திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் விழா - 07.06.2013

திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு இன்று (07.06.2013) முற்பகல் 10 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி நடைபெற்று, திருவமுது பூஜையும் இடம்பெறும்.

மாலை விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி உடுக்கை பம்பையுடன் காத்தவராயன் திருக்கதைப் படிப்பும் நள்ளிரவு ஸ்ரீ முத்துமாரி அம்மனும காத்தவராயரும் அலங்காரமாக எழுந்தருளி மடைப்பண்டம் எடுதல், வழந்து நேர்தலுடன் பொங்கல் நடைபெறும்.

14.06.2013 வெள்ளிக்கிழமை எட்டாம் மடை இடம்பெறும்.

- ஆலய நிர்வாகத்தினர்.

## வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

எமது சங்கத்தின் கீழ்காணும் வேலைகளுக்கான கேள்விகோரல்

1. சுற்றுமதில் அமைத்தல்
2. புதிய கட்டடத்திற்கான மின் இணைப்பு

மேலதிக விவரங்களைச் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். முடிவுதிகதி: 15.06.2013

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
முகாமையாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிக்குள் போக்குவரத்து மதகு திருத்த வேலையால்

கொழும்புத்துறை, ஜூன் 7
மணியம்தோட்டம் 2 ஆம் குறுக்குச்சந்தியில் அமைக்கப்பட்டு வரும் மதகின் கட்டுமானப் பணிகள் நீண்டகாலமாக முடிவுறுத்தப்படாமையினால் அந்தப் பகுதி மக்கள் பல போக்குவரத்து பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.
மணியம் தோட்டம் பிரதான வீதி தார் வீதியாக அமைக்கப்பட்டதன் பின்னர் அந்தப் பகுதி வெள்ள நீர் வடிந்தோட வசதியாக அமைக்கப்பட்ட பாலத்தின் பணிகள் மந்தகதியில் நடைபெறுவதால் பிரதான பாதையூடான போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ளன.



இந்த மதகு செப்பனிடப்படாமையால் 8 ஆம் குறுக்கு வீதி வரை இடம்பெற்று வந்த தனியார் போக்குவரத்துச் சேவை மணியம் தோட்டம் சந்தியுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
இதனால் மதகுக்கு அப்பால் உள்ளவர்களும் உதயபுரத்தில் உள்ளவர்களும் நீண்ட தூரம் நடந்து சென்று போக்குவரத்துச் சேவை பஸ்களைப் பயன்படுத்த வேண்டிய நிலை காணப்படுகிறது.
எனவே பொதுமக்கள், பாடசாலை மாணவர்களின் வசதி கருதி விரைவில் பணிகளை நிறைவுசெய்து போக்கு வரத்தை இலகுபடுத்த உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-135)

## "வடக்கே போகும் மெயில்" சிறுகதைத் தொகுதி வெளியீடு

சூரன் ஏ.ரவிவர்மா எழுதிய வடக்கே போகும் மெயில் சிறு கதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
சி.க.லோகநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் மா.நவநீதமணி சிறப்புரையையும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர். (ந)

## சிறுவர் கலை நிகழ்வு வவுனியாவில் இன்று

'கலை நிகழ்வின் ஊடாக சிறுவர்களின் உரிமைகளைப் பேணுதல்' எனும் தொனிப்பொருளில் சிறுவர் கலை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சிறுவர் அபிவிருத்தி அதிகார சபையும், வவுனியா மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து இந்த நிகழ்வை முன்னெடுக்கின்றன.இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரவும், சிறப்பு விருந்தினராக சிறுவர் அபி விருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிஅனோமா உட்படபலரும்கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-421)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக கணினி சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட இணையத்தள வடிவமைப்பு போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. வடமாகாண கல்வித் திணைக்களத்துடன் இணைந்து கணினிச் சங்கத்தால் "இணையத்தளம்-2012" எனும் தலைப்பில் இந்தப் போட்டி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-14)

# போக்குவரத்து விதியை மீறியவருக்கு ரூபா 22 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, ஜூன் 7
வீதிப் போக்குவரத்தை மீறி மோட்டார் சைக்கிள் செலுத்திய மீசாலை வடக்கு வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் புதன்கிழமை 22 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
வீதிப் போக்குவரத்தில் ஆபத்தை ஏற்படுத் தக்கூடிய வகையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த நபரை மீசாலைச் சந்தியில் வைத்து பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை செய்தனர். ஆயினும் குறித்த நபர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்றதால் பொலிஸார் துரத்திப் பிடித்தனர். இவரைச் சோதனையிட்டபோது மது போதையில் காணப்பட்டதுடன் சாரதிய அனுமதிப் பத்திரம் , வாகன வரிப் பத்திரம், காப்புறுதி ஆகியவை இல்லாமை கண்டுபிடிக்கப்பட்டது.
இந்த நபருக்கு எதிராக பொலிஸார் ஆறு குற்றச்சாட்டுக்களுடன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
இந்த வழக்கு புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஆறு குற்றங் களுக்குமாக 22 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தனர். அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஆறு மாத காலச் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ந-9)

# நல்லூர் பிரதேச செயலக இலக்கிய விழா பிரதேச மட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 7
நல்லூர் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட இந்த ஆண்டுக்கான இலக்கிய விழாவில் பிரதேச மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோரின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.
திறந்த பிரிவு
பாடல் ஆக்கப்போட்டி
முதலாம் இடம்-மு.பாலசுப்பிரமணியம் நல்லூர், 2 ஆம் இடம்-ச.அருணகிரிநாதன் வண்ணார்பண்ணை, 3 ஆம் இடம்- சி.சிவதாசன் அரியாலை.
நாட்டார் கலைகுற்றல் போட்டி
முதலாம் இடம்- சு.சிவராசா கொக்குவில் கிழக்கு, 2 ஆம் இடம்-தி.திலீபன் கோண்டாவில் கிழக்கு.
விவரணப் போட்டி
முதலாம் இடம்- க.தனமூர்த்தி அரியாலை. 2 ஆம் இடம்- ஆ.முகுந்தன் யாழ்ப்பாணம், 3 ஆம் இடம்- சி.சிவதாசன் அரியாலை.
சிறுகதைப்போட்டி
முதலாம் இடம்- சு.சிவராசா கொக்குவில் கிழக்கு, 2 ஆம் இடம்-ஆரணி முகுந்தன் யாழ்ப்பாணம், 3 ஆம் இடம்-தி.திலீபன் கோண்டாவில் கிழக்கு.
கவிதைப்போட்டி
முதலாம் இடம்- சு. சிவராசா கொக்குவில் கிழக்கு, 2.ஆம் இடம்- மு.பாலசுப்பிரமணியம் நல்லூர், 3 ஆம் இடம்-அ.பஞ்சலிங்கம் கோண்டாவில் கிழக்கு.
சிறுவர் கதைப்போட்டி
முதலாம் இடம்- சு.சிவராசா கொக்குவில் கிழக்கு.2ஆம்இடம்- ஆரணி முகுந்தன் யாழ்ப்பாணம். (வ-7)

## வவுனியாவில் கும்பாபிஷேகம்

வவுனியா, ஜூன் 7
வவுனியா முருகனூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சித்தி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேக நிகழ்வு கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
இதில் நாளை சனிக்கிழமை எண்ணெய் காப்பு இடம்பெற்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஐ-421)

## டிராக்டர் புரண்டு இளைஞர் சாவு

மன்னார், ஜூன் 7
டிராக்டர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் அதன் பெட்டியில் இருந்து பயணித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொருவர் படுகாயம் அடைந்து மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.
மன்னார் தாராபுரம் வருக்கவயல் பிட்டி வீதியில் நேற்று முன்தினம் மாலை நடந்த இந்தச் சம்பவத்தில் முஹம்மது லதீப் தாரிக் (வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.
இதில் படுகாயமடைந்த மற்றுமொருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். டிராக்டரை செலுத்திச் சென்றவருக்கு பாதிப்பு இல்லை. சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-12)

## கவிதைப் போட்டி புங்குடுதீவு மாணவி முதலிடம்



யாழ்ப்பாணம், ஜூன் 7
புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலய மாணவி செல்வி ற.டொறீனா தமிழ் தினப்போட்டியில் நான்காம் பிரிவுக்கான கவிதைப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.
இவர் அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். புங்குடுதீவில் இருந்து நீண்ட காலத்தின் பின் அகில இலங்கைத் தமிழ் தினப் போட்டியில் கலந்துகொள்கிறார் இந்த மாணவி. (ந-7)

## சமய சந்நிதிகளில்

பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி ஆலய பெருந் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது, எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

* * *

சாவகச்சேரி கற்குளி முத்துமாரி அம்பாள் ஆலய ... வெள்ளிக்கிழமை இடம் பெறும். (ந-9)


## 31 ஆம் நாள் நீங்காத நினைவுகள்



தவராசா அன்ரனியம்மா
நிலாவதி
[07.06.2013]
மண்ணில்
09.02.1972
விண்ணில்
08.05.2013
நகர்ந்துபோன நாள்களுக்குள் – உன்னை தேடுகின்றோம் – நிலவுபோல உதித்த நீ – இன்று ஒளி கொடுக்காது – தேய்ந்து போனதேனோ – உன் முகம் காண்பது எப்போது!
கணபதிப்பிள்ளை தவராசா
No.43/10, சென்மேரிஸ் வீதி, நாவாந்துறை வடக்கு.
க.தவராசா (கணவர்)

## கண்ணீர் அஞ்சலி



பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி சங்க செயலாளர் V.அனந்தன் அவர்களின் அன்புத் தந்தை
M.S.விஸ்வலிங்கம்
(ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், யா/பல்கலைக்கழகம்)
அவர்கள் 03.06.2013 திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(38046)(3.5.6)
பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிசங்கம், யாழ்.பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

வரணி கரம்பைக் குறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது பாடசாலை ஆசிரியை திருமதி தவராணி இராசேந்திரன் அவர்களின் பாசமிகு தந்தை
ஆழ்வான் வயிரன்
04.06.2013 அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்.
(38068)2.6.3)

## கண்ணீருடன்........

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவரும், ஈழத்தின் புகழ்பூத்த சிற்பக் கலைஞனும் சமூக சேவகனுமாகிய 'கலைஞான பூரணன்'
ஏ.வி.ஆனந்தன்
அவர்கள் 03.06.2013 இல் அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆறாத் துயரடைந்துள்ளோம். அவருக்கு எமது இதயம் கனக்கும் கண்ணீரை காணிக்கையாக்குவதுடன், அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.



238,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
இயக்குநர்,அங்கத்தவர்கள் திருமறைக்கலாமன்றம்.
குறிப்பு:
✽ நாளை சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு அமரர் ஏ.வி. ஆனந்தன் அவர்களின் பூதவுடல் எமது மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்த்தப்படவுள்ளது. இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு எமது மன்றத்தின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.
✽ நாளையும், நாளைமறுதினமும் மேடையேற்றப்படவிருந்த 'ஞானசௌந்தரி' இசைநாடகம் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும்

பிறப்பு 06 * 03 * 1930

இறப்பு 20 * 05 * 2012



**திருமதி ஞானேஸ்வரி இரத்தினம்**

**திதி: 08.06.2013**

20.05.2012 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் திருமதி ஞானேஸ்வரி இரத்தினத்தின் ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அன்னாரது வேலணை இல்லத்தில் இடம்பெற உள்ளன. எனவே உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு, மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

8ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு, வேலணை.

(35264)

குடும்பத்தினர்.

## ஓராண்டின் நினைவில் தாயே....



**திருமதி நாகம்மா மாணிக்கம்**

(நாகம்மா ரீச்சர் - இளைப்பாறிய ஆசிரியை)

திதி:- 07.06.2013

தோற்றம்
17.03.1918

மறைவு
19.05.2012

சிரிப்பு ஒலிகளை எழுப்புவதில்
இவர் ஒரு பல்கலைக்கழகம்
பொடி நடை, பெருநடை இவைதான்
இவர்தம் நீண்ட ஆயுளின் இரகசியம்
ஊர்த் தொண்டு செய்ய தன்பிள்ளை
தானாக வளரும் என்பது இவரது வேதவாக்கு
நான் யார் மனதையும் நோக நடக்கவில்லை ஆதலால்
என் வாழ்வு சிறக்கும் என்பது இவரின் தாரக மந்திரம்
சிறப்பாய் இருந்தாய், ஊர் போற்ற வாழ்ந்தாய்,
உத்தமியாய் மறைந்தாய்!
நல் மாணாக்கர்களை உருவாக்கினாய்!
பண்டிதரின் மனைவியாய் இருக்க
பாக்கியமும் பெற்றாய்! இப்போ வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்பட்டிருப்பாய் தாயே!

இன்று (07.06.2013) வெள்ளிக்கிழமை அளவெட்டி, தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் இவரது ஆத்ம சாந்திப் பூஜையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உந்துடை, அளவெட்டி வடக்கு. (37990)(2.6.3) **குடும்பத்தினர்.**

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

தோற்றம் – 04.06.1942







மறைவு – 19.05.2012
திதி: சதுர்த்தசி
திருமதி
**டில்லியம்மா இரத்தினகோபால்**
(ஓராண்டு நினைவு)

மறைவு – 05.03.2004
திதி: மாசிமகம்
அமரர்
**நடேசன் இரத்தினகோபால்**
[முன்னைநாள் சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் – காங்கேசன்துறை.]

மறைவு – 15.08.2005
திதி: ஏகாதசி
அமரர்
**இரத்தினகோபால் சிவனேந்திரராசா** (ரவி)
[முன்னைநாள் தொழில் நுட்பக் கல்லூரி ஊழியர்–கொக்குவில்]

ஓராண்டு போனதம்மா உன் கணவர், மகன் நிழலில் நீ சேர்ந்து
ஆனாலும் எம் நினைவில் நிழலாய் என்றும் நீங்கள் வாழுகின்றீர்கள்
நிஜமாக எம்மை விட்டு பிரிந்ததை அறிந்து துடியாய் துடித்தோம்
பிறப்பென்றால் இறப்பென்பது நிஜமாகும்-என
மனதைச் சாந்திப்படுத்திக் கொண்டு உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(38059)(5.6)

**'வனஜா வாசா'**
**ஆனைக்கோட்டை.**

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
021 5671111
advt@uthayan.com

மருத்துவர்
திருமதி **லோஷனி லக்ஷ்மன்** அவர்களின்

## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

திருமதி லோஷனி லக்ஷ்மன் நோயுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் அவருக்கு சிகிச்சையளித்த வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் தாதியர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும்.

மேலதிக சிகிச்சைக்காக வேலூர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு ஆலோசனை நல்கி உதவி புரிந்த மருத்துவ நண்பர்களுக்கும்.

ஏறக்குறைய ஆறுமாத காலம் சிகிச்சைக்காக இந்தியாவில் தங்கியிருந்தவேளை நேரடியாகப் பிரசன்னமாகியும் மற்றும் இங்கிருந்தும் உற்ற துணை புரிந்த அன்புள்ளங்களுக்கும்.

அவர் விரைவில் குணமடைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்த நல் உள்ளங்களுக்கும்.

இறுதியாக அவர் சிவபதம் அடைந்த பின்னர் பூதவுடலை இங்கு எடுத்துவர முழுமூச்சாக துணைநின்று உதவி நல்கியோருக்கும்.

இறுதி நிகழ்வின் போது பிரார்த்தனை செய்த சர்வமதப் பெரியோர்களுக்கும்.

அஞ்சலி உரைகள் ஆற்றியோருக்கும்.

பத்திரிகை வாயிலாக அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், அஞ்சலிப் பதாகைகள் வெளியிட்டோருக்கும், மலர்வளையம், மலர்க்கொத்து வழங்கியோருக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி, மின் அஞ்சல், குறுஞ்செய்தி, அஞ்சலி மடல்கள் மூலம் எம் துயரில் பங்கு கொண்டோருக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக சகல வழிகளிலும் பூரண ஒத்துழைப்பு நல்கிய யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கும், நிர்வாகத்தினருக்கும்.

விசேடமாக எமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தோளோடு தோள்நின்று அனைத்து வழிகளிலும் அக்கறையுடன் உதவி நல்கிய யாழ். போதனா வைத்தியசாலை உணர்வழியியல்
துறையினருக்கும் இதய சிகிச்சைப் பிரிவினருக்கும்.

மற்றும் எம் துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றோம்.

(38049)(3.5.6)

**267, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**பூ.லக்ஷ்மன்**
**குடும்பத்தினர்.**

உதயன் விளம்பரத் தொடர்புக்கு–
advt@uthayan.com
0215671111

## 20 ஆவது பிறந்த தினமும் 175 ஆம் நாள் நினைவு அஞ்சலியும்



செல்வி
**கோபாலசிங்கம் யனுசா**

பிறப்பு: 07.06.1993
இறப்பு: 14.12.2012

வீட்டுக்கு குலவிளக்காக
நண்பர்களுக்கு ஒளி விளக்காக
மண்ணுக்கு விதையாக
மறைந்தாலும் – உன் பிறந்த நாளில்
நினைவிழந்து நிற்கின்றோம்

A/L (2013) நண்பர்கள்,
மாதகல்.

(38056)(2.6.7)

## 120 ஆம் நாள் நினைவும் பிறந்தநாளும்



தோற்றம்
07.06.1964

மறைவு
08.02.2013

அமரர் **கிருஷ்ணன் அன்பழகன்**
(கண்ணன்)


*அன்று வெள்ளிக்கிழமை நீ மறைந்தாய்*
*இன்று வெள்ளிக்கிழமை உன் பிறந்த நாள்*
*கடந்த ஆண்டு நீ பிறந்த நாளன்று*
*கோயிலுக்கு போய் வந்து உன் நெற்றியில்*
*திருநீறும் சந்தனமும் வைத்தேன்*
*இன்று உன்னை அழைக்கின்றேன்*
*நீ இல்லை என்றும் உன் நினைவில்....*

– அப்பா அருகில்

244/4, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(37967)(8.II)

அம்மா, சகோதரர்,
மனைவி, பிள்ளைகள்




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# காவலரணை படை முகாமாக்க முயற்சி

## பாஷையூர் மக்கள் அதிருப்தி

**1995 ஆம் ஆண்டு முதல் நிலை கொண்டுள்ள படையினர் நிரந்தர கட்டடங்களை அமைக்கும் முகமாக அங்குள்ள மரங்களை தறித்து கட்டு மானப் பணிகளை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்**

யாழ்ப்பாணம், ஜூன் 7

பாஷையூர் கடற்கரைப் பகுதியில் இருக்கும் தற்காலிக இராணுவ காவலரணை நிரந்தர முகாமாக மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாஷையூர் சந்தைக்கு மேற்குப் புறமாகவுள்ள சனசமூக நிலையத்தை அண்டிய பகுதியில் 1995 ஆம் ஆண்டு முதல் நிலை கொண்டுள்ள படையினர் நிரந்தர கட்டடங்களை அமைக்கும் முகமாக அங்குள்ள மரங்களை தறித்து கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்என்றுகூறப்படுகிறது.

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த இந்தக் கடற்கரைப் பகுதி படிப்படியாக விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

அந்தப் பகுதியில் உள்ள சனசமூக நிலையத்தையும் அதனை அண்டிய நிலப் பகுதியையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் பல வருடங்களாக வைத்திருக்கும் படையினர் நிரந்தரக் கட்டடங்களை அமைக்கத் திட்டமிட்டு வருவது கவலையளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ந-135)

## நமக்கு எல்லாம் தேவைதானா?

வேதாந்தம் செல்வத்தை விட்டுவிடு என்று கூறவில்லை. அதிலுள்ள தணியாத தாகத்தையே விட்டுவிடும்படி கூறுகின்றது. பொருள்கள் போதுமானதாக இருந்தாலும் போதாது என்று அலைவதையே கண்டிக்கின்றது. பயனுள்ள பொருள்களை வேண்டாமென்று வேதாந்தம் கூறவில்லை. ஆனால் அதனோடு ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பு புத்திசாலித்தனமாக, தூய்மையுள்ளதாக அமையவேண்டும். இருப்பதற்கு இடம், குடிப்பதற்கு நீர் தேவை. சுவாசிப்பதற்கு காற்றுத்தேவை. அதுபோல் உறக்கம், ஓய்வு, பசி, உதவி, பாதுகாப்பு, உணவு இவைகள் தேவைதான். ஆனால் அளவுடன் இருக்கவேண்டும்.

இவ்வாறு மனத்தை கட்டுப்படுத்திய பின் நிம்மதியும் நிலைக்கும். இது, அது என்று அலைபாயாது தவறு அன்றாட கவலையிலிருந்து விடுபட்டு மனம் வெளி உலகிலிருந்து உள்ளெடுக்கப்படுமானால் அது சூனியமாகின்றது. அது தனக்குள்ளே அதாவது மனத்துள்ளே ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தி அமைந்து கொள்கின்றது. அப்போது பேரானந்தத்தை தனக்குள்ளே தேடிக்கொள்ளும் வாய்ப்பு இலகுவாக ஏற்படுத்தப்படுகின்றது.

ஞானக்கதிர்



இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடத்தப்பட்ட அதிபர்களுக்கான கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை தரம்பெற்ற அதிபர்கள் சேவை சங்கத்தின் தலைவர் ஏ.சீ.எம்.ஜவுசினுதீக்கு கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ். சிவசிதம்பரம் பொன்னாடை போர்த்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (ந-11)

## 'தோட்டி' குறும்பட வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 7

நெடுந்தீவு முகிலனின் 'தோட்டி' குறும்பட வெளியீடும், 'சாம்பல்' குறும்பட அறிமுக விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்ட பத்தில் இடம்பெறவுள்ளன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப் பாளர் என்.ஸ்ரீதேவி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வு களில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவனும், சிறப்பு விருந்தினர்களாக மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப் பாளர் திருமதி சரோஜா சிவசந்திரனும் யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் அறிமுக உரையை ஊடகவியலாளர் தையை மணிவாணனும், தோட்டி குறும் படத்தின் ஆய்வுரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் என். வித்தியாதரனும், 'சாம்பல்' குறும்படத்தின் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சலஸீசனும் நிகழ்த்தவுள்ளனர். (ந-100)

## மாணவிக்கு உதவி

சங்கானை, ஜூன் 7

சர்வதேச புற்றுநோய் தினத்தை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட விழிசுட்டி சங்கானையைச் சேர்ந்த மாணவி டிலக்ஷிகா சந்திரனின் இரத்தப் புற்று நோய் சிகிச்சைக்கும் வாழ்வாதார உதவிக்குமாக 75 ஆயிரத்து 70 ரூபா வழங்கப்பட்டுள்ளது. வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான பகுப்பாய்வின்போது மேற்படி சிறுமி இரத்தப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து பிரதேச சபை தவிசாளர் மனிதாபிமான அடிப்படையின் உதவியில் உதவி எனும் திட்டத்தில் சிறுமிக்கான உதவியைக் கோரியிருந்தார். அதனடிப்படையில் பிரதேச செயலகங்கள், மாநகர, நகர சபைகள் ஊடாக சேர்க்கப்பட்ட நிதியே சுந்த செவ்வாய்க்கிழமை வைப்பிலிடப்பட்டு சிறுமியின் தாயிடம் வழங்கப்பட்டது. (ந)

## மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு மின்பிறப்பாக்கி விரைவில்

நவாலி, ஜூன் 7

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் புதிய மின்பிறப்பாக்கி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலையில் மின்சாரம் இல்லாத வேளையில் பிரசவங்களுக்குக் கூட வெளிச்சமின்றி அரிக்கன் லாம்புகளின் உதவியுடன் ஊழியர்கள் கடமை ஆற்றி வருகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் சுகாதார சேவைகள் பணிப் பாளர் ஆ.கேதீஸ்வரனுடன் கடிதம் மூலம் தொடர்பு கொண்டதற்கிணங்க புதிய ஜெனறேற்றர் ஒன்றை உடனடியாகத் தருவதாக வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் தெரிவித்துள்ளார். (ந-100)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 7

'எழுதாத ஒரு கவிதை' த. ஜெயசீலன் எழுதிய கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற வுள்ளது. பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் நிகழ்த்துவர். நூலின் முதல் பிரதியை வட மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் கல்வி பண்பாட்டலுவல்கள் செயலாளர் எஸ்.சத்தியசீலன் பெற்றுக் கொள்வார். (வ)

## விண்ணப்பம்கோரல்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் கல்வி முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை பிறவுண் வீதியில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (த-400)


# மரண அறிவித்தல்

## M.S. விஸ்வலிங்கம்

(ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம், விஸ்வா திருமண சேவை - கோண்டாவில்)



கோண்டாவிலைச் சேர்ந்த M.S. விஸ்வலிங்கம் கடந்த (03.06.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் யோகேஸ்வரியின் (ஆசிரியர், நெசவு தொழில்துறை திணைக்களம், கந்தர்மடம்) அன்புக் கணவரும், அனந்தன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), அகிலன் (BSC மல்ரிமீடியா), நளாஜினி (ஜேர்மனி), ராஜினி (B.A யாழ் பல்கலைக்கழகம், லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜஸ்ரின் ஜோய் (போதகர் ஜேர்மனி), ஜேந்திரன் (MSC நோர்தேன் பிறியா பல்கலைக்கழகம், லண்டன்) ஆகியோரின் மாமனும், கபிரியேல், வலன்ரீனா, விக்ரோரியா ஆகியோரின் பேரனும், கனகம்மா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும், கனகலிங்கம் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கே.கே.எஸ்), குகராஜா (லிகிதர்-யாழ்/இந்துக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2013) வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப 11 மணிக்கு அஞ்சலி உரை நிகழ்வும், பி.ப 1 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சென். செபஸ்ரியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(38042)
(10,6,3)

தகவல்:
குடும்பத்தினர்
078 495 2798, 021 568 0498

# மரண அறிவித்தல்

## செல்லத்தம்பி தருமலிங்கம்



மண்கும்பான் 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி தருமலிங்கம் 01.06.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-மாரிமுத்து தம்பதியரின் அருமை மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் ஆருயிர்க் கணவரும், ஜெயலட்சுமி, வரதலெட்சுமி (லண்டன்), இராஜேஸ்வரி (இளைப்பாறிய உப தபாலதிபர்), தனேஸ்வரி (ஆசிரியர், சென் ஜேம்ஸ் மகளிர் மகாவித்தியாலயம்), ஞானேஸ்வரி (லண்டன்), சதீஸ்வரி (வவுனியா), விக்கினேஸ்வரி (லண்டன்), நகுலேஸ்வரி (லண்டன்), ஜெகதீஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரசூரியர் (சுவிஸ்), காலஞ்சென்ற இராஜகோபால், அன்ரன் யேசுதாசன் (ராணி நகை மாடம், வவுனியா), லோறன்ஸ் ஜேந்திரா (ஜெயப்பிரதா நகை மாடம், யாழ்ப்பாணம்), நவரெத்தினராசா (லண்டன்), சற்குணபாலசிங்கம் (அருள் குமரன் நகைமாடம், வவுனியா), ரூபகாந்தன் (லண்டன்), கலீந்திரராசா (லண்டன்), சர்வேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் பவளம் (லண்டன்), K.S. சரவணமுத்து (அருச்சுனன்), காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (தேசிங்குராசா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திரா காந்தி- சிவலிங்கம் (சுவிஸ்), வதனா-ஞானசபேசன் (ஜேர்மனி), வாசுகி-ராஜன் (லண்டன்), நிமலன்-கவிதா (லண்டன்), பிரதீபன், சுரேஸ்-யசோதா (சுவிஸ்), வசந்தன் (கனடா), விஜிதா-லவன் (லண்டன்), காந்தன்-ஆர்த்தி (ஜேர்மனி), ரூபன்-துஷா (லண்டன்), சுதா (கனடா), லக்ஷா-ஜெகன் (கனடா), றஜீவ் (பிரான்ஸ்), ஹஜீவ் (பிரான்ஸ்), பிரதாப்-சுபைடா (கனடா), கிரிஷாந் (NDB Bank சுன்னாகம்), சஜீத் (உயர்தர மாண வன்), நிஷாந்த்-நிஷாந்தினி (லண்டன்), நித்தியா-தாஸ் (ஜேர்மனி), தனுசாந்த் (லண்டன்), நிஷானி-ஆதவன் (கனடா), கிசோக் (மனேச்மன்ற் மாணவன்), பிரசாந்த் (பொறியியல் பீடம்), துஷாந்த் (லண்டன்), துஷானா (லண்டன்), அஶித்தன், கீத்தனா, நதீனா, சுஜான், சயீனா, சஸ்விந் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், சோபினா, சர்மினா, சஸ்வினா (சுவிஸ்), வினித், சஞ்சித், டினோத் (லண்டன்), சுசான், சுசானா (ஜேர்மன்), றொசான், றொசானி, அஸ்வின், அர்னிஸ், அபிஷன் (லண்டன்), ஹாசினி (ஜேர்மன்), கனிஷன், கபிஷன் (கனடா), அஷ்வந், பிரஷீத், கவுஹரிஸ் (ஜேர்மன்), தமிரா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (07.06.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மண்கும்பான் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
மண்கும்பான் மேற்கு, வேலணை.

(38066)(10,6,3)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகீத் இருக்கிறாரா?

## அவரை உடன்கொண்டு வாருங்கள்
## இலங்கை அரசுக்கு மனைவி சவால்

கொழும்பு, ஜூன் 7

கடத்தப்பட்டு காணாமற்போன ஊடக வியலாளர் பிரகீத் எக்னெலிகொட பிரான்சில் வாழ்வதாக, இலங்கையின் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்த நிலையில், இதுகுறித்து அவரது மனைவி ஆச்சரியம் வெளியிட்டுள்ளார்.

புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ, காணா மற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட பிரான்சில் வாழ்வதாக தனக்குத் தகவல் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

தன்னை மறைத்துக் கொண்டு வேறொரு பெயரில் வாழும் அவரை சந்தித்துப் பேசிய பலரை தான் அண்மையில் சந்தித்துள்ளேன்.

ஊடகவியலாளர்கள் பலரும் வெளிநாடுகளில் வாழும் நிலையில் நீதிமன்றங்களில் அவர்கள் காணா மற்போனதாக வழக்குகள் நடத்தப்படுகின்றன.

அவர்களின் மனைவிமார் போராட்டங்களை நடத்துகின்றனர். அதற்கு வெளிநாட்டுத் தூதரகங்கள் துணை போகின்றன.

ஊடகங்களுக்கு முன்னால் அழும் பிரகீத்தின் மனைவி அவருடன் பிரான்சில் வாழ்கிறார்.-என்றார்.



அவரது இந்தக் கருத்துக் குறித்து பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா ஆச்சரியம் வெளியிட்டுள்ளார்.

அது உண்மையென்றால் அவரது இருப்பிடத்தை இலங்கை அரசு வெளியிட வேண்டும். அவரை கொழும்புக்கு கொண்டு வரவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

தலைமை நீதியரசராக இருக்கும் மொஹான் பீரிஸும் முன்னர், பிரகீத் வெளிநாட்டில் வாழ்வதாக கூறியிருந்தார்.

அவர் எங்கிருக்கிறார் என்பது அவர்களுக்குத் தெரிந்தால் அவரை திரும்பக் கொண்டு வருவதற்கு அவர்களுக்கு சகல உரிமைகளும் உள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ச)

---

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

## மணிவிழா வாழ்த்து



இன்று (07.06.2013)
மணிவிழாக் காணும்
எமது அதிபர்

உயர்திரு. வேலுப்பிள்ளை
விநாயகமூர்த்தி

அவர்கள் மேன்மையுடன்
பல்லாண்டு காலம் வாழ
வேம்படி விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

(C/9796)(10.6.3)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
09.12.1935

மறைவு
08.05.2013

அமரர் கந்தையா கதிரவேல்ஐயா

என் அருமை பெரியப்பாவே!
காலக் கடிகார முட்கள்
எத்தனை நாள்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது

என்றும் நினைவுடன்

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

(38069)(2.6.7)

பா.சிவகுமார் (பெறாமகன்)

---

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07.05.1951

மறைவு
23.05.2009

திதி:சதுர்த்தசி

அமரர் சின்னத்துரை சதாசிவம்

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடங்களோ நான்காகின - அப்பா
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்....

519, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(38071)(2.6.7)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

---

Investments PLC

மாதம் - 24%, 3 வருடம் -30% 30 June வரைக்கும்.
தொடர்பு: 021 568 5999, 077 060 2224
நிபந்தனைக்குட்பட்டவை.

---

## காணி விற்பனைக்கு

யாழ். அரசடி வீதியில் நல்லூர் கோயில் அருகில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:-021 222 9157- 0757763694

---

## தேவை

- ★ கணினி தெரிந்தவர்கள் (Computer)
- ★ பண வசூலிப்பாளர் (Cash Collector)
- ★ சாரதி (Driver)
- ★ Medical Marketing தெரிந்தவர்கள் (மூன்று மொழியும் முக்கியம்)
- ★ விற்பனை பிரதிநிதி (Rep)

சிவா பிறதர்ஸ்
கொக்கோலா விநியோகஸ்தர்
யாழ்ப்பாணம்.
0777722215

(38076)

---

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

---

## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)**
**வட்டாரம் : 13**
**ஆதன இலக்கம்: 57/78**
**மல்லாகம் றோட் (விவசாய வீதி)**

வட்டாரம் 13, மல்லாகம் றோட் (விவசாய வீதி), ஆதன இலக்கம் 57/78 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோயில்பற்று சண்டிலிப்பாய் இறை "ஐயாத்தைப்புலம்" எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 8.4 கொண்ட ஆதனம்). இந்த ஆதனமானது சண்டிலிப்பாயைச் சேர்ந்த சீனியன் கைம்பெண் நாகி என்பவரால் சீதன உறுதி மூலம் கார்த்திகேசு பெண் பவளராணி என்பவர்களுக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் நன்னியர் தம்பிமுத்து முகதாவில் நிறைவேறிய 1606 ஆம் இலக்க 14.11.1998 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "இந்த ஐயாத்தைப்புலம்" நிலப்பரப்பு 01 குளி 8.4 இந்த ஆதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாள்களுக்குள் கோரப்படாதவிடத்து இந்த ஆதனம் கார்த்திகேசு பெண் பவளராணி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(38072) (10.6.3)

---

## மரண அறிவித்தல்

### சிவகுரு சிவயோகநாதன் (சின்னக் குஞ்சன்)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சிவயோகநாதன் நேற்று (06.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வநாயகியின் அன்புக் கணவரும் நதீசனின் (ஜேர்மனி) பாசமிகு தந்தையும் தவமணிதேவி, ஜெயபாலரத்தினம், சண்முகசுந்தரம், அமிர்தாம்பிகை, செல்வரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகலிங்கம், சோமசுந்தரம், குணலக்ஸ்மி, கமலாதேவி, மனோகரலிங்கம், தேவலிங்கம், கிருஷ்ணானந்தலிங்கம், நவசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.06.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் வண்ணாத்திப்பாலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(35062)

தகவல்:
குடும்பத்தினர்.

---

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
CHUNNAKAM

## கடைகளை வாடகைக்கு வழங்குதல்- 2013

எமது சபையின் 23.05.2013ம் திகதிய பத்திரிகை விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

05. விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 07.06.2013 12.00மணி. பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்ப படிவங்கள் திறக்கப்படும் திகதி 07.06.2013 பி.ப 2.00.

தி.பிரகாஷ்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(E/8824)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருள்மிகு புதுவையூர் கோம்பாவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா விஞ்ஞாபனம்

*நாகதம்பிரான் பக்த அடியார்களே:*

புதுக்குடியிருப்பு கோம்பாவில் பதிதனில் வீற்றிருந்து அகில உலகத்தையும் ஆளுகின்ற பக்தர்கள் கேட்கின்ற வரங்களை வாரி வழங்குகின்ற நாகதம்பிரானின் வருடாந்த பொங்கல் விழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

நிகழும் மங்களகரமான விஜய வருடம் வைகாசித் திங்கள் 27ஆம் நாள் (10.08.2013) திங்கட்கிழமை நடைபெற இருப்பதால் அனைத்து நாகதம்பிரான் பக்த அடியார்களும் பொங்கல் விழாவில் பங்கு பற்றி நாகதம்பிரான் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோம்பாவில், புதுக்குடியிருப்பு. [சி/8626] *புதுவையூர் நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை.*

# நயினாதீவு இறங்குதுறையில் பக்தர்களுக்காகக் கொட்டகை

யாழ்ப்பாணம், ஜூன் 7

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய திருவிழாவை முன்னிட்டு பிரதான இறங்கு துறையில் இருந்து ஆலயம் வரையும் பக்தர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு ஆலய அறங்காவல் சபையினர் இந்த முறை கொட்டகை அமைப்பதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளனர்.



அமுதசுரபி அன்னதான சபையும் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் தெற்கு வாயிலில் இருந்து அன்னதானசபை மண்டபம் வரையான பிரதான வீதியில் பந்தல் அமைக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளது. (வ-7-17)

## லொறி விற்பனைக்கு

W.P.L.J தொடரிலக்கம் கொண்ட லங்கா அசோக் லேலண்ட் (LANKA ASHOK LEYLAND) (ecomed) லொறி விற்பனைக்குண்டு. (38080)
தொடர்புகளுக்கு: 0777784314- 0776007775

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 7

நவிண்டில் தாமோதரம் வித்தி யாலயத்தில் இருந்து இரும்பு மதவடி வரையான பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார் வயல் பிரதேசம் ஆகிய இடங்களில் இன்றும், பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, தட்டாதெரு தொடக்கம் முட்டாஸ் கடைச்சந்தி வரையான பிரதேசம், மனோகரா தியெட்டரடி பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, செம்மணி, நாவற்குழி, அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமனாறு வீதிப் பிரதேசம், ஆகிய இடங்களில் நாளையும் திருத்த வேலைகளுக்காக மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபை தெரிவித்துள்ளது. (த-ரி)

# ஆத்மாஞ்சலி நிகழ்வில் கல்வி மேம்பாட்டு அறக்கட்டளை வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்.போதனா வைத்தியசாலை உணர் வழியியல் துறை வைத்தியர் அமரர் லோஷனி லக்ஷ்மனின் ஆத்மாஞ்சலி நிகழ்வும் நூல் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப நான்கு மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்வி மேம்பாட்டுக்கான அறக்கட்டளைக்கு நிதி வழங்குதல், முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட வித்தியாலயத்துக்கு நிதி வழங்குதல், உளநலநூல் வெளியீடு நினைவுபடுத்தலுக்கான உரிமை குறித்த சிறப்புரை என்பனவும் அஞ்சலி உரைகளும் இந்நிகழ்வில் இடம் பெற உள்ளன. (அ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

இம்மையில் 27 09 1940 — மறுமையில் 09 05 2013



அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் டாக்டர்
### சுப்பிரமணியம் சிவராமலிங்கம்
[சிவனேசன்] RMO

(ஜனா மருத்துவ நிலையம் கொக்குவில், தியாகராஜா கிளினிக் திருநெல்வேலி)

*விதியின் வலிமையால் வீழ்ந்துவிட்ட*
*எங்கள் குடும்ப விருட்சமே!*
*வேரிழந்த விழுதுகளாய் விம்மி விசும்புகின்றோம்*
*மதிகெட்ட காலனவன் கண்ணிமைக்கும் கணத்துள்*
*சதி செய்து கவர்ந்திட்ட சேதியை என்னென்று*
*நாம் உரைப்போம்*
*ஊர்கூடி அழுதென்ன ஓடியே சென்றுவிட்டீர்*
*பார் போற்ற வாழவைக்க இனி யார் உளர் எமக்கிங்கு*
*வழிகாட்டி நீங்களின்றி தடுமாறித் தவிக்கின்றோம்*
*பாசத் தந்தை நீங்கள் விண்ணேகி மாசம் ஒன்றாச்சு*
*நேசத்துடன் நீர் உரைத்த நல்லுரைகள்*
*இன்னும் எதிரொலிக்க*
*அவசரமாய் எங்கு சென்றீர்*
*உங்கள் ஆத்மா சாந்திக்காய் நிதமும் பிரார்த்திப்போம்*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (06.06.2013) கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று வீட்டுக் கிரியைகள் நாளை (08.06.2013) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுவதுடன் அன்னாரது மரணச் செய்தியை அறிந்து நேரிலும் தொலைபேசிமூலமும் எமது துயரைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

21/3, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### திருமதி சோதி பரமன்



குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கைச் சேர்ந்த திருமதி சோதி பரமன் நேற்று (06.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டாரி - பொன்னி தம்பதியரின் மகளும் பரமனின் அன்பு மனைவியும் யோகம், நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, தனேஸ்வரி, தவராசா, இராசேந்திரன், ரவிச்சந்திரன் (குழந்தை - ரவி- ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் குமாரசாமி (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரவெட்டி) திருஞானசுந்தரம், இந்திரன், தவராசா, சுபத்திராதேவி, வாசுகி, துஸ்யந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புத்தூர் அந்திரனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு.* (38081) *தகவல்: குடும்பத்தினர்.*

## மரண அறிவித்தல்

### அமரர் புதுநாயகம் தேவராசா அவர்கள்



துன்னாலை மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.தேவராஜா புதுநாயகம் அவர்கள் 2013.06.06 வியாழக்கிழமையன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசு-சின்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற தேவராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சிவயோகம், உருக்குமணி, கந்தசாமி, மனோன்மணி, வீரவாகு, வெற்றிவேல், வடிவேல் மற்றும் செந்திவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌரி (அதிபர்-யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வசந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சேதுராஜா (அதிபர்-யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) சிவசேகரம் (Ruhbins Building Constructors) ஆகியோரின் அன்பு மாமியாரும் வருண்பிரசாந் (பொது வைத்தியசாலை, வவுனியா), மாளவிகா (MedSource - Colombo), மெக்ஷிபாரதா (Malabe Medical College), ருபின்பிரகாஷ் (மாணவன் - யா/ஹாட்லிக்கல்லூரி), ஞானகலா (செட்டிகுளம் ஆதார வைத்தியசாலை), தனராஜ் (ITN) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் அவரது இல்லத்தில் 2013.06.06 அன்று பி.ப. 4.00 மணிக்கு இடம்பெற்று உடல் தியான்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னார் சுகவீனமுற்றிருந்தவேளை அன்னாருக்கு அக்கறையோடு சிகிச்சையளித்த யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் முத்துலிங்கம்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் முத்துலிங்கம் கடந்த 04.06.2013 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் ஸ்ரீமதி அம்மாவின் அன்புக் கணவரும் ஆரியகுட்டி - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற ஸ்ரீஸ்தரனின் மைத்துனரும் சிந்தாமணி, பூரணகாந்தி, காலஞ்சென்ற இந்திராணி மற்றும் உலகேஸ்வரி, மனோன்மணி, கமலாதேவி, சோதிலிங்கம், காலஞ்சென்ற விஜயதாஸ் ஆகியோரின் சகோதரனும் லோகநாதன் (ஜேர்மனி), மோகனதாஸ் (கனடா), மதிவதனி (சுவிஸ்), குகனாதன் (பிரான்ஸ்), ஜெகநாதன் (பிரான்ஸ்), ரகுநாதன், சுதர்சினி, கஜானி, சிவரங்கன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சினி (ஜேர்மனி), மதிவதனி (கனடா), ஞானதாஸ் (சுவிஸ்), பிரதா (பிரான்ஸ்), ஜெகன் (கஜானி காலணியகம், மானிப்பாய்) ஆகியோரின் மாமனும் ஓவியா, விதுஷா, அதிஷயா, ஆஷாஸ்ட், அபிநாஷ், அனோஜ், கிருஷென், அனுஷன், ஜானுஜா, தன்சிகா, சஜங்கன், சானுஜன், கஜீவ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.06.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த [illegible]

*சுதுமலை கிழக்கு, மானிப்பாய்.* (38082) *[illegible] (கஜானி காலணியகம்)*

## மரண அறிவித்தல்

### இராஜதுரை சற்குணம்



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா மெல்போர்னை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜதுரை சற்குணம் கடந்த 04.06.2013 உடுப்பிட்டியில் காலமானார்.

அன்னார் ஸ்ரீ காந்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசதுரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் மனோகரன் (லண்டன்), மனோகரி (சிட்னி ஆஸ்திரேலியா), அரிச்சந்திரன் (மெல்போர்ன்- ஆஸ்திரேலியா), சூரியகுமார் (சிட்னி- ஆஸ்திரேலியா), லலிதா (மெல்போர்ன்- ஆஸ்திரேலியா), இராஜேஸ்வரன் (மெல்போர்ன்- ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு உடுப்பிட்டியில் உள்ள அன்னாரின் மைத்துனி சாம்பசிவம் அமிர்தவல்லியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பவாளி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] கோயிலடி, பிரதான வீதி, உடுப்பிட்டி. (38083) *தகவல் குடும்பத்தினர். நிமல்: 0775349142*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘வன்னியின் பெரும் போர்’ இன்று ஆரம்பமாகிறது



புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியினர்.

புதுக்குடியிருப்பு, ஜூன் 7

கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கும், புதுக்குடியிருப்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான ‘வன்னியின் பெரும் போர்’ நட்புக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

மூன்றாவது தடவையாக நடைபெறவுள்ள ‘வன்னியின் பெரும் போர்’ கிரிக் கெட் சமர் ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து இன்று மதியம் ஒரு மணிக்கு புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில்ஆட்டம் ஆரம்பமாகவுள்ளது.

2007 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் கை ஓங்கியிருந்தபோதும், மழை குறுக்கிட்டமையால் ஆட்டம் சமனிலையில் முடிந்தது.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற சமரில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 9 இலக்குகளால் சிறப்பான வெற்றியைப் பெற்றது. தொடர்ந்து நாட்டில் இடம் பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக போட்டிகள் இடம்பெறவில்லை.

இச்சூழ்நிலையில் வெற்றியைத் தொடரும் முயற்சியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும், வெற்றியைச் சமப்படுத் தும் கங்கணத்தில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணியும் இம்முறை களமிறங்குகின்றன.


நாளை ஒரு மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டம் 5.30 மணிக்கு இடைநிறுத்தப் பட்டு, நாளை மறுதினம் 9 மணிக்கு ஆரம்பமாகி 5.30 மணிக்கு முடிவடையும். அதைத் தொடர்ந்து பரிசளிப்பு விழா நடைபெறும்.

கிரிக்கெட் சமரைத் தொடர்ந்து எதிர்வரும் 9ஆம் திகதி இரு கல்லூரியின் பழைய மாணவர்கள் மோதும் 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் ஆட்டம் நடைபெறவுள்ளது. (ற-23-400)



கிளிநொச்சி மகா வித்தியால அணியினர்.

### தும்பளை மேற்கு கிரிக்கெட் தொடர் காலிறுதியாட்ட முடிவுகள்



யாழ்ப்பாணம், ஜூன் 7

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உதவும் வகையில் XQX சமூக சேவைகள் அமைப்பால், தும்பளை மேற்கில் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுத் தொடரின் அரையிறுதிக்கு அல்வாய் நியூபவர், காமாட்சி ‘ஏ’ மற்றும் கழுகுகள் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

முதலாவது காலிறுதியாட்டத்தில், அல்வாய் நியூபவர் அணியும், மாலுசந்தி மைக்கல் அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூபவர் அணி சகல இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மைக்கல் விளையாட்டுக் கழகம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 39 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இரண்டாவது காலிறுதியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும், காமாட்சி ‘ஏ’ அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானமுருகன் அணி 10 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய காமாட்சி ‘ஏ’ அணி 3.2 பந்துப் பரிமாற்றங்களி இலக்கு இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் தீபஜோதி அணியும், கழுகுகள் அணியும் களமிறங்கின.

முதலில் துடுப்பெடுத்தாடிய தீபஜோதி அணி 9.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கழுகுகள் அணி 9.1 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது.

நான்காவது காலிறுதிப் போட்டிக்கு கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் என்பன தகுதி பெற்றுள்ளன. (ற)

### இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 7

வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களின் விவரம்:-

**பிற்பகல் 3.30 மணி**

உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகம் எதிர் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம்.

**பிற்பகல் 4.30 மணி**

வதிரிடைமன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக் கழகம். (ற-23)

### 19 வயதுப் பிரிவு பெண்கள் சதுரங்கம்

## பருத்தித்துறை மெதடிஸ் வடமாகாணச் சம்பியன்



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணி.

வலி.வடக்கு, ஜூன் 7

வடமாகாணக்கல்வித்திணைக்களத்தால், மாகாண கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் சதுரங்க சுற்றுப் போட்டிகளில், 19 வயதுப் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வடமாகாண சம்பியனாகத் தெரிவாகியது.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

அதில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 221/2 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், 22 புள்ளிகளைப் பெற்று அருணோதயக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், 21 1/2 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ற-86)



இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட அளவெட்டி அருணோதயா.

### நெடியகாடு இ.வி.க. உதைபந்துத் தொடர்

## இதுவரை வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள்:-

கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும், இமையாணன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. அதில் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அதேதினம் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகம் களமிறங்கியது. அதில் அல்வாய் பாரதி விளையாட்டுக்கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. அதில் மனோகரா விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அதேதினம் இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் திக்கம்இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றநிலையில், வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் யங்லயன்ஸ்விளையாட்டுக் கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் பொமர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழகம் களமிறங்கியது. அதில் பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அதேதினம் இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழகம் மோதியது. அதில் நக்கீரன் விளையாட்டுக் கழகம் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)



### 15 வயது ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டம்

## வவு. சுந்தரபுரம் அ.த.க. சம்பியனாகத் தெரிவு



சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை அணி

வலி.வடக்கு, ஜூன் 7

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாகாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான மேசைப்பந்தாட்டப் போட்டிகளில் 15 வயது ஆண்கள் பிரிவில் வவுனியா சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை சம்பியனாகத் தெரிவாகியது. யாழ். மத்திய கல்லூரி உள்ளக அரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியும், சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையும் மோதின. [illegible] டத்தில் சுந்தரபுரம் அ.த.க [illegible] வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.(ற-86)



யாழ்.மத்திய கல்லூரி அணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிக்குவாரா ஷில்பா ஷெட்டி

ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பாக ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் 3 வீரர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து, சூதாட்டத்தில் தொடர்புடைய தரகர்கள், அவர்களை இயக்கிய வி.ஐ.பி.க்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான ராஜ் குந்த்ராவிடம் டெல்லி பொலிஸார் நேற்று விசாரணை நடத்தினர். அப்போது ஐ.பி.எல். தொடரில் பந்தயம் கட்டியதை ராஜ் குந்த்ரா ஒப்புக்கொண்டுள்ளார் என்று தெரியவருகின்றது.

இதுபற்றி டில்லி பொலிஸ் ஆணையாளர் கூறுகையில்,

''ராஜ் குந்த்ரா தனது சொந்த அணி மீது தரகர்கள் மூலம் பந்தயம் கட்டியதை ஒப்புக் கொண்டிருக்கிறார். பந்தயம் கட்டியதால் பெருமளவு பணத்தை அவர் இழந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் தனது பங்காளர் உமேஷ் கோயங்கா மூலம் சூதாட்டத்தில் பணத்தை வைத்துள்ளார்'' என்றார்.

கோயங்காவிடம் கடந்த சில நாள்களாக பொலிஸார் விசாரணை நடத்தியபோது, குந்த்ராவின் சூதாட்டத்தை அம்பலப்படுத்தியுள்ளார். ஆனால், இந்த குற்றச்சாட்டை குந்த்ராவின் மனைவியும், ராஜஸ்தான் அணியின் மற்றொரு உரிமையாளருமான ஷில்பா ஷெட்டி மறுத்துள்ளார்.

''எங்கள் அணியின் உரிமையாளர்கள் எந்த தவறும் செய்யவில்லை. இதில் உள்ள உண்மைகளைக் வெளிக் கொண்டு வருவதற்கு பொலிஸாரின் விசாரணைக்கு நாங்கள் உதவி செய்வோம்'' என்று ஷில்பா ஷெட்டி கூறியுள்ளார்.

அதேவேளை, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக ஐ.பி.எல். விளையாட்டுகளில் பந்தயம் கட்டிய விவரத்தை குந்த்ரா தெரிவித்திருப்பதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அணியில் இணைந்துள்ள எந்த நபராக இருந்தாலும் போட்டிக்கு பந்தயம் கட்டியமை கண்டுபிடிக்கப்பட்டால், பி.சி.சி.ஐ. விதிமுறைகளின்படி, அவர் 2 முதல் 5 ஆண்டுகள் வரை இடைநிறுத்தப்பட வேண்டும். அதேவேளை, ஐ.பி.எல். அணி ஒன்றின் உரிமையாளர் குறித்த தவறை செய்தால், அந்த அணி உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



# உலகக் கிண்ணத்துக்கு ஜப்பான் தகுதி

அடுத்த ஆண்டு பிரேஸிலில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு ஜப்பான் தகுதி பெற்றுள்ளது.

ஆஸ்திரேலிய அணிக்கெதிரான தகுதிகாண் போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொண்டதன் மூலம் ஜப்பான் இந்த வாய்ப்பைப் பெற்றுக்கொண்டது.

தொடர்ச்சியாக ஐந்தாவது முறையாகவும் ஆசியப் பிராந்தியத்தில் இருந்து ஜப்பான் அணி உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தகுதி பெறுவது மாத்திரம் போதுமானது அல்ல என்று கூறியுள்ள ஜப்பான் கால்பந்தாட்ட அணியின் முகாமையாளர், பிரேசிலில் சிறப்பாக செயற்பட எதிர்பார்த்துள்ளோம் என்றும் கூறியுள்ளார். (ற)

# இங்கிலாந்துக்கு ஆறுதல் வெற்றி

## தொடர் நியூஸிலாந்துக்கு

இங்கிலாந்துக்கு எதிரான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தொடரை 2:1 என்ற ஆட்டக் கணக்கில் நியூஸிலாந்து கைப்பற்றியது.

மூன்றாவது ஆட்டத்தில் 34 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றிபெற்றபோதிலும் இந்தத் தொடர் நியூஸிலாந்து வசமாகியுள்ளது.

நொட்டிங்ஹேமில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 288 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 46.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 50 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றது. (ற)

# ஏழாவது சம்பியன் கிண்ணத் தொடரில் முதலாவது வெற்றியைப் பெற்றது இந்தியா


லண்டன், ஜூன் 07

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதாவது ஆட்டத்தில் ஷிகிர் தவானின் அதிரடி கன்னிச் சதத்தின் உதவியுடன் 26 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியைப் பதிவு செய்து கொண்டது.

ஐ.சி.சியின் 7 ஆவது மற்றும் கடைசியுமான சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நேற்று ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள இந்த் போட்டியில் நடப்புச் சம்பியனான ஆஸ்திரேலியா உட்பட தரவரிசையில் முதல் எட்டு இடங்களைப் பெற்ற அணிகள் இரு பிரிவுகளாகப் பங்குபற்றுகின்றன.

இதில் 'பி' பிரிவுக்குகான முதலாவது ஆட்டத்தில் இந்தியாவும் தென்னாபிரிக்காவும் மோதின. நேற்று கார்டிப் நகரில் பகலிரவு ஆட்டமாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய தென்னாபிரிக்க அணித் தலைவர் டி. வில்லியர்ஸ் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனை அடுத்து இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக ரோகித் சர்மா மற்றும் ஷிகர் தவான் ஆகியோர் களமிறங்கினர். ஆரம்பம் மிகவும் நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடிய இவ் ஆரம்ப ஜோடி இந்திய



அணிக்கு நல்ல தொரு அடித்தளத்தை இட்டுக் கொடுத்தனர்.

இந்திய அணி 127 இலக்குகளைப் பெற்ற நிலையில் அரைச்சதம் கடந்து நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய ரோகித்சர்மா 65 ஓட்டங்களுடன் மக்லரினால் ஆட்டமிழக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து களம் புகுந்த விராட் ஹோக்லி தவானுடன் இணைந்து இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். இருந்த போதும் 31 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹோக்லி டுமினியின் பந்து வீச்சில் பன்திகோவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

கிளைன் வெல்ட் பந்து வீச்சில் ஹற்றிக் பவுண்டரி விளாசி தவான் 94 பந்துகளில் ஒரு சிக்சர் 12 பவுண்டரிகள் உட்பட 114 ஓட்டங்ளைப் பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்து வெளியேறினார். சர்வதேச ஒரு நாள் போட்டியில் இவர் பெற்ற கன்னிச் சதம் இதுவாகும். தவான் ஆட்ட மிழந்து வெளியேறும் போது இந்திய அணி 227 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனைத் அடுத்து பின் வந்த வீரர்கள் சோபிக்காத போதும் ரவீந்திர ஜடேஜா அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 29 பந்துகளைச் சந்தத்து 47 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதியில் 50 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 331 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அவ்வணியின் துடுப்பாட்டத்தில் [illegible] [illegible] 14 ஓட்டங்களையும் விராட் ஹோக்லி 31 ஓட்டங்களையும் டோனி 27 ஓட்டங்களையும் ரவீந்திர ஜடேஜா ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார்.

தென்னாபிரிக்காவின் பந்து வீச்சு சார்பாக மக்லரின் 3 இலக்குகளையும் ரெசோத் ஷேபி 2 இலக்குகளையும் டுமினி ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இதனை அடுத்து 332 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான அம்லா, இங்ரம் ஆகியோர் ஏமாற்றம் அளித்தனர். அணி 13 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இங்ரமும் 31 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அம்லாவும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

அடுத்து களமிறங்கிய டீவில்லியர்ஸ், பீற்றசன் ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து நிதானமாக துடுப்பெடுத்தாடி சரிவிலிருந்து மீட்டெடுத்தனர். இருவரும் அதிக பட்சமாக 120 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்த போது பிரிக்கப்பட்டனர். 68 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பீற்றசன் 68 ஓட்டங்களுடன் ஜடேஜவால் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க செய்யப் பட்டார். தொடர்ந்து களமிறங்கிய டுமினி வெறும் 14 ஓட்டங்களுடன் வெளியேறிய சிறிது நேரத்தில் 184 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது வில்லியர்ஸ்சும் 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். பின் வந்த வீரர்கள் சொதப்பிய போதும் மட்லரின் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்காக தனியாக நின்று போராடினார். இந்திய அணியின் பந்து வீச்சுக்களை புரட்டியெடுத்து பந்துகளை எல்லைக் கோடுகளை தாண்டச் செய் தார். எவ்வளவு தான் போராடிய போம் இந்திய அணியின் வெற்றி இலக்கை தடுத்து நிறுத்த முடியவில்லை. இறுதியில் 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 305 ஓட்டங்களைப் பெற்று வெறும் 26 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி தோல்வியைத் தழுவிக் கொண்டது.

இறுதிவரை அதிரடியாக துடுப்பெடுத்தாடிய மட்லரின் ஆட்டமிழக்காது 61 பந்துகளில் 71 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்

இந்திய அணியின் பந்து வீச்சில் உமேஸ் யாதவ், புவனேஸ்வர் குமார், இஷாந் சர்மா மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக சதமடித்த ஷகிர் தவான் தெரிவு செய்யப்பட்டார். (400)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## கடந்த கசப்பான வரலாற்றுக்குள் மீண்டும் நுழைய எத்தனிக்காதீர்

''மீண்டும் பழைய வரலாற்றுக்குச் செல்லவே ஒவ்வொரு முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. அதனைவிடுத்து பல்லின மக்கள் கொண்ட தேசத்தை பரந்த மனப்பாங்குடன் ஆட்சி புரிய அரசு முன்வர வேண்டும்'' என்று ஆயர் மேலும் குறிப்பிட்டார்.

மாகாணங்களுக்கு உள்ள குறைந்தபட்ச அதிகாரங்களையும் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை மூலம் இல்லாதொழிக்கும் வகையிலான சட்ட வரைவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களை இங்கிருந்து விரட்டுகின்ற செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் கடந்தகால வரலாறுகளுக்கு மீளச் செல்ல எத்தனிக்கின்றனர்.

இலங்கையில் பல மொழி பேசுவோர், பல மதங்களைப் பின்பற்றுவோர், பல கலாசாரங்களைப் பின்பற்றுவோர் வாழ்கின்றனர். இங்கு தமது கட்சி நலன்களுக்கு அப்பால் பல்வகைமை கொண்ட நாட்டை ஆளும் எண்ணத்துடன் ஆட்சியாளர்கள் செயற்பட வேண்டும்.

குறுகிய மனோபாவங்களும், எண்ணங்களும் கொண்டவர்களால் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. மாறாகக் கடந்தகாலக் கசப்பான வரலாறுகளுக்குச் செல்ல முடியும்.

எனவே பல்வகைமை கொண்ட நாட்டை ஆட்சி செய்பவர் தேசத்தின் தந்தையைப் போன்று செயற்பட வேண்டும்-என்றார். (த-5)

## இந்திய மீனவர் 49 பேர் கைது

மன்னாரில் கைதான இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 24 மீனவர்களையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட பதில் நீதவான் ஏ.கயஸ் பல்டானோ நேற்று உத்தரவிட்டார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 24 மீனவர்கள் 6 இழுவைப்படகுகளின் நேற்று முன்தினம் மாலை இலங்கைக் கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் குறித்த 24 மீனவர்களும் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். தலைமன்னார் பொலிஸார் அவர்களை நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், குறித்த மீனவர்களை இம்மாதம் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை,நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 25 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டதுடன் வழக்கை யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தியுள்ளார்.

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு நெடுந்தீவுக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் யாழ். மாவட்ட கடற்றொழில்,நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ். மாவட்ட கடற்றொழில்,நீரியல் வளத்துறை திணைக்களம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்திய மீனவர்கள் 25 பேரையும் முன்னிலைப்படுத்திய வேளையில், ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.மகேந்திரராஜா எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், அன்றைய தினமே யாழ். மேல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உத்தரவிட்டார். (த-14-12)

## மரண அறிவித்தல்



### திருமதி நடராஜா உமாமகேஸ்வரி

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா விக்ரோரியாவை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா உமாமகேஸ்வரி (04.06.2013) செவ்வாய்க்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் சிவதர்சினி (Australia), தெய்வதர்சினி (Australia) ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வேந்திரா(Australia)வின் அன்பு மாமியாரும் சத்தியானந்தா(U.S.A)வின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, பரமேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி சபாரத்தினநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஞானபூரணம், திருமகள், செல்வநாயகம், செல்லத்துரை மற்றும் இளையதம்பி ஆகியோரின் மைத்துனியும், சிவானந்தபவானி, சதானந்தபவானி (Swiss), கிருபானந்தசிவம் (Canada), உருத்திரானந்தசிவம் (Canada), மனோகரன் (Swiss), சுகுணா (Germany), சோதிபாலன் (Germany), சோதீஸ்வரி (Germany) ஆகியோரின் அன்புச் சிறியதாயும் ய.ரிஷானியின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2013) சனிக்கிழமை விக்ரோரியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கவிதா யசோகாந்தன் (பேர்த்தி)
'சிவதர்சனம்',
கே.கே.எஸ். வீதி, இணுவில் மேற்கு.
(38046)

## இலங்கையிடம் பொறுப்புக் கூறலை வலியுறுத்தியவர் ஐ.நா.தூதரானார்

ஏற்பட்டுள்ளது.

இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை பொறுப்புக்கூற வேண்டும் என்ற நிலைப்பாட்டை அமெரிக்கா எடுப்பதற்குக் காரணமாக இருந்தவர்களுள் ஒருவரான மூத்த இராஜதந்திரி சமந்தா பவர் ஐ.நாவுக்கான அமெரிக்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் மாளிகையின் தேசிய பாதுகாப்பு அதிகாரியாக உள்ள சமந்தா பவர், அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையில் முக்கிய தீர்மானங்களை எடுத்து வருபவராக உள்ளார்.

இதேவேளை, ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதராக கடமையாற்றும் சூசன்ரைஸ், ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

ஐ.நாவுக்கான அமெரிக்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள சமந்தா பவர் ஒரு முன்னாள் ஊடகவியலாளர். பெண்ணிய இனப்படுகொலைகளைத் தடுக்க அமெரிக்கா தவறியது எனக் குற்றஞ்சாட்டி இவரால் எழுதப்பட்ட நூலுக்கு சர்வதேச விருதும் கிடைத்துள்ளது.

ஐ.நாவுக்கான தூதுவராகச் சமந்தா பவர் நியமிக்கப்படவுள்ள நிலையில் சிரியா உள்ளிட்ட விவகாரங்களிலும் மனித உரிமை விவகாரங்களிலும் அமெரிக்காவின் நிலைப்பாடு இறுக்கமடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

## அத்துமீறி குடியேறிய சிங்களவரும் வாக்காளராகப் பதிய விண்ணப்பம்

யல் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதன்போது நாவற்குழியில் குடியேறியுள்ள சிங்கள மக்களும் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யுமாறு கோரி கிராம சேவையாளர்களிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பித்துள்ளனர்.

நாவற்குழியில் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்கள மக்களுக்குக் குடும்ப அட்டை என்பன வழங்கப்படவில்லை. அத்துடன் தொடர்ச்சியாக அந்தப் பகுதியில் சிங்கள மக்கள் வசிக்காத நிலையிலேயே அவர்கள் இவ்வாறு வாக்காளர் பதிவுக்கு விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## மாகாணசபை சட்டவரைவு எதிர்ப்பினால் ஒத்திவைப்பு

களின் அதிகாரங்களில் திருத்தங்கள் செய்யப்படுவதாகத் தெரிவித்து, அது தொடர்பில் நீண்ட விளக்கமொன்றையும் வழங்கியதாக அறியமுடிகின்றது.

இதனையடுத்து, மாகாணசபைகளின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு எடுக்கப்படும் அரசின் அவசர முயற்சிகளுக்கு அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, ரவூப் ஹக்கீம் ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர்.

எவ்வாறாயினும், அவசர அவசரமாக அரசு இப்படியான திருத்தங்களைச் செய்வது மாகாணசபைகளைக் கலைத்துவிடுவதற்கு ஒப்பானதென இங்கு கண்டனம் தெரிவித்திருக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்றத்த தெரிவுக்குழு ஒன்றை அமைத்தாவது முதலில் ஆராய்ந்திருக்கவேண்டுமெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

''அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் 153/ஜீ என்ற சரத்தை திருத்துவது என்பது மாகாணசபைகளை இல்லாமல் செய்வதற்கான முன்னோடியாகவே கருதவேண்டியிருக்கிறது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது பேராளர் மாநாட்டில் 13ஆவது திருத்தத்தின் எந்த அதிகாரங்களையும் குறைக்கும் விடயங்களுக்கு யாரும் ஆதரவை வழங்க முடியாதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே, எனது கட்சியுடன் நான் இதனைப் பேசவேண்டும். இதில் உடன்படுவதில் கொள்கை அடிப்படையிலும் எமக்குப் பிரச்சினை உள்ளது. எனவே, இதன் அவதானிப்புகளைத் தெரிவிக்க கால அவகாசம் வேண்டும்'' என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியதையடுத்து, இதனை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய கூட்டத்தின்போது நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், மாகாணசபைகளின் அதிகாரம் குறித்து அமைச்சர் ரவூப் ஹக்கீமும் சில நிமிடங்கள் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டதாகவும் அறியமுடிந்தது. (த-சி)

## அமைதியான வழியில் தீர்வு காணத் தவறின்...

விடுதலைப் புலிகளை நாம் உருவாக்கவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறித்து அந்த திருத்தச் சட்டத்தையே அர்த்தமற்றதாக்குவதற்கு எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும், பாரதூரமான எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும்.

தமிழ் மக்கள் வன்முறைக்குத் திரும்ப விரும்பவில்லை. இருப்பினும் இந்த அரசு இனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணத் தவறினால், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதைச் சொல்ல முடியாது-என்றார். (த-5)

## வடக்குத் தேர்தலில் வெற்றிபெற வாக்குத் திரட்டும் முயற்சியில் அரசு

டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற வாக்காளர்களைப் பதிவுசெய்தல், (விசேட ஏற்பாடுகள்) சட்டவரைவு தொடர்பில் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குறித்த அவசர சட்டவரைவைக் கொண்டுவருவதற்கான காரணம் என்ன? இந்தச் சட்டவரைவு தொடர்பில் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும். ஆனால், விவாதம் நடைபெறும் திகதியில்தான் எமக்கு சட்டவரைவு கிடைத்தது.

இதனால் இதிலுள்ள குறைநிறைகளை ஆராய்வதற்குக் கால அவகாசம் போதாது. இவ்விவகாரம் சம்பந்தமாக ஒருவார காலமாவது விவாதித்திருக்கலாம். தேர்தல் ஆணையாளரிடம் எமக்குள்ள சந்தேகங்கள் தொடர்பில் விளக்கத்தைக் கோரியிருக்கலாம். ஆனால், அவசர அவசரமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏன் இந்த அவசரம் என்பதை அரசிடம் கேட்க விரும்புகின்றேன்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் புத்தளத்தில் மட்டுமல்ல, நாட்டின் சகல பகுதிகளிலும் வாழ்கின்றனர். நீர்கொழும்பில்கூட இடம்பெயர்ந்தவர்கள் வாழ்கின்றார்கள். எனவே, புத்தளம், நீர்கொழும்பு ஆகிய இடங்களிலுள்ளவர்கள் வாக்கை எங்கு சென்று வாக்களிப்பது என்ற சந்தேகமும் எமக்கு உள்ளது. எந்தப் பிரதேசத்தை அடிப்படையாகக்கொண்டு குறித்த சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன? இடம்பெயர்ந்தவர்கள் பலர் வெளிநாடுகளிலும் வாழ்கின்றனர் அல்லவா?

அதேவேளை, தற்போது போர் முடிவடைந்துவிட்டது. பூர்வீக இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் அங்கு குடியமர்த்தப்படவேண்டும். புத்தளத்தில் உள்ளவர்கள், அவர்கள் முன்பு இருந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டனரா? மீள்குடியேற்றப் பணிகள் முழுமையாக முடிவடைந்துவிட்டதா?

இவ்வாறான பணிகளை முழுமையாகச் செய்துமுடிக்காது வாக்காளர் பட்டியலில் அவசரமாகத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசுக்கு ஏற்பட்டுள்ள அவசரம்தான் என்ன என்ற கேள்வியை நான் மீண்டும் கேட்க விரும்புகின்றேன். இவ்வாறான செயற்பாடுகளானது சர்வதேசத்துக்குத் தவறான தகவலையே கொண்டுசெல்லும். இடம்பெயர்ந்த மக்கள் முன்பு வாழ்ந்த வீடுகள் இருக்கின்றனவா, காணிகள் இருக்கின்றனவா என்பதைத் தேடிப்பார்த்தீர்களா? அப்படியானால் எந்த அடிப்படையில் இச் செயலை மேற்கொள்கின்றீர்கள்?

வடக்குத் தேர்தல் நடைபெறும் என அரச தரப்பால் கூறப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டா குறித்த சட்டவரைவில் அவசரமாகத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன?

குறிப்பாகத் தேர்தலொன்று நடைபெறுமாக இருந்தால் தேர்தல், பொலிஸ் ஆணைக்குழுக்கள் நிறுவப்படவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம். புதிய சட்டவரைவின் பிரகாரம் எத்தனைபேரை அரசு வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளது? வடக்குத் தேர்தலில் வெற்றி பெறுவதற்குத் தேவையான வாக்குகளைத் திரட்டுவதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

வவுனியாவில் புதிதாகக் கிராமங்கள் உருவாக்கப்படுகின்றன. பிரபாகரனுடன் போர் முடிவடைந்துவிட்டாலும் மற்றுமொரு போரை அரசு நிர்மாணிக்கப்பார்க்கின்றது என்ற தகவலையே இவ்வாறான செயற்பாடுகள் உலகுக்கு எடுத்துச் சொல்லும் - என்றார். (த-சி)

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.
2015 A/L CHEMISTRY
புதிய பிரிவு ஆரம்பம்
08.06.2013 சனி முதல்
பிணைப்புக்கள்
Batch i -Sat, Sun - 9.30 - 11.00 a.m
Batch ii -Sat, Sun - 4.30 - 6.00 p.m
BASIC mon - 3.30-5.30p.m
wed - 3.30 - 4.30p.m

விசேட கருத்தரங்கு
Jun 16ல் நடைபெறவுள்ள B.Ed. (கல்விமாணி) போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு
காலம்: 09.06.2013 ஞாயிறு காலை: 09.00am -04.30pm
விரிவுரையாளர் P.உமாசங்கர்-P.கமல்தாசன்
மேலதிக நேர அட்டவணை அலுவலகத்தில்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி யாழ்.நகர்.
0774696695

போட்டிப் பரீட்சை கருத்தரங்குகள்
✱மத்திய வங்கி முகாமைத்துவ உதவியாளர் சனி:9.00-4.00 வரை
✱கல்விமாணி(B.Ed) சனி,ஞாயிறு 10.00-4.00 வரை
✱வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் சனி ஒரு மணி ஞாயிறு 10 -4 வரை
✱ SLEAS பிரிவு I ஞாயிறு ஒரு மணி பிரிவுII புதன் 4.30 மணி
T.P 0754164564
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்சல் வங்கி அருகில்)
(சி/9623 )(6.3.7)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே உயரமான ஏஞ்சல் நீர்வீழ்ச்சி

அனைவருக்கும் அமெரிக்கா - கனடா எல்லையில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சி பற்றி தெரிந்திருக்கும், பலர் அதைத்தான் உயரமான நீர்வீழ்ச்சியாக கருதிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், உண்மையில் உயரமான நீர் வீழ்ச்சி தென் அமெரிக்க கண்டத்திலுள்ள வெனிசுலா நாட்டிலுள்ள ஏஞ்சல் நீர்வீழ்ச்சியாகும்! சுமார் 979 மீற்றர் உயரமுள்ள இந்த நீர்வீச்சியில் இருந்து ஒரு துளி தரையை அடைய 14 விநாடிகள் எடுக்கின்றது. இந்த நீர் வீழ்ச்சி Tepui (தெபுய்) எனும் செங்குத்து மலைச்சரிவினூடாக பாய்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த நீர்வீழ்ச்சி நீரைப்பாய்ச்சி வருகிறது. ஆரம்பத்தில் இந்த நீர்வீழ்ச்சியை அவ் இடத்தை அண்டிய செவ்விந்தியர்கள் Churun Meru ( சுருன் மேரு) என்று அழைத்தார்கள். அப்படியென்றால் ஏன் ஏஞ்சல் நீர்வீழ்ச்சி என்கிறார்கள் என யோசிக்கிறீர்களா? 1935 ஆம் ஆண்டு, அமெரிக்க விமானியான ஜிம்மி ஏஞ்சல் என்பவர் தங்கத்தை தேடி மலைகளின் மேல் பறந்து திரிந்த போது இந்த நீர்வீழ்ச்சியைக்கண்டு அதை உலகின் பார்வைக்கு கொண்டுவந்தார். அதனால் ஏஞ்சல் என்ற பெயருடன் அவரின் நினைவாக இந்த நீர்வீழ்ச்சி இன்றுவரை அழைக்கப்படுகின்றது.






## தழும்புகளை நீக்கும் தக்காளி

ஒரு சிலருக்கு பிறக்கும் போதே முகத்திலும், உடலிலும் தழும்புகள், மச்சம், மறு போன்றவை அமைந்திருக்கும். சிலருக்கு சின்னதாய் அழகாய் இருந்தாலும் ஒரு சிலருக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும். இயற்கை முறையிலேயே இந்தத் தழும்பை போக்க ஆலோசனை கூறியுள்ளனர் அழகியல் நிபுணர்கள்.

**ஒலிவ் எண்ணெய்**

ஒலிவ் எண்ணெய்க்கு சருமத்தை மென்மையாக்கும் தன்மை உள்ளது. ஒலிவ் எண்ணெயைக் கொண்டு தினசரி 10 நிமிடங்கள் தழும்பு உள்ள பகுதியில் மசாஜ் செய்யவும். தழும்பு படிப்படியாக மறையும். சருமம் மென்மையாகும்.

**ஐஸ் கட்டி ஒத்தடம்**

ஐஸ் கட்டியை மெல்லிய துணியில் கட்டி தழும்பு உள்ள பகுதிகளில் ஒத்தடம் கொடுக்கலாம். இதனால் இறுக்கமாக உள்ள தசைகள் இளகி மென்மையாகும். ஐஸ் கியூப் கொண்டு தழும்பு உள்ள இடத்தில் மென்மையாக 5 நிமிடங்கள் தேய்க்கலாம். இதனால் தழும்புகள் நிறம் மாறும்.

**வைட்டமின் இ**

சருமத்தில் எந்த பகுதியில் காயமோ, தழும்போ ஏற்பட்டால் விட்டமின் இ சிறந்த மருந்தாக செயல்படுகிறது. விட்டமின் இ அடங்கிய ஒரேஞ்ச் எண்ணெய் பயன்படுத்தி உடம்பில் தழும்பு உள்ள இடத்தில் தேய்க்கலாம். அதேபோல் விட்டமின் இ அடங்கிய உணவுகளை உண்பதன் மூலம் பிறப்புத் தழும்புகள் படிப்படியாக நிறம் மாறுவதோடு மறைந்துவிடும். எலுமிச்சைச்சாறு, தக்காளி சாறு ஆகியன சிறந்த இயற்கை மருந்தாகச் செயல்படுகின்றன. எலுமிச்சை சாற்றினை தழும்பு உள்ள பகுதியில் நன்கு தேய்த்து ஊறவைத்து பின்னர் குளிர்ந்த நீரில் கழுவ தழும்பு நிறம் மாறும்.

தக்காளிச் சாறு எடுத்து அதனைத் தழும்பு உள்ள பகுதியில் தேய்த்து ஊறவைக்கவும். பின்னர் குளிர்ந்த நீரில் முகத்தை கழுவவேண்டும். இதனை வாரம் மூன்று முறை செய்துவர பயன் தெரியும். ரசாயன கலப்பு உள்ள விலை அதிகமான பொருள்களை உபயோகித்து தழும்புகளை மாற்ற முயற்சி செய்வதை விட இயற்கை பொருள்களைப் பயன்படுத்தி நிரந்தரமாக தழும்புகளை குணப்படுத்தலாம். இதனால் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படாது என்கின்றனர் அழகியல் நிபுணர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07/06/2013

பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்
தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட தெய்வேந்திரமுதலி வழிவந்த

# திருமதி ஸ்ரீஸ்கந்தராசா செல்வரஞ்சிதராணி

(ராணி அக்கா, ராணி அன்ரி ) அவர்களின்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
02★01★1940

உதிர்வு
20★05★2012

திதி: வைகாசி அமாவாசை - 08.06.2013

அன்புக்கோர் மனைவியாய் அன்னையாய்
அறுசுவை உணவுதந்து பொறுமையோடு பணிசெய்து
கனிவோடும் துணிவோடும் இல்லறம் செய்து
நல்லறம் காட்டியவளே வீடு தேடிவரும் உறவினர் நண்பர்கள்
பசிக்குது என்றுவரும் ஏழைமக்கள் எல்லோருக்கும்
மனம்விரும்பி உணவு அளித்து உயர்ந்தவளே!
ஒருசில மணித்தியாலங்களில் என்னைத்
தனிமரமாய் தவிக்கவிட்டு சென்றதேனோ? என்னவளே!
தினமும் தனிமையில் இருக்கும்வேளை
உன் நினைவில் தவிக்கிறேனடி என் அன்புமனம் ஆறவில்லை
கண்ணீரும் ஓயவில்லை சொல்லியழ வார்த்தையில்லை உன்னோடு
வாழ்ந்த காலங்களை நினைந்து என்னுள் கலங்குகிறேன்
நான் உன்னைச் சேரும்வரை என் கண்கள் உறங்காது உன்னைத்தேடும்
வானில் நின்று தேற்றிடுவாய் .

**தினம் உன் நினைவுகளோடு வாழும் அன்புக்கணவர்.**

காலங்கள் எல்லாம் வாழ்வாயெனக் காத்திருக்க...
காலன் உன்னை அழைத்தது என்ன-
கண்ணீரில் எம்மைவிட்டு ஆண்டு ஒன்று சென்றாலும் நீங்காது அம்மா.

**உன் நினைவுகளில் அன்புச் செல்வங்கள்**

திருமதி ஸ்ரீஸ்கந்தராசா செல்வரஞ்சிதராணி அவர்களின் ஆத்ம சாந்திவேண்டி நாளை (08.06.2013) சனிக்கிழமைஏழாலை வசந்தபுரம் வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் விஷேட பூசையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் அன்னதானத்திலும் அனைவரையும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம். புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர், ஏழாலை வசந்தபுரம் வசந்த நாகபூசணி அம்பாள் பாதம் சேர்ந்திட உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**உங்கள் பிரிவால் துயருறும்:**

**அருமைக் கணவர், அருமை பிள்ளைகள், அருமை மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள்.**

| | |
|---|---|
| ஸ்ரீஸ்கந்தராசா | (கணவர் - கனடா - 416 298 6598), |
| செல்வக்காந்தன் | (மகன் - சுவிஸ் - 414 455 90024), |
| செல்வநந்தினி | (மகள் - கனடா - 416 298 6598), |
| ராஜகாந்தன் | (மகன் - சுவீடன் - 468 5317 9088), |
| ஸ்ரீறஜினி | (மகள் - சுவிஸ் - 4171 755 0986). |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org